Registered as a Newspaper in Sri Lanka
விலை ரூபா: 15.00

# வலம்புரி

Valampurii
பக்கங்கள்: இருபது
சங்கு 2 வள்ளுவர் ஆண்டு 2042 ஆனி 16 வெள்ளிக்கிழமை (01.07.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 194

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

# இனப்பிரச்சினைக்கான தீர்வை பாராளுமன்ற குழுவே வழங்கும்

## அரசாங்கம் திட்டவட்டம்

(கொழும்பு)

னப்பிரச்சினைக்கு காத்திரமானதொரு தீர்வை பாராளு றத் தெரிவுக்குழுவினாலேயே வழங்க முடியும் என பெற் றோலியத்துறை அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த கூறியுள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று பிற்பகல் நடை பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார். (20ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் பட்டப்பகலில் ஆயுத முனையில் வங்கிக் கொள்ளை

### பல இலட்சம் பணம், நகைகள் அபேஸ்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புப் புறநகர் பகுதியான திமிலைத்தீவு பழைய பால் பண்ணை வீதியில் அமைந்துள்ள மக்கள் வங்கிக்குள் புகுந்த ஆயுதம் தாங்கிய நபர்கள் 37 இலட்சம் ரூபாய் பணம் உட்பட பெருமளவு நகைகளையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். கொள்ளையிடப்பட்ட நகைகளின் பெறுமதி இன்னும் மதிப்பிடப்படவில்லை.

நேற்று வியாழக்கிழமை பிற்பகல் 12.45 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. மக்கள் வங்கியின் இலட்சினை மற்றும் பெயர்ப்பலகை பொருத்தப்பட்ட வான் ஒன்றில் வந்த ரி 56 ரக துப்பாக்கி தாங்கிய முகமூடி அணிந்த 05 பேர் கொண்ட குழுவே இக் (20ஆம் பக்கம் பார்க்க)




தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வலியுறுத்தி கொழும் பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்களைப் படத்தில் காணலாம்.

## தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை கோரி ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி கொழும்பு புறக்கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக நேற்று வியாழக்கிழமை மாலை ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

நாம் இலங்கையர் அமைப்பின் ஏற்பாட்டிலும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான இயக்கத் தின் ஏற்பாட்டிலும் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட தமிழ் அரசியல் கைதிகளின் உறவினர்கள் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் உறவுகளை விடுதலை செய்யுமாறு அழுதவண்ணம் மன்றாடி கோரிக்கை விடுத் தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த நாம் இலங்கையர் அமைப்பின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் உதுல் பிரேமரட்ண, (20ஆம்பக்கம்பார்க்க)

## நயினை அம்மனுக்கு இன்று கொடி



(யாழ்ப்பாணம்)

நயினை நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று (20ஆம் பக்கம் பார்க்க)

## தேவையற்ற அதிகாரத்தை தமிழ் மக்கள் கோரக்கூடாது

### சரத் பொன்சேகா தெரிவிப்பு



(கொழும்பு)

தமிழர்கள் தேவையற்ற அதிகாரங்களைக் கோராமல் சிங்களவர்களுடன் இணைந்து வாழப்பழக வேண்டும் என்று சரத் பொன்சேகா வலியுறுத்தியுள்ளார்.

சரத் பொன்சேகாவின் பாராளுமன்ற உறுப்புரிமை பறிக்கப்பட்டதற்கு எதிரான வழக்கு விசாரணையில் சமுகமளிப்பதற்காக நேற்று முன் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மகிந்தவின் கூற்றுக்கு இந்தியாவே பதிலளிக்கவேண்டும்

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் அவரது நிலைப்பாடு குறித்து இந்தியாவே பதிலளிக்கவேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

உள்நாட்டின் தேசியப் பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர்கள் மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் பிரதானிகளுடன் அலரி மாளிகையில் இடம்பெற்ற சந்திப்பின் போது அரசியல் தீர்வு விவகாரம் குறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெளியிட்டிருந்த கருத்துக்கள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

/இலங்கையின் இனப் பிரச்சினைக்கான நிரந்த அரசியல் தீர்வு மற்றும் தமிழ் (20ஆம்பக்கம்பார்க்க)

1961 - 2011
பொன்விழாக் காணும்
மக்கள் வங்கியை
வலம்புரி
உளமார வாழ்த்துகின்றது
பொன்விழா

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## யாழ்.மாநகரசபையில் நேற்று குழப்பம்

# த.தே.கூ. உறுப்பினர்களிடையே மோதல்;

# பரஞ்சோதி மீது தண்ணீர் போத்தல் வீச்சு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையில் எதிர்தரப்பு உறுப்பினர்களிடையே ஏற்பட்ட மோதலால் நேற்று சபை நடவடிக்கைகள் குழப்பமடைந்தன.

யாழ்.மாநகர சபையின் இவ்வருடத்திற்கான 6ஆவது மாதாந்த பொதுக் கூட்டம் நேற்று சபையின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

கூட்டம் ஆரம்பித்து முதல்வரின் ஆரம்ப உரையைத் தொடர்ந்து எதிர்தரப்பின் உறுப்பினர் ரெமிடியஸ் பேசுவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டது.

முதல்வரினால் எதிர்தரப்பின் தலைவர் என ரெமிடியஸ் அழைக்கப்பட்டதற்கு ஏனைய எதிர்தரப்பு உறுப்பினர்கள் கடுமையாக தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கிய நாடாளுமன்ற உறுப்பினரான மாவை சேனாதி ராஜாவினால் தான் தமக்கு இப்பதவி வழங்கப்பட்டதாகவும்,

யாழ். மாநகரசபையின் எதிர்தரப்பு உறுப்பினர்களுக்கு தாமே தலைவர் என்றும் ரெமிடியஸ் தெரிவித்தார். இதனை ஏற்க மறுத்த அக்கட்சியின் உறுப்பினர் பரஞ்சோதி வாக்கு வாதத்தில் ஈடுபட்டார்.

எதிர்தரப்பு உறுப்பினர்கள் இவ்வாறு வாக்கு வாதத்தில் ஈடுபடுவதை முதல்வர் உட்பட ஆளும் தரப்பு உறுப்பினர்கள் வேடிக்கை பார்த்தவாறு இருந்தனர்.

தமது கட்சி உறுப்பினர்கள் வாக்குவாதத்தில் ஈடுபடுவதை நிறுத்துவதற்காக உறுப்பினர் விந்தன் செயற்பட்ட போதும் அது பலனளிக்கவில்லை.

அவதூறானா வார்த்தைப் பிரயோகம் தொடர்ந்து இடம்பெற்றவேளை உறுப்பினர் ரெமிடியஸ் தண்ணீர்ப் போத்தல் ஒன்றை எடுத்து பரஞ்சோதி மீது வீசினார். இந்த தண்ணீர்ப் போத்தல் வீச்சிலிருந்து உறுப்பினர் பரஞ்சோதி மயிரிழையில் தப்பித்துக் கொண்டார்.

இந்தச் சம்பவத்தையடுத்து உறுப்பினர் பரஞ்சோதியால் யாழ். பொலிஸ் நிலையத்தில் ரெமிடியஸுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது. இருப்பினும் இறுதியில் உறுப்பினர் ரெமிடியஸ் சபையில் தாம் இவ்வாறு நடந்து கொண்டதற்கு மன்னிப்புக் கோருவதாக தெரிவித்தார். (எ-6)

## புதிய கற்கை நெறிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தொழிற்பயிற்சியில் முதல்தர தேசிய தர சான்றிதழை வழங்கும் இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபை யாழ்ப்பாணம் தொழில் பயிற்சி நிலையத்தில் தேசிய சான்றிதழ் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் மோட்டார் சைக்கிள் திருத்துனர், முற்சக்கர வண்டி திருத்துனர், கணனி வன்பொருள் திருத்துனர், மரவேலை தொழில்நுட்பவியலாளர், காய்ச்சி இணைப்பு (Welding) ஆகிய பயிற்சி நெறிகள் ஆரம்பிக்க உள்ளதால் கற்க ஆர்வமுள்ள இளைஞர் யுவதிகளை எதிர்வரும் 4ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு சுயவிபரக்கோவையுடன் நேரில் சமுகமளிக்குமாறு நிலையப் பொறுப்பதிகாரி சு.கிரிதாஸ் அறிவித்துள்ளார். (எ)

## தப்பியோடிய கைதி மடக்கிப்பிடிப்பு

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட கைதி ஒருவர் தப்பியோடியபோது மடக்கிப்பிடிக்கப்பட்டார். இச் சம்பவம் நேற்றுக்காலை 10.00 மணிக்கு இடம்பெற்றுள்ளது. யாழ்ப்பாண சிறைச்சாலையிலிருந்து சிகிச்சைக்காக கொண்டுவரப்பட்ட கைதியே இவ்வாறு தப்பியோடியுள்ளார்.

இவரை யாழ்.பொலிஸார் மற்றும் வைத்தியசாலை ஊழியர்கள் இணைந்து நகரப் பகுதியில் வைத்து மடக்கிப்பிடித்தனர். பின்பு கைதி யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக உட்படுத்தப்பட்டு பின் சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

குறித்த கைதி பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டதோடு கடந்த 4 வருடமாக எவ்வித வழக்கும் தொடரப்படாத நிலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (3-6)

## ஏ.எல். மாணவர்களுக்கான மாபெரும் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

க.பொ.த. உயர்தர பௌதிகவியல் வினாத்தாளுடன் பலவருடங்களாக நேரடித்தொடர்பு கொண்டவரும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் பேராசிரியருமான பேராசிரியர் எஸ்.டி. ஆர்.ரோசா எதிர்வரும் 4ஆம், 5ஆம் திகதிகளில் யாழ்.இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் மாபெரும் கருத்தரங்கு ஒன்றை நடத்தவுள்ளார்.

இக் கருத்தரங்கை CAPSTONE நிறுவனம் இலங்கை CIMA பிரிவின் அனுசரணையுடன் ஒழுங்கு செய்துள்ளது. இக் கருத்தரங்கில் பங்குகொள்ளவிருக்கும் அனைத்து மாணவர்களும் நாளைகாலை 8.00 மணி முதல் மாலை 4.00 மணிவரையான நேரத்தில் பதிவுகளை மேற்கொண்டு அனுமதி இலக்கத்தினை பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணத்தில்
1.கப்ஸ்ரோன் பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
2. சயன்ஸ் கோல், கன்னாதிட்டி.
வடமராட்சியில்–
ஹாட்லி கல்லூரி,
தென்மராட்சியில்–
சாவகச்சேரி இந்துக்கல்லூரி ஆகிய இடங்களில் பதிவுகளை மேற்கொள்ளலாம். (எ)

## பழைய மாணவர் சங்க பொதுக்கூட்ட[ம்]

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் நாளை மறுதினம் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் அதிபர் க.இ.இராசசேகரம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இப் பொதுக் கூட்டத்தில் பிரதம விருந்தினராக ஓய்வுநிலை புகையிரத சாப்பாளரும் கல்லூரியின் பழைய மாணவருமாகிய க.துரைராசா கலந்து கொள்ளவுள்ளார்.

பழைய மாணவர்கள் அனைவரையும் இக் கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு அதிபர் அறிவித்துள்ளார். (எ)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கந்தர்மடம் அரசடி வீதி அருள்மிகு செல்வநாகபூஷணி அம்பாள் தேவஸ்தான ஆனி மஹோற்சவ விஞ்ஞாபனம் இன்று காலை 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 14ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

## 'பொதுப் பங்கு வழங்கல்' குறித்த கலந்துரையாடல்

(கொழும்பு)

Bartleet Mallory Stockbrokers (Pvt) Ltd இன் ஏற்பாட்டில் றெஸ்செட் யேசி லங்கா லிமிட்டெட் பொது பங்கு வழங்கல் தொடர்பான கருத்தரங்கு நாளை சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு ஈரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இதில் ஆர்வலர்கள் அனைவரும் கலந்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## பருத்தித்துறையில் இருதய சிகிச்சை சேவை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் கடந்த மாதம் தொடக்கம் மாதத்தின் 4ஆவது வியாழக்கிழமைகளில் யாழ்.போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த இருதய சிகிச்சை நிபுணர்களால் கிளினிக் நடத்தப்படும்.

இவ்வைத்திய சேவையைப் பெறவிரும்பும் நோயாளர்கள் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையுடன் தொடர்புகொண்டு சேவையைப் பெற்றுக்கொள்ளலாம் என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (எ)


**விற்பனைக்கு**

தேக்கினாலான COT (தொட்டில்) பெரியது விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 0776237956

(5455)

நீரிழிவா




**நீரிழிவு நோயாளர்களின் வரப் பிரசாதம் பட்னா டயபெட்டிக் டீ**

பாவித்து 10 நாட்களில் பலன் கிடைக்கும். 100க்கு 100 சக்தி வாய்ந்ததென வைத்திய நிபுணர்கள் சிபாரிசு செய்கின்றனர் பட்னா டயப் டீ. பாவித்தால்:- நோயற்ற வாழ்வு ஆரோக்கியம்:- நிச்சயம் எல்லா பாமசிகளிலும் கிடைக்கும்.

குறிப்பு : இரண்டு பட்னா பெட்டியின் மேல் உறைகளைக் கொண்டு வருபவர்களுக்கு நீரிழிவு பரிசோதனை இலவசம்.

வட இலங்கை ஏகவிநியோகஸ்தர்கள்
வைத்தீஸ்வரன் மெடிக்கல் (ஆஸ்பத்திரி முன்பாக),
462, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0777172780, 0776237956

(5454)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

நாவாந்துறை கலைவாணி சனசமூக நிலையத்தின் 3வது ஆண்டு விழாவை முன்னிட்டு சிறப்பு விருந்தினராக வருகை தந்த பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் திரு.கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களும், நாடாளுமன்ற உறுப்பினர் திரு.சில்வஸ்திரி அலன்ரின் (உதயன் தோழர்) அவர்களுக்கும், மேயர் திருமதி பற்குநாதன் யோகேஸ்வரி, பிரதி மேயர் திரு.ப.இளங்கோ (றீகன் தோழர்) அவர்களுக்கும், சனசமூக நிலையத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு எமது கலையரங்கு புனரமைப்பு வேலைத்திட்டத்திற்காக அமைச்சர் தமது நிதியில் இருந்து ரூபாய் இரண்டு லட்சம் அன்பளிப்பு செய்தமைக்கு அமைச்சருக்கு எமது நிலையத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம் :
கலைவாணி சனசமூக நிலையம்

**பெயர் மாற்றம்**

பிரம்மஸ்ரீ பா.சாந்தினிகேசசர்மா ஆகிய நான் சென்ற 21.06.2011 அன்று சமயாசார முறைப்படி ஆசார்யார் அபிஷேகம் செய்ததன் பொருட்டு தற்போது சிவஸ்ரீ பா.சாந்தினிகேசக் குருக்கள் எனப் பெயர் மாற்றம் பெற்றுள்ளேன் என்பதை இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

(C-3613) பா.சாந்தினிகேசக் குருக்கள்

**விற்பனைக்கு**

யாழ்-கொழும்பு ND-XXXX தொடர் இலக்கமுடைய பேருந்து (அரைச் சொகுசு பஸ்) றூட் பேர்மிற்றுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 0777238615

(5449)

**வீடு வாடகைக்குத் தேவை**

யாழ். மாநகரசபை எல்லைக்குள் சிறிய குடும்பம் வசிக்கக் கூடிய சகல வசதிகளும் கொண்ட சிறிய வீடு வாடகைக்கு உடன்தேவை.

தொடர்பு :
0771846137
0215100456

(5458)

**தவறிவிட்டது**

அரசடி றோட் கட்டுடை மானிப்பாய் எனும் முகவயுடைய சல்வநாயகம் ஞானசீலன் என்பவரது தேசிய அடையாள அட்டை (8028166V), சாரதி அனுமதிப் பத்திரம், இன்சூரன்ஸ் Tax என்பன அவகிய பேஸ் ஸ்ரேசன் வீதி, கோண்டாவிலில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஒப்படைத்து உதவவும்.

தொடர்புக்கு 0776_28005

# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை

## 2011 (ஆகஸ்ட்) மாதிரி வினாத்தாள் - 10

ஆசிரியர் :- எஸ்.ஏ.சந்திரபவன்,
கொழும்பு.

**பகுதி - II**

(அ)
தந்தன தாதினம் தன்னானே - தன
தந்தன தாதினம் தன்னானே

(ஆ)
மங்கையர் எல்லோரும் வாருங்கடி - நல்ல
மாணிக்க கங்கை நீர் ஆடுங்கடி
சிங்கார நகையை பூட்டுங்கடி, நல்ல
சிவந்த குங்குமம் தீட்டுங்கடி

(இ)
மூங்கில் இலையிலே பச்சரிசி - நல்ல
முப்பது தேங்காயும் சர்க்கரையும்
வைத்து படைக்கின்ற முத்தாளம்மனுக்கு
வளைந்து கும்பி அடியுங்கடி!

01) மேலுள்ள பாடலை நன்றாக வாசித்து, அது தொடர்பாக கேட்கப்படும் வினாக்களுக்கு விடை தருக.

1) மங்கையர் என்பவர் யார்?

.......................................................................

2) மாணிக்க கங்கை என்பதைப் பிரித்தெழுதுக.

.......................................................................

3) வாருங்கடி என்னும் பேச்சுவழக்குச் சொல்லுக்குப் பொருத்தமான எழுத்து வழக்குச் சொல்லை எழுதுக.

.......................................................................

4) சிங்கார நகையை பூட்டுங்கடி என்பதிலுள்ள அடைமொழிச் சொல் எது?

.......................................................................

5) தீட்டுங்கடி எனும் சொல்லுக்கு ஒத்த ஓசையுடைய இன்னொரு சொல்லை எழுதுக.

.......................................................................

6) மூங்கில் + இலையிலே என்பதை சேர்த்தெழுதுக.

.......................................................................

7) பச்சரிசி என்பதில் மறைந்துள்ள பண்புச் சொல் எது?

.......................................................................

8) பாடலில் உள்ள வினையெச்சச் சொல்லைத் தருக.

.......................................................................

9) மேலுள்ள பாடல் எந்த வகைப் பாடல்

.......................................................................

10) வளைந்து கும்மி அடிப்பதற்கு முன்பு மங்கையர் தமக்குச் செய்ய வேண்டிய அலங்காரங்களில் ஒன்றை எழுதுக.

.......................................................................

(10 புள்ளிகள்)

02) 1) கீழ்வரும் சொற்களின் ஒத்த கருத்துச் சொற்களைத் தருக.

1) சிங்காரம் ...................... 2) கங்கை ........................

(கங்கை / நகை / குங்குமம் / இலை / மூங்கில் / முப்பது / கும்பி / தேங்காய் / சர்க்கரை)

3) சிரிப்பு என்பதன் ஒத்த பொருள் தரும் சொல் எது?

.......................................................................

4) மேலுள்ள பெயர்களில் சினைப் பெயர் ஒன்று எது?

.......................................................................

5) தேங்காய் என்பதைப் பிரித்தெழுதுக.

.......................................................................

(05 புள்ளிகள்)

03) கீழுள்ள ஆங்கிலச் சொற்களுக்கான தமிழ்ச் சொற்களை எழுதுக.

1) Milk .......................................................

2) Party .......................................................

3) Colour .......................................................

4) Friends .......................................................

(04 புள்ளிகள்)

04) கீழே கேட்கப்பட்டுள்ள சுற்றாடல் சார்பான வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ் கோடிடுக.

1) தாவர இனப்பெருக்கத்திற்கு உதவும் பிரதானமான தாவரப் பகுதி எது?
1) வேர் 2) வித்து 3) இலை

2) தாவரத்தில் சுவாசம் நடைபெறும் தாவரப் பகுதி எது?
1) தண்டு 2) இலை 3) வேர்

3) பின்வருவனவற்றில் மரம் என்னும் வகைக்குள் அடங்குவது எது?
1) தேயிலை 2)வாழை 3) வெற்றிலை

4) செடி எனும் வகையினுள் அடங்குவது பின்வருவனவற்றுள் எது?
1) துளசி 2) தூதுவளை 3) பூசணி

5) பின்வருனவற்றில் கொடி எனும் வகையினுள் அடங்குவது எது?
1) கரட் 2) கத்தரி 3) பயிற்றை

6) மருந்தாகப் பயன்படும் தாவரம் கீழ்வருவனவற்றுள் எது?
1) கீழ்காய் நெல்லி 2) மணிவாழை 3) தேக்கு

7) எண்ணெய் பெறக்கூடிய வித்து வகையைச் சேர்ந்த தாவரம் எது?
1) ஏலக்காய் 2) வெந்தயம் 3) எள்ளு

8) முள்முருங்கைப் பூவின் நிறம் யாது?
1) மஞ்சள் 2) சிவப்பு 3) செம்மஞ்சள்

9) பச்சையாக உண்ணக்கூடிய காய்வகை எது?
1) வெண்டிக்காய் 2)கத்தரிக்காய் 3) பூசணிக்காய்

10) அதிக வித்துக்களைக் கொண்ட பழம் எது?
1) தோடம்பழம் 2) மாம்பழம் 3) கொய்யாப்பழம்

(10 புள்ளிகள்)

05) கீழ்வரும் வினாக்களின் சரியான விடையினைப் புள்ளிக் கோடுகளில் எழுதுக.

1) கீழே முதலில் தரப்பட்டுள்ள 1 தொடக்கம் 5 வரையான இலக்கங்களைக் கொண்டு A, B ஆகிய கூடுகளை நிரப்புக.

| | | |
|---|---|---|
| 1 | 4 | 2 |
| | 3 | 5 |

A

| சிறிய எண்கள் |
|---|
| ........................ |

B

| பெரிய எண்கள் |
|---|
| ........................ |

2) 4235 இவ் எண்ணில் 5 எனும் இலக்கத்தின் இடப்பெறுமானம் யாது?

(..................)

3) 'நானூற்றுத் தொண்ணூற்று ஐந்து' என்பதை இலக்கங்களில் எழுதுக.

(..................)

4) 45 என்பதனை உரோமன் எண்குறியில் எழுதுக.

(..................)

5) XX இவ் உரோமன் எண்ணின் பெறுமதி யாது?

(..................)

(10 புள்ளிகள்)

(18ஆம் பக்கம் பார்க்க)

# கும்பாபிஷேகம்

(சாவகச்சேரி)

கச்சாய் வடக்கு ஸ்ரீ துர்க்கா தேவி ஆலய மஹா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.07 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அனைத்து அடியார்களையும் அம்பாளின் அருளினை பெறுமாறு ஆலய நிர்வாகத்தினர் கேட்டுக் கொள்கின்றனர். (ஸ்ரீ-29)

❁❁❁❁❁

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி பருத்தித்துறை திருநாவலூர் மருதந்தெணி ஸ்ரீ மகாமாரியம்மன் திருக்கோயில் மஹா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.15 முதல் 10.50 வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டு ஆரம்ப கிரியை நிகழ்வுகள் நேற்று முன்தினம் புதன்கிழமை ஆரம்பமாகி நாளை சனிக்கிழமை காலை 9 மணி வரை நடைபெறும்.

கும்பாபிஷேக நிகழ்வுகள் ஆலய பிரதமகுரு கிரியாகிரமஜோதி தேவி உபா சகர் சிவஸ்ரீ சிவ குஞ்சிதபாதக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. பக்தர்கள் நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை எண்ணெய்க்காப்பு சாத்தலாம். (ஸ்ரீ-4)

# எச்என்பியின் கைதடிக்கிளை திறப்புவிழா

(சாவகச்சேரி)

ஹற்றன் நஷனல் வங்கியின் வாடிக்கையாளர் சேவை நிலைய கைதடிக்கிளை எதிர்வரும் 4 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 11.30 மணிக்கு கைதடியில் அமைந்துள்ள கட்டடத்தில் கைதடி வங்கிக் கிளை முகாமையாளர் ப.பரணிதரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வங்கியின் முகாமைத்துவ பணிப்பாளர் தா.தியாகராஜா கலந்து கொண்டு இந்நிகழ்வை ஆரம்பித்து வைக்கவுள்ளார். (ஸ்ரீ-29)

# சங்காபிஷேகமும் மணவாளக்கோலமும்

(யாழ்ப்பாணம்)

தொல்புரம் துரையன் வளவு பிள்ளையார் கோவில் அஷ்டோத்திர சத(108) சங்காபிஷேகமும் மணவாளக் கோலத் திருவிழாவும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் மாலை 6 மணிக்கு விசேட பூஜை, தீபாராதனைகளைத் தொடர்ந்து திருவூஞ்சலும் நிகழப் பெற்று பெருமான் விதியுலா வரும் நிகழ்வு இடம்பெறும். (ஸ்ரீ)

# யாழ்.மாநகரசபைக்கு புதிய தீயணைப்பு இயந்திரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபைக்கு புதிய தீயணைப்பு இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்யப்படவுள்ளதாக யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோ. பற்குணராசா தெரிவித்துள்ளார்.

யாழ். மாநகரசபையின் இவ்வருடத்திற்கான 6 ஆவது மாதாந்தப் பொதுக்கூட்டம் நேற்று நடைபெற்றது. இங்கு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார், இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ் குடா முழுவதும் இந்த தீயணைப்பு இயந்திரம் பயன்படுத்தப்படவுள்ளதாகவும் பழைய இயந்திரத்தில் பழுதடைந்ததன் காரணமாக இப் புதிய இயந்திரம் கொள்வனவு செய்யப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இத் தீயணைப்பு இயந்திரத்தை அடுத்த வாரமளவில் யாழ்.மாநகரசபை கொள்வனவு செய்யும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-4-6)

# மக்கள் வங்கியின் 50 ஆவது ஆண்டு பொன்விழாக் கொண்டாட்டம்

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் 50 ஆவது ஆண்டு பொன்விழாக் கொண்டாட்டம் யாழ். பிராந்திய காரியாலயத்தில் இன்று காலை 8.30 மணியளவில் பிரதேச முகாமையாளர் எஸ்.பத்மநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதில் விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண.ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி .ஏ.சந்திரசிறி, யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ். கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க, யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோ.பற்குணராசா, யாழ்.வணிகர் கழகத் தலைவர் ஆர். ஜெயசேகரம், யாழ்.மாவட்ட திணைக்கள தலைவர்கள், கூட்டுத்தாபன தலைவர்கள், அனைவரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

50வருட வெற்றிப்பாதையில் மக்கள் வங்கியின் வரலாற்று தொகுப்பு என்னும் தொனிப்பொருளில் பிராந்திய முகாமையாளர் எஸ்.பத்மநாதன் உரைநிகழ்த்தவுள்ளார்.

அத்துடன் விருந்தினர்கள் கௌரவிப்பும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-6)

# வடமராட்சி வடக்கு பி.செ.பிரிவில் வாழ்நிலைத் தகவல்கள் சேகரிப்பு

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவிற்குட் பட்ட பகுதிகளில் வாழ்நிலை தகவல்களை கணக்கெடுத்தல் பணிகளை தொகை மதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களம் மேற்கொள்ளவுள்ளது.

இதற்கமைய பயங்கரவாத நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்தோர், இயற்கை அனர்த்தத்தால் இடம்பெயர்ந்தோர், வெளிநாட்டிற்கு வசிக்கச் சென்றோர், கடந்த 1982 ஆம் ஆண்டிற்குப் பின்னர் யுத்தத்தினால் இறந்தோர், காணாமல் போனோர் போன்றோரின் வாழ்நிலைத் தகவல்கள் சேகரிக்கப்படவுள்ளன.

இத் தொகை மதிப்பு பணிக்கு வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளிலிருந்து 196 ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான விசேட பயிற்சி வகுப்புக்கள் நேற்று ஆரம்பிக்கப்பட்டு இன்று வெள்ளிக்கிழமை வரை பருத்தித்துறை செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் இரா.வரதீஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இப்பணியில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்குரிய கொடுப்பனவை புள்ளி விபரவியல் திணைக்களம் வழங்கவுள்ளது. இக்கணக்கெடுப்பு பணியை மேற்பார்வை செய்வதற்கு புள்ளி விபரத்திணைக்கள உயர் அதிகாரிகள் வருகை தரவுள்ளனரென தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2-35)

# கண்டிய நடன கற்கைநெறியின் இரண்டாவது பிரிவு ஆரம்பம்

திருமறைக்கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் பாடவிதானங்களில் ஒன்றாக அமைகின்ற கண்டிய நடன கற்கை நெறியின் இரண்டாவது பிரிவின் ஆரம்ப வைபவம் எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு இல.128, டேவிற் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள திருமறைக்கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இலவசமாக நடாத்தப்படும் இக்கற்கைநெறியில் இணைந்து பயில விரும்பும் ஆர்வமுடையோர் எதிர்வரும் 7 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்பாக தங்களது பெயர் விபரங்களை யாழ். திருமறைக்கலாமன்ற அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

அத்துடன் கடந்த ஆண்டு இடம்பெற்ற கண்டிய நடன கற்கை நெறியின் முதலாவது பிரிவில் அதிகளவான மாணவர்கள் இணைந்து பயிற்சியை நிறைவுசெய்து சான்றிதழ் பெற்று வெளியேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# மஹோற்சவம்

(இருபாலை)

கட்டப்பிராய் அருள் மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை காலை10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 14 ஆம் திகதி காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் 15 ஆம் திகதி காலை 10 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (ஸ்ரீ-4-136)

❁❁❁❁❁

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மேற்கு-சொர்ண வடலி அருள் மிகு ஸ்ரீ சொர்ணசித்தி விநாயகர் தேவஸ்தான மஹோற்சவம் எதிர்வரும் 4 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் திருவிழா நடை பெறவுள்ளது.

இதில் எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்த உற்சவமும் இடம்பெற்று மாலை 6 மணிக்கு கொடியிறக்கம் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ)

# செஞ்சிலுவை சங்க தொண்டர்கள் கௌரவிப்பு

(நல்லூர்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க வலிகிழக்குப் பிரிவின் தொண்டர்கள் கௌரவிப்பு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்க வலிகிழக்கு பிரிவின் தலைவர் இ.மயில்வாகனம் தலைமையில் செஞ்சிலுவைச்சங்க கோப்பாய்பிரிவு அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வலிகிழக்கு பிரதேச செயலர் ம.பிரதீபன், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்டக்கிளையின் தலைவர் பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.


சிறப்பு விருந்தினர்களாக இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்ட கிளையின் நிறைவேற்று உத்தியோகத்தர் இ.மயூரன், இலங்கை செஞ்சிலுவைச்சங்க வலிமேற்கு பிரிவின் தலைவர் தி.உதயசூரியன், இலங்கை செஞ்சிலுவைச் சங்க சாவகச்சேரி பிரிவின் தலைவர் செ. மகேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஸ்ரீ-134)

# நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தில் மில்க்வைற் தொழில் அதிபர் க.கனகராசா நினைவுப் பேருரை நாளை பிற்பகல் 3 மணிக்கு கா.கார்த்திகேசு தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் நினைவுப்பேருரையை சைவப்புலவர் இ.ஸ்ரீதரன், பதிலுரையை சிவநேயர் ஜே.பி. இ.தவகோபால் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (ஸ்ரீ)


குருத்துவப்பணியில் 25 ஆவது ஆண்டை பூர்த்தி செய்து வெள்ளிவிழாக் கொண்டாடிய அமலமரி தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்பணி F.L.N குரூஸ் அடிகளாருக்கு கோப்பாய் புனித மரியன்னை ஆலய பங்கு மக்களால் அண்மையில் பாராட்டுவிழா நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் விழா நாயகன் மலர் மாலை அணிவித்து வரவழைத்து வரப்படுவதையும், கூட்டுத்திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படுவதையும், அருட்தந்தை பென்சியன் அ.ம.தி உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

# இந்தியா வளச்சுரண்டலில் ஈடுபட்டுள்ளதாக குற்றச்சாட்டு

(கொழும்பு)

வடக்கு பிரச்சினைகளை காரணம் காட்டி இந்தியா வளச் சுரண்டலில் ஈடுபட்டுள்ளதாக ஜே.வி.வி.கட்சி குற்றம் சுமத்தியுள்ளது. காணிகள் மற்றும் கட்டட நிர்மாண ஒப்பந்தங்களை இந்தியா பெற்றுக் கொண்டுள்ளதாக ஜே.வி.வியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா குறிப்பிட்டுள்ளார்.

இதுவரை காலமும் இந்தியா வடக்கு மக்களுக்கு எதனையும் பெற்றுக் கொடுத்ததாக சரித்திரம் கிடையாது என சுட்டிகாட்டியுள்ள அவர் இந்த அரசாங்கம் இந்தியாவின் முன்னிலையில் மண்டியிட்டு கட்டளைகளை நிறைவேற்றி வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

வெளிநாட்டு அழுத்தங்களின் மத்தியில் அரசாங்கத்தின் இரட்டை நிலைப்பாடு என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நாட்டின் சகல துறைகளிலும் ராஜபக்ஷ வாதம் வியாபித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். வெளிநாட்டு அழுத்தங்கள் அதிகரித்துள்ளதாகவும் அரசாங்கம் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு பதிலாக அவற்றை விற்பனை செய்து தனது இருப்பை உறுதி செய்து கொள்வதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த அரசாங்கம் காலனித்துவத்திற்கு எதிரான தேசப்பற்றுடைய அரசாங்கம் என சிலர் நினைப்பதாகவும் உண்மையில் இந்த அரசாங்கமும் காலனித்துவ ஆட்சியாளர்களின் கைக்கூலிகளே எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கைகளையே இன்று நாட்டின் பொருளாதாரக் கொள்ளையாக அமைந்துள்ளது என குற்றம் சுமத்தியுள்ள அவர் போர் நிறைவடைந்து இரண்டு ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் நாடு இன்னமும் அவசரகால சட்டத்தின் கீழ் ஆட்சி செய்யப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)



இணுவில் கந்தசுவாமி கோயில் மஹோற்சவம்

தீர்த்தோற்சவம் (01.07.2011)

இணுவைக் கந்தன்
தீர்த்தோற்சவம் காணவாரீர்!

பக்தர்கள் சித்தர்கள் கூடி பக்திப் பரவசத்திலே
பால்காவடி ஆடி தேர்த்திருநாளன்று
மறுநாள் அடியார் நேர்த்தி செய்தே
திருமுழுக்காட்டிடும்
தீர்த்தோற்சவம் காண
பட்டுடை மணிகளொடு மாலையுடன்
பதக்கமும் மார்பினில் சேர்ந்தே யொளிக்க
முத்துக்கள் பதித்த மணி மகுடமும் விளங்க
பச்சை மயில் மீது நீ ஏறிவருவாய்
தீர்த்தோற்சவம் காண வாரீர் இணுவை
பன்னிரு கை வேலவனின் தரிசனம் பாரீர்!

இணுவை யூர் செல்வம்-பவானந்த மூர்த்தி

தீர்த்தத் திருவிழா உபயகாரர்

(5114)

# கலந்துரையாடல்

(சாவகச்சேரி)

தென்னை அபிவிருத்திச் சபையினர் தென்னை அபிவிருத்தித் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் சாவகச்சேரி சிவன் கோயில் வீதியில் அமைந்துள்ள கலாச்சார மண்டபத்தில் இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் அமைச்சர்களன ஜெகத் புஷ்பகுமார, கே.என்.டக்ளஸ்தேவாணந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.எ.சந்திரசிறி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஸ்ரீ-29)

# சனல் 4 ஆவணப்பட விவகாரத்தில் அரசாங்கம் இரட்டை நிலைப்பாடு

## ஐ.தே.க.குற்றச்சாட்டு

சனல் 4 ஆவணப்பட விவகாரத்தில் அரசாங்கம் இரட்டை நிலைப்பாட்டை பின்பற்றி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது படையினர் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக விபரிக்கும் குறித்த ஆவணப்படம் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டுமென அரசாங்கம் ஏன் திடீர் தீர்மானம் எடுத்தது என ஐக்கிய தேசியக் கட்சி கேள்வி எழுப்பியுள்ளது.

பொதுநலவாய நாடுகள் செயலகத்தினால் அண்மையில் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில் சனல் 4 ஆவணப்படம் தொடர்பில் இலங்கை அரசாங்கம் விசாரணை நடத்துவதற்கு உத்தேசித்துள்ளமை வரவேற் கத்தக்கது என அறிவித்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது. சனல் 4 ஆவணப் படத்தை முற்று முழுவதாக நிராகரித்து வந்த அரசாங்கம் திடீரென தீர்மானத்தை மாற்றி விசாரணை நடத்த வேண்டுமென அறிவித்தமை ஆச்சரியமளிப்பதாகக் குறிப்பிட்டுள்ளது.

தாரூஸ்மான் அறிக்கை தொடர்பிலும் அரசாங்கம் இதே வழிமுறையைப் பின்பற்றியதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகளின் பொதுச்செயலாளர் பான் கீ மூனினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு உறுப்பினர்களை இரகசியமாக சந்தித்த அரசாங்கம், பகிரங்கமாக நிபுணர் குழுவினை விமர்சனம் செய்து வந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

சனல் 4 ஆவணப்படம் தொடர்பான அரசாங்கத்தின் மெய்யான கருத்து வெளிப்படுத்தப்பட வேண்டுமென வலியுறுத்தப் பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# உழவியந்திர சில்லுக்குள் அகப்பட்டு சாரதி உயிரிழப்பு

## கிளிநொச்சியில் சம்பவம்

கிளிநொச்சியிலிருந்து உழவியந்திரத்தில் வந்து கொண்டிருந்த சாரதி தவறிவிழுந்து உழவியந்திரத்திற்குள் அகப்பட்டு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று வியாழக்கிழமை இடம் பெற்றுள்ளது. இச்சம்பவத்தில் D3 பன்னங்கண்டி கிளிநொச்சியைச் சேர்ந்த புண்ணிய மூர்த்தி மகேந்திரன் என்பவரே பரிதாபமாக உயிரிழந்தவராவார்.

இவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-3-10)

# சன் சீ கப்பலில் சென்ற 11 அகதிகள் தொடர்ந்தும் சிறையில் தடுத்துவைப்பு

சன்சீ கப்பல் மூலம் கனடாவுக்கு சென்ற தமிழர்களில் 11 பேர் தொடர்ந்தும் கனேடிய சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். கடந்த ஒரு வருடமாக இவர்கள் கனேடிய சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தொடர்பில் தொடர்ந்தும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கனேடிய குடிவரவுத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் சன் சீ கப்பலில் கனடாவுக்கு சென்ற 492 பேரில் உள்ளடங்குகின்றனர். இந்நிலையில் சன் சீ கப்பலில் கனடாவுக்கு சென்றவர்களில் நான்கு பேர் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்று கூறப்பட்டு நாடுகடத்தும் உத்தரவை பெற்றுள்ளனர்.

இந்தநிலையில் குற்றம் சுமத்தப்பட்டவர்களை தவிர்ந்த ஏனையோருக்கு அகதி நிலையை பெற்றுக்கொடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று கனேடிய தமிழ் காங்கிரஸ் கோரியுள்ளது.

சன் சீ கப்பலில் கனடாவுக்கு சென்றவர்கள் அங்குள்ள வாழ்க்கைக்கு பழக்கப்பட்டு விட்டனர். எனவே அவர்கள் தொழில்கள் மேற்கொள்ள வேலைசெய்யும் அனுமதி தேவை அது. அவர்களின் பிள்ளைகளுக்கு கல்வி செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு உதவும் என்று காங்கிரஸின் பேச்சாளர் டேவிட் பூபாலபிள்ளை கேட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# சிறந்த ஏற்றுமதியாளர்களுக்கு விருது


(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இலங்கையின் சிறந்த ஏற்றுமதியாளர்களைப் பாராட்டி கௌரவித்து விருதுகள் வழங்கினார்.

இது தொடர்பான நிகழ்வு அலரி மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. கடந்த 2007 -2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுக்கான சிறந்த ஏற்றுமதியாளர் விருதை இலங்கை பிஸ்கட் கம்பனி பெற்றுக் கொண்டது.

இது தொடர்பில் நடைபெற்ற வைபவத்தில் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிஷாட் பதியூதீன், பிரதியமைச்சர் ஜயரத்ன ஹேரத் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் தலைவர் ஜனக ரத்நாயக்க உட்பட மற்றும் பல முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-2)





வடமாகாணத்தில் நெல்சிப் திட்டத்தினால் முன்னெடுக்கப்படவுள்ள 2 ஆவது தொகுதி வேலைத்திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் வடமாகாண சபை கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது. இதில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியுடன் வடமாகாண் பிரதேசசபை செயலாளர்கள் கலந்தாலோசிப்பதைப் படங்களில் காணலாம். (படங்கள்: என்.குமார்)

# இன்று ஒரு தகவல்

## ஒரு புத்திமதி

ஒரு மன்னர் இருந்தார்.

அவர் ஒருநாள் தன் அமைச்சரை அழைத்துக் கொண்டு காட்டுக்குச் சென்றார்.

அங்கே ஒரு முனிவர்.

அவர் முன்னால் அரசர் போய் நின்று, ''சுவாமி... என்னை ஆசிர்வதியுங்கள். எனக்கு ஏதாவது புத்திமதி சொல்லுங்கள்!'' என்று கேட்டுக் கொண்டார்.

முனிவர் அரசனை ஆசிர்வதித்தார். பின்னர் கூறினார்.

''மகனே நீ! எந்தக் காரியத்தைச் செய்தாலும், அதைச் செய்வதற்கு முன்னால் ஒரு தடவை அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளை நன்றாக யோசித்துப்பார். உன் மனதுக்கு 'அது சரி!' என்று தெரிந்தால் மட்டும் அதை நீ செய்யவேண்டும்!'' என்றார்.

அரசர், முனிவர் சொன்னதை அப்படியே மனதில் வாங்கிக் கொண்டார்.

அவர் முனிவர் காலடியில் விழுந்து வணங்கினார்; நூறு பொற்காசுகளை முனிவர் காலடியில் வைத்துவிட்டுத் திரும்பினார்.

அரசரின் செயலை அமைச்சர் கவனித்தார்.

அவர், 'என்ன இது! நமது அரசர் இவ்வளவு ஏமாளியாக இருக்கிறாரே... இந்த ஒரு சாதாரண யோசனை சொன்னதற்காக மன்னர் முனிவருக்கு நூறு பொற்காசுகள் கொடுத்து விட்டாரே!' என்று நினைத்தார்.

அமைச்சர் இப்படி நினைப்பது அவர் முகத்தைப் பார்த்ததுமே அரசருக்குப் புரிந்தது. இருந்தாலும் அதைப் பற்றி அமைச்சரிடம் அரசர் ஒன்றும் கேட்கவில்லை!

இரண்டு பேரும் அரண்மனைக்குத் திரும்பி வந்து சேர்ந்தார்கள்.

அதற்குப் பின்னர் அரசர் என்ன செய்தார் தெரியுமா?

காட்டில் முனிவர் சொன்ன அந்தப் புத்திமதியை ஒரு கல்லில் கல்வெட்டாகச் செதுக்கினார். அதைத் தன் அறையில் எல்லோருடைய கண்ணிலும் படும்வகையில் பதித்து வைத்தார்.

இப்போதும் அரசரின் செயலைக் கவனித்த அமைச்சர், 'என்ன இது?... நம் மன்னரின் அறியாமையைப் புரிந்து கொள்ளவே முடியவில்லையே! இதைப் போய் கல்லில் செதுக்கி வைக்க வேண்டுமா? என்று நினைத்துக் கொண்டார்.

சில நாட்கள் கடந்தன.

ஒருநாள் அந்த மன்னருக்குக் கடுமையான வயிற்றுவலி ஏற்பட்டது.

உடனே அவர் அரண்மனை வைத்தியரைக் கூப்பிட்டார்.

வைத்தியர் வந்து சேர்ந்தார்.

அவர் மன்னரைச் சோதித்துப் பார்த்துவிட்டு, ''சிறிது நேரம் இப்படியே படுத்திருங்கள்... நான் எங்கள் வீட்டுக்குப் போய் இந்த நோய் நீங்குவதற்குரிய ஒரு மருந்தைத் தயார் செய்து கொண்டு வருகிறேன்'' என்று கூறிவிட்டு விரைந்து சென்றார்.

வைத்தியர் வீட்டிலிருந்து மருந்து எடுத்துக் கொண்டு வந்த சமயத்தில் மன்னர் ஒரு கட்டிலில் கண்மூடி படுத்திருந்தார். அருகில் அப்போது யாரும் இல்லை.

வைத்தியர் வந்தார்... ஒரு சிறிய கோப்பையில் கொஞ்சம் மருந்தை ஊற்றினார். சுற்றும் முற்றும் பார்த்தார். ஏதோ ஒரு பொடியை மருந்தில் கலந்தார்... கலந்து எடுத்துக் கொண்டு மன்னரை நெருங்கினார். கொஞ்சம் யோசித்தார். பின்னர் திரும்பிப் போனார். கையிலிருந்த மருந்தைக் கீழே கொட்டிவிட்டு வந்தார். அந்தக் கோப்பையை நன்றாகச் சுத்தம் செய்துவிட்டு மறுபடியும் சிறிது மருந்தை ஊற்றி எடுத்துக் கொண்டு வந்து, ''மன்னா! என்று மெதுவாகக் கூப்பிட்டார்.

மன்னர் எழுந்தார்!'' வைத்தியரே... நான் கண்களை மூடிக் கொண்டிருந்தாலும் அவ்வப்போது நீங்கள் செய்ததைக் கவனித்துக் கொண்டுதான் இருந்தேன். முதலில் எதையோ கலந்தீர்கள்... பின்னர் அதைக் கொட்டிவிட்டு இப்போது வேறு கொண்டு வருகிறீர்கள்... என்ன விடயம்? உண்மையைச் சொல்லுங்கள்!'' என்று மிரட்டினார்.

வைத்தியர் பயந்து போய்விட்டார்.

அப்படியே மன்னரின் காலில் பொத்தென்று விழுந்தார். உண்மையைச் சொன்னார்.

மகாராஜா... உங்களுடைய படைத்தளபதி உங்களைக் கொல்ல சதி செய்தார். அவர் என்னிடம் விஷம் கலந்து உங்களுக்குக் கொடுக்கச் சொன்னார். அதன் பொருட்டு அவர் எனக்கு நிறைய வெகுமதி தருவதாகக் கூறினார். நானும் அதற்கு ஒப்புக் கொண்டு இங்கே வந்தேன். அவர் கொடுத்த விஷப்பொடியை மருந்தில் கலந்தேன்... அதை எடுத்துக் கொண்டு உங்களிடம் வந்த போது எதிரில் நீங்கள் வைத்திருக்கும், 'நீ எந்தக் காரியத்தைச் செய்தாலும் அதைச் செய்வதற்கு முன்னால் ஒரு தடவை அதனால் ஏற்படக் கூடிய விளைவுகளை நன்றாக யோசித்துப்பார்... உன் மனதுக்கு 'அது சரி' என்று தெரிந்தால் மட்டும் அதை நீ செய்ய வேண்டும்!' என்ற வாசகம் என் கண்ணில் பட்டது. அது என்னை யோசிக்க வைத்தது. நான் செய்யும் செயலால் என் உயிருக்கே ஆபத்து ஏற்படும் என்பதைப் புரிந்து கொண்டேன். உடனே திரும்பிப்போய் விசத்தைக் கொட்டி... கழுவிவிட்டு... வேறு மருந்து ஊற்றிக் கொண்டு வருகிறேன்! என்று தெரிவித்தார்.

இப்போது அந்த மன்னர் அமைச்சரைக் கூப்பிட்டு, ''பார்த்தீர்களா... இந்தப் புத்திமதியை அன்றைக்கு நீங்கள் அலட்சியமாக நினைத்தீர்கள். இன்றைக்கு அதுதான் என் உயிரைக் காப்பாற்றியிருக்கிறது'' என்றார்.

அமைச்சர் தலையைக் குனிந்து கொண்டார்.

அதனால்... பெரியவர்கள் நமக்குச் சொல்லும் புத்திமதி ஆரம்பத்தில் சாதாரணமாகத்தான் தெரியும்! அதற்காக நாம் அதை அலட்சியம் செய்யக்கூடாது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# மக்கள் வங்கியின் நிதியுதவியுடன் வலி. வடக்கில் மாதிரி முன்பள்ளி அமைப்பு

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் நிதியுதவியுடன் வலிகாமம் வடக்கில் 7 இலட்சம் ரூபா செலவில் மாதிரி முன்பள்ளி அமைக்கப்பட்டு வருகிறது என வங்கியின் யாழ்.பிராந்திய முகாமையாளர் எஸ். பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

மக்கள் வங்கியின் 50 ஆவது ஆண்டு பொன்விழாக் கொண்டாட்டங்கள் தொடர்பான செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், மக்கள் வங்கியானது தனது 50 ஆவது ஆண்டு நிறைவையொட்டி பல்வேறு சமூக திட்டங்களை செய்து வருகின்றது.

இதன்படி வலிகாமம் வடக்கில் இந்த மாதிரி முன்பள்ளியை அமைத்து வருகின்றது. இதனை அமைக்கும் பணிகள் இம்மாத இறுதிக்குள் முடிவடைந்து விடும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-6)

# தரக்குறைவான உணவுப் பொதியிடல் பொருட்களுக்கு இன்றுமுதல் தடை

உணவின் தன்மையை மாற்றக்கூடிய தரக்குறைவான உணவுப் பொதியிடலுக்குப் பயன்படுத்தப்படும் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு இன்று முதல் தடை விதிக்கப்படும் என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சுகாதார அமைச்சு விடுத்துள்ள உத்தரவின்படி நுகர்வோரின் ஆரோக்கியத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய இத்தகைய பொதியிடல் பொருட்களை இறக்குமதி செய்வது, தயாரிப்பது, கொண்டு செல்வது, விற்பனைக்காக விளம்பரப்படுத்துவது, காட்சிப்படுத்துவது, களஞ்சியப்படுத்துவது, பயன்படுத்துவது அல்லது விநியோகிப்பது தடை செய்யப்படும். (ஸ்ரீ-2)

# சிறுவர், பெண்களுக்கான வலுவூட்டல் நிகழ்ச்சித் திட்டம்

சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சின் நிதி அனுசரணையுடன் நடத்தப்படும் இரு நாட்கள் கொண்ட சிறுவர், பெண்களுக்கான வலுவூட்டல் நிகழ்ச்சித் திட்டம் நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினரும் சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார பிரதி அமைச்சருமான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். இதில் முதலாம் நாள் நிகழ்வு இன்று நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் காலை 9.30 மணிக்கு சுயதொழில் உதவித் திட்டத்திற்கான நிதி உதவி வழங்கல் தொடர்ந்து 11 மணிக்கு முன்பள்ளிக்கான விளையாட்டு உபகரணம், கற்றல் உபகரணம் வழங்கல் போன்ற நிகழ்வும் நடைபெறும். பிற்பகல் 2.30 மணிக்கு முன்பள்ளிச் சிறுவர்களின் பெற்றோர்களுக்கான விழிப்புணர்வுச் செயற்றிட்டம் தொழிற்சாலை ஊழியர்களுக்கான பயிற்சித் திட்டம் ஆகியன நடைபெறவுள்ளது.

இரண்டாம் நாள் நிகழ்வு நாளை சனிக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் காலை 9 மணிக்கு முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்பு, முன்பிள்ளைப் பராய அபிவிருத்தி தொடர்பான அரச உத்தியோகத்தருக்கான பயிற்சி, முன்பிள்ளைப் பராய அபிவிருத்தி தொடர்பான இளைஞர், யுவதிகளுக்கான பயிற்சி, பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான பயிற்சி வகுப்பு, வீட்டுத் தோட்டப் பயனாளிகளுக்கான பயிற்சி நெறி போன்ற பயிற்சிநெறிகள் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. தொடர்ந்து பிற்பகல் 2 மணிக்கு சிறுவர்களின் கலாசார கலை நிகழ்வும் உதவி வழங்கலும் இடம்பெறும். (ஸ்ரீ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 50 | 40 |
| உருளைக்கிழங்கு | 75 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 80 | 80 | 70 |
| தக்காளி | 50 | 40 | 50 |
| மரவள்ளிக் கிழங்கு | 50 | 40 | 50 |
| கோவா | 80 | 40 | 70 |
| கரட் | 70 | 60 | 60 |
| பூசணி | 25 | 30 | 25 |
| புடோல் | 40 | 40 | 30 |
| வாழைக்காய் | 40 | 30 | 25 |
| சின்ன வெங்காயம் | 180 | 150 | 150 |
| பெரிய வெங்காயம் | 65 | 80 | 60 |
| பாகற்காய் | 100 | 80 | 70 |
| வெண்டிக்காய் | 50 | 80 | 50 |
| கருணைக் கிழங்கு | -- | 80 | -- |
| பயற்றங்காய் | 120 | 80 | 60 |
| லீக்ஸ் | 80 | 60 | 70 |
| பீற்றூட் | -- | 100 | -- |
| கறிமிளகாய் | -- | 80 | 50 |
| முருங்கைக்காய் | 150 | 180 | 150 |
| போஞ்சி | -- | 140 | 140 |
| கத்தரிதம்புள்ள | -- | 30 | 30 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 |
| தேசிக்காய் | 100 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 25-50 | 40 | 40 |

# இராசி பலன்

01.07.2011
(ஆனி 16, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு
அமாவாசை பிற்பகல் 2.53 மணி வரை
திருவாதிரை முன்னிரவு 11.54 மணிவரை
இராகுகாலம் 10.26-11.56 மணி வரை
சுபநேரம் 5.56-7.26 மணிவரை
அமாவாசை விரதம்
கதிர்காமம் கொடியேற்றம்.

**மேடம்** விருந்து, விழாக்களில் கலந்து சிறப்படையும் நாள், தொழிலில் போட்டிகளை முறியடித்து வெற்றி காண்பீர்கள், சகோதர வழி ஒற்றுமை மேலோங்கும்.

**இடபம்** உறவினர் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும், உத்தியோக உயர்வுண்டு, குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை அமையும், அலங்காரப் பொருட்களை வாங்குவதில் அக்கறை காட்டுவீர்கள்.

**மிதுனம்** பெண் தெய்வ வழிபாட்டால் பெருமை சேர வேண்டிய நாள், செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், மன ஆறுதல் தரும் பயணமொன்று உருவாகலாம்.

**கடகம்** எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படலாம், தொழில் நலன் கருதி பயணமொன்று இடம் பெறலாம், அம்பிகை வழிபாடு ஆனந்தமளிக்கும்.

**சிங்கம்** பொன்னான நாள், பண வருவாய் திருப்திகரமானதாக அமையும், தடைப்பட்ட காரியம் கைகூடும், தொழில் முன்னேற்றமுண்டு, அதிகாரிகள் அனுசரனையாக நடந்து கொள்வர்.

**கன்னி** செல்வாக்கு மேலோங்கும் நாள், உதிரி வருமானங்கள் கிடைக்கலாம், வீட்டுப் பணியைத் தொடரும் எண்ணம் உருவாகும், தூர தேசச் செய்திகள் வந்து சேரலாம்.

**துலாம்** கனிவான பேச்சால் காரியம் சாதிப்பீர்கள், தொழில் வளர்ச்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் விலகுவர், திடீர் பயணங்களால் நன்மையுண்டு.

**விருச்சிகம்** எதிர்பாராத மனஸ்தாபங்கள் ஏற்படலாம், எடுத்த காரியத்தில் தாமதங்கள் ஏற்படும், இறை வழிபாட்டால் இனிமை காண வேண்டிய நாள்.

**தனுசு** இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், களஸ்திர நன்மையுண்டு, முன்னோர் சொத்துக்களால் நன்மையுண்டு.

**மகரம்** மாமன், மைத்துனர் வழியில் மனதிற்கினிய சம்பவமொன்று நடைபெறலாம், உடல் நலம் சீராகும், கொடுத்த பணம் கைக்கு கிடைக்கலாம்.

**கும்பம்** பிள்ளைகளின் கோரிக்கையை நிறைவேற்றுவீர்கள், உறவினர் வழியில் சுபசெய்திகள் வந்து சேரலாம், பூர்வீக விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள்.

**மீனம்** தொழில்ரீதியாக வரவேண்டிய பணவரவு வந்து சேரலாம், தாயின் உடல் நலம் சீராகும், தொலைபேசி வழித்தகவல் தொழில் வளர்ச்சிக்கு உதவும்.

வளவன்

# அரசாங்கம் ஒருபோதும் இன ஒடுக்குமுறையில் ஈடுபடவில்லை

## ரோகித போகொல்லாகம தெரிவிப்பு

அரசாங்கம் இன ஒடுக்குமுறையில் ஈடுபட்டதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் எதுவித உண்மையும் கிடையாது என முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரோஹித பொகொல்லாகம தெரிவித்துள்ளார்.

இன ஒடுக்குமுறையை மேற்கொண்ட அரசாங்கமொன்று ஏன் 3 இலட்சம் பொதுமக்களையும் 11 ஆயிரம் விடுதலைப்புலிப் போராளிகளையும் மீட்க வேண்டுமென கேள்வி எழுப்பியுள்ளார்.

புலிகளுக்கு எதிரான அரசாங்கத்தின் யுத்தம் சர்வதேச பயங்கரவாதத்திற்கு எதிரான அமெரிக்காவின் யுத்தத்தின் ஒரு பகுதியாகக் கருதப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

தாரூஸ்மான் அறிக்கை மற்றும் சனல்4 ஊடக ஆவணப்பம் போன்றவற்றின் அடிப்படையில் அரசாங்கத்தின் பயங்கரவாதத்திற்கு எதிரான முனைப்புக்கள் இழிவுபடுத்தப்படக் கூடாது என அவர் தெரிவித்துள்ளார்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சட்டவிரோத படுகொலைகளை அரசாங்கக் கொள்கையாக பின்பற்றப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தெற்கில் உயர்மட்ட அரசியல் தலைவர்கள் உள்ளிட்ட பலர் கொல்லப்பட்ட போதிலும் அரசாங்கம் சட்டவிரோத படுகொலைகளை மேற்கொள்ளவில்லை எனத் தெரி வித்துள்ளார். யுத்தத்தின் போது அமெரிக்கா பல்வேறு வழிகளில் ஒத்துழைப்பு வழங்கியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கப்பல்களை அழிப்பதற்கு நிதி கட்டமைப்பை வலுவிழக்கச் செய்வதற்கு ஆயுத கொள்வன வுகளை தடுப்பதற்கு அமெரிக்கா ஒத்துழைப்பு வழங்கியதாகத் தெரிவித்துள்ளார்.

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டியது அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வன்னி மக்களை அழிக்க திட்டமிட்டிருந்தால் இறுதிக் கட்ட யுத்தம் வரையில் அரசாங்கம் உணவு மற்றும் மருந்துப் பொருட்களை அனுப்பி வைத்திருக்காது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தொடர்ச்சியாக மீட்புப் பணிகளை மேற்கொண்டு வந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் சர்வதேச தொண்டு நிறுவனங்கள் பொது மக்களை சந்திப்பதற்கான சந்தர்ப்பம் மறுக்கப்படவில்லை என்பதனை குற்றச்சாட்டுக்களை முன் வைப்போர் நினைவில் நிறுத்திக் கொள்ள வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். (ஸ்ரீ-2)

# இனப்பிரச்சினை தீர்வின் போது மட்டும் நாடாளுமன்ற ஆலோசனை கேட்பதேன்?

## ஜே.வி.பி.கேள்வி

நாட்டின் முக்கியமான தீர்மானங்கள் எடுக்கப்பட்ட போது அரசாங்கம் நாடாளுமன்றின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளவில்லை என ஜே.வி.பி.சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறான ஓர் பின்னணியில் திடீரென தேசிய இனப்பிரச்சினை குறித்த விவகாரத்தில் அரசாங்கம் பாராளுமன்றின் உதவியை நாடுவது புரியாத புதிராக அமைந்துள்ளது என ஜே.வி. பி. நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

17 ஆம் திருத்தச் சட்ட மூலம் இரத்து செய்யப்பட்டமை, 18 ஆம் திருத்தச் சட்ட மூலம் அமுல்படுத்தப்பட்டமை போன்ற சந்தர்ப்பங்களில் அரசாங்கம் நாடாளுமன்றின் கருத்துக்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறிப்பாக சுயாதீன ஆணைக் குழு க்களை அமைத்தல் மற் றும் ஜனாதிபதியின் தவணைக் காலத்தை நீடித்தல் போன்ற யோசனைத் திட்டங்களின் போது நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினை தொடர்பில் மட்டும் தனியான தீர்மானம் எடு க்க முடியாது நாடாளுமன்றின் கருத்துக்கள் கேட்கப்பட வேண்டும் என ஜனாதிபதி அறிவித்துள்ளமை ஆச்சரியமளிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஆளும் கட்சிக்கு நிகராக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் தெளிவற்ற கொள்கைகளை பின்பற்றி வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். நாடாளுமன்றத் தெரிவுக் குழு தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு இதுவரையில் வெளிப்படுத் தப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# குவைத்துக்கான தொழிலாளர்கள் தெரிவில் இலங்கையருக்கு முன்னுரிமை

## குவைத் தூதரகம் தெரிவிப்பு

(கொழும்பு)

குவைத்திற்கு பணிப்பெண்கள் மற் றும் தொழிலாளர்களை தெரிவு செய்யும் போது இலங்கையர்களுக்கு குவைத் அரசாங்கம் முன்னுரிமையளிப்பதாக கொழும்பிலுள்ள குவைத் தூதுவராலயம் தெரிவித்துள்ளது.

இதற்கானபிரதானகாரணம்குவைத்தில் குற்றமிழைத்து சிறைச்சாலையில் உள்ளவர்களில் இலங்கையர்களே குறைவானவர்கள் என்பதாகும் என இலங்கைக்கான குவைத் தூதுவர் யாகூப் யூசுப் அல் அதீக் தெரிவித்தார்.

தற்போது ஒரு இலட்சத்து 10 ஆயிரம் இலங்கையர்கள் குவைத்தில் தொழில் புரிகின்றனர் எனவும் இந்த எண்ணிக்கையை எதிர்காலத்தில் 2 இலட்சம் வரை அதிகரிக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போது தினமும் 200-250 இலங்கையர்களுக்கு குவைத்தில் தொழில் புரிவதற்கான விசா கொழும்பிலுள்ள குவைத் தூதுவராலயத்தினால் வழங்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கைக்கு சுற்றுலாவுக்காக வரும் குவைத் நாட்டவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவுள்ளதாகவும் இதனடிப் படையில் இவ்வருட இறுதிக்குள் இந்த எண்ணிக்கை 15000 முதல் 20000 வரை அதிக்ரிக்கும் என அவர் தெரிவித்தார்.

குவைத் கம்பனிகள் பல இலங்கையில் முதலீடு செய்யவுள் ளதாக குறிப்பிட்ட அவர் இதற்காக பல தூதுக் குழுக்கள் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வதாக தெரிவித்தார்.

(ஸ்ரீ-2)

# சட்டவிரோதமாக தாய்லாந்து செல்ல முயன்ற இலங்கையர் கைதானார்

சட்டவிரோதமான முறையில் தாய்லாந்து செல்ல முயற்சித்த இலங்கையர் இருவர் இந்தியா வின் கொல்கத்தாவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள இலங்கையர் இருவரும் சென்னையிலிருந்து கொல்கத்தா சென்று அங்கு தங்கியிருந்தபோதே சந்தேகத்தின் பேரில் இந்தியப் பொலிஸாரினால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர். கொல்கத்தாவிலி ருந்து தாய்ல ாந்துக்கு சட்டவிரோதமாகப் பயணிக்கும் நோக்குடன் கொல்கத்தாவில் தங்கியிருந்ததாக அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது.

இந்திய பொலிஸார் தற்போது பிரஸ்தாப இலங்கையர் இருவரிடமும் அவர்களுக்கு உதவி செய்தவர்கள் மற்றும் ஏனைய விபரங்கள் தொடர்பிலான விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(ஸ்ரீ-2)

## மணிபல்லவத்தில் மஹோற்சவம்



## நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

### இன்று கொடியேற்றத் திருவிழா

### கோடி நலம் செய்திடவே கொடியேறி வாருமம்மா!

நயினையிலே அமர்ந்தவளே
நலமருளும் தேவியம்மா
கோடி நலம் செய்திடவே
கொடியேறி வாருமம்மா
ஆதி சிவனின்
அருமை நாயகியே!
அகிலமெல்லாம் ஆளுகின்ற
அகிலாண்ட ஈஸ்வரியே!
அலை கடல் நடுவே வீற்றிருந்து
அருள் தந்து காத்திடம்மா
நாகம் குடை பிடிக்க
நற்காட்சி தந்திடம்மா...!

*செ.ரவிசாந், குப்பிளான்*

### கடலாடும் நாயகியே கொடியேற்று!

நயினையிலே கொடியேற்றி நலம் காட்டு
நாடு மன்பர் துயர் தீர்க்க வழி காட்டு
புவனேஸ்வரி பீடத்தில் அருள் கூட்டு
புதுமைகளை நிலைநாட்ட கொடியேற்று
உலகெங்கும் உன்னருளை நிலைநாட்டு
உவப்போரின் மனங்களில் அருள் நீட்டு
கடலாடும் நாயகியே அருள் கேட்டு
கழலடி பணிகிறோம் கொடியேற்று

*மதுரகலா வித்தியா*

### இஷ்ட தெய்வம் நீதான்

அலைகடல் மோதுதம்மா ஆதிசக்தியே
ஆனந்தக் கூத்தடிக்குது ஓடி யோடியே
விலையிலா நின்னருளைத் தேடித் தேடியே
விரைந்தே விழா எடுத்தோம் கூடிக் கூடியே
தொடர்கதை துன்பமில்லைக் கூறடியம்மா
தொட்டதுயர் பட்டிடவே பாரடியம்மா
இடர்களைந் தின்மதைத் தாவடியம்மா
இஷ்டதெய்வம் நீயன்றி யாரெடியம்மா

*திருமதி ஜெயக்குமாரி கந்தவேள்,*
*கொக்குவில் கிழக்கு*

### கற்பூர ஒளியில் கொடியேற்றம்

கடல் சூழ் நயினா தீவில்
தடல் புடலாக நாகபூசணி கோவிலில்
நடக்கும் இசையிலும் தேவாரங்களிலும் மத்தியில்
இடம் பெறுகின்றது வருடாந்த கொடியேற்றம்!

*கவிஞர் க.யோகராஜா,*
*அரியாலை*

சிறி நதியா
டிஜிட்டல் கலர் லாப் வீடியோ & ஸ்ரூடியோ
லக்ஸன் பிளாஸா கட்டடம், 109/A, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 8412


# இலங்கை-இந்திய இராணுவத்தினருக்கு இடையில் பேச்சுவார்த்தை ஆரம்பம்

இலங்கை-இந்திய இராணுவத்தினருக்கு இடையில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இரு நாட்டு இராணுவத் தரப்பினருக்கும் இடையில் இவ்வாறான ஓர் பேச்சுவார்த்தை நடத்தப்படுவது இதுவே முதல் முறையாகும்.

இரு தரப்பு இராணுவ ஒத்துழைப்பு குறித்து இந்தப் பேச்சுவார்த்தைகளின் போது கவனம் செலுத்தப்படவுள்ளது. பயிற்சி நடவடிக்கைகள், கூட்டு நடவடிக்கைகள் போன்றன குறித்து இதில் கூடுதல் கவனம் செலுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மூன்று நாட்கள் இந்தப் பேச்சுவார்த்தை நடத்தப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. இலங்கையின் சார்பில் இராணுவச் செயலாளர் மேஜர் ஜெனரல் எச்.சீ.பீ. குணதிலக்க தலைமையிலான குழுவினரும், இந்தியாவின் சார்பில் மேஜர் ஜெனரல் ஐ.பீ.சிங் தலைமையிலான குழுவினரும் கலந்து கொண்டுள்ளனர்.

இவ்வாறான பேச்சுவார்த்தைகளின் மூலம் இரு தரப்பு இராணுவ உறவுகள் மேலும் வலுவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த சில ஆண்டுகளில் இந்தியா, இலங்கை இராணுவத்தினருக்கு பல்வேறு பயிற்சிகளை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)



தேசிய மட்ட கனிஷ்டமெய் வல்லுநர் போட்டி அண்மையில் கொழும்பில் நடைபெற்றது. இதில் 23 வயதிற்குட்பட்ட தட்டெறிதல் போட்டியில் வவுனியா வைரவப் புளியங்குளத்தை சேர்ந்த தனபாலசிங்கம் அனுஷா தங்கப் பதக்கத்தை பெற்றுக்கொண்டதையிட்டு வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி கௌரவிப்பதையும், அருகில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்: என்.குமார்)

## வட-கிழக்கு நிலவரங்களை அறிந்து கொள்ளுமாறு அரசாங்கம் வழங்கிய ஆலோசனை புறக்கணிப்பு

# தூதரக அதிகாரிகள் மீது குற்றச்சாட்டு

(கொழும்பு)

வெளிநாடுகளுக்கு சேவையாற்ற செல்லும் முன்னர், வடக்கு-கிழக்கு பிரதேசங்களுக்கு சென்று, அந்த பிரதேசத்தின் நிலவரங்களை நன்கு அறிந்து கொள்ளுமாறு அரசாங்கம் வழங்கிய ஆலோசனைகளை புதிதாக நியமிக்கப்பட்ட சில தூதரக அதிகாரிகள் கவனத்தில் கொள்ளவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் தற்போதைய நிலமைகள் மற்றும் நாட்டின் நற்பெயர் தொடர்பாக தூதரக சேவை ஊடக சர்வதேச சமூகத்திற்கு தெளிவான புரிந்துணர்வை ஏற்படுத்தும் நோக்கில், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உத்தரவின் பேரில், தூதரக அதிகாரிகளுக்கு அரசாங்கம் இந்த ஆலோசனைகளை வழங்கியிருந்தது.

இந்த ஆலோசனையின்படி புதிதாக நியமிக்கபட்ட தூதரக அதிகாரிகள் வடக்கு-கிழக்கு பிரதேசங்களுக்கு விஜயம் செய்த போதிலும் சில அதிகாரிகள் தனிப்பட்ட காரணங்களை கூறி, அங்கு விஜயம் செய்வதை தவிர்த்து கொண்டனர்.

வெளிவிவகார அமைச்சினால் புதிதாக நியமிக்கப்பட்ட வெளிநாடுகளுக்கான இலங்கை தூதுவர்களுக்கான வடக்கு-கிழக்கு பிரதேசங்களுக்கான விஜயத்தின் அடிப்படையில் தூதுவர்கள் நேற்று முன்தினம் வவுனியா, முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களுக்கு விஜயம் செய்தனர்.

சீனாவுக்கான இலங்கையின் புதிய தூதுவர் ரஞ்சித் உயன்கொட, இத்தாலிக்கான தூதுவர் அசித் பெரேரா, சிங்கப்பூருக்கான தூதுவரும் முன்னாள் அமைச்சருமான பேரியல் அஷ்ரப், வியன்னாவுக்கான தூதுவர் அசீஸ், சுவிடனுக்கான தூதுவர் அழகபெரும, தாய்லாந்துக்கான தூதுவரும் முன்னாள் இராணுவ தளபதியுமான சாந்த கோட்டேகொட ஆகியோர் நேற்று முன்தினம் இந்த விஜயத்தில் இணைந்திருந்தனர். (ஸ்ரீ-2)

# மலேசிய ஆட்கடத்தல் கும்பலிடமிருந்து ஆறு இலங்கையர்கள் மீட்கப்பட்டனர்

மலேசியாவின் ஆட்கடத்தல் கும்பல்களிடமிருந்து 6 இலங்கையர்கள் மீட்கப்பட்டுள்ளனர் என்று மலேசிய குடிவரவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மலேசியாவில் உள்ள ஜாலன் வோங் ஆபூக் என்ற ஹோட்டலை கடந்த 27ஆம் திகதி முற்றுகையிட்டபோதே குறித்த இலங்கையர் 6 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து மலேசிய குடிவரவுத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் கஜேந்திர பகதூர் கருத்துத் தெரிவிக்கையில்,

ஹோட்டலில் இரு அறைகளில் தங்க வைக்கப்பட்டிருந்த 6 இலங்கையர்களை கடந்த 27ஆம் திகதி பி.ப. 2.20 மணியளவில் குடிவரவுத் திணைக்களத்தினர் மீட்டுள்ளனர்.

அண்மையில் கைது செய்யப்பட்ட ஆட்கடத்தலுடன் தொடர்புடைய ஒருவர் வழங்கிய தகவலின் அடிப்படையிலேயே இந்த முற்றுகை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

தொழில்வாய்ப்பு பெற்றுத்தருவதாகக் கூறி தலா இலங்கையர் ஒவ்வொருவரிடமிருந்தும் 5000 மலேசிய ரிங்கிட் பணத்தை குறித்த உள்ளூர் முகவர் பெற்றுள்ளார்.

அதேவேளை குறித்த இலங்கையர்கள் மலேசியாவிற்கு சட்டபூர்வமாக வந்துள்ள போதும் அவர்களின் கடவுச்சீட்டு காலாவதியாகியுள்ளதாக கஜேந்திர பகதூர் தெரிவித்தார்.

மீட்கப்பட்ட இலங்கையர்கள் 6 பேரும் மலாக்காவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் இவர்கள் நாடுகடத்தப்படுவார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)



சீன அரசாங்கத்தின் நிதியுதவியுடன் ஏ-9 வீதியில் மாங்குளச் சந்தியில் அமைந்துள்ள பிரதான பாலத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதைப் படத்தில் காணலாம்.

(படம்: மல்லாவி செய்தியாளர்)

# இலங்கை சட்டத்தரணிகள் பேரவையின் தீர்மானம் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல

## சர்வதேச சட்டத்தரணிகள் பேரவை கடும் எதிர்ப்பு

இலங்கை சட்டத்தரணிகள் பேரவையினால் அண்மையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு சர்வதேச சட்டத்தரணிகள் பேரவை கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழு நியமனத்திற்கு எதிராக இலங்கை சட்டத்தரணிகள் பேரவை அண்மையில் தீர்மானம் நிறைவேற்றியிருந்தது.

எனினும் இந்தத் தீர்மானம் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என சர்வதேச சட்டத்தரணிகள் பேரவை அறிக்கை ஒன்றின் மூலம் சுட்டிக்காட்டியுள்ளது.

மனித உரிமை, சட்டம் ஒழுங்கு மற்றும் ஜனநாயகம் ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக குரல் கொடுப்பதே சட்டத்தரணிகள் பேரவையின் கடமையாகும் என அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் காத்திரமான நடவடிக்கைகளை எடுக்க இலங்கை சட்டத்தரணிகள் பேரவை நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது இலங்கை அரசாங்கம் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளினால் சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமை சட்டங்கள் மீறப்பட்டுள்ளனவா என விசாரணை நடத்தி குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு தண்டனை விதிக்கும் நோக்கில் நிபுணர் குழு நியமிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மனித உரிமை விவகாரத்தில் சர்வதேச சமூகத்துடன் ஒன்றிணைந்து காத்திரமான நடவடிக்கை எடுக்க இலங்கை சட்டத்தரணி பேரவை நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# யாழிலிருந்து வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் தபால்களை துரிதமாக விநியோகிக்க ஏற்பாடு

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் தபால் பொதிகளை நேரடியாகக் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கொழும்பு மத்திய தபால் திணைக்கள உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இப் புதிய நடைமுறையின் மூலம் யாழ். பிரதம தபாலகத்தில் சேர்க்கப்படும் வெளிநாடுகளுக்கான அனைத்துத் தபால்களும் தபாலகத்திலேயே வைத்து சுங்கப் பகுதியினரால் சோதனைக்கு உட்படுத்தப்படும்.

பின்னர் அவை நேரடியாக வாகனம் மூலம் யாழ்ப்பாணத்திலிருந்து கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்படும். அங்கிருந்து அவை விமானம் மூலம் வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்லப்படும் என தபால் திணைக்கள உயரதிகாரி தெரிவித்தார்.

இந்தச் சேவை மூலம் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் தபால் தாமதம் இன்றித் துரிதமாக கிடைப்பதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

இந்த புதிய சேவை மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்த நேரடித் தபால் சேவையை ஆரம்பித்து வைப்பதற்காக தபால் மா அதிபர் எம்.கே. திஸாநாயக்க விரைவில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளார் என்றார். (ஸ்ரீ-2)

# இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபன முன்னாள் தலைவர் தேவதாசன் மீது வழக்கு

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மிக முக்கிய பிரமுகர்களில் ஒருவர் என்று இலங்கையின் புலனாய்வுப் பிரிவினரால் நம்பப்படுகின்ற கனகசபை தேவதாசனுக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு உள்ளது.

இவர் 2008 ஆம் ஆண்டு ஜூன் மாதம் பிடிக்கப்பட்டார். இவரது கொட்டாஞ்சேனை அலுவலகத்தில் இருந்து வெடிபொருட்கள், ஆயுதங்கள் என்பன மீட்கப்பட்டன.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்பு வைத்து இருந்தவர் என்றும் புலிகள் இயக்கத்துக்காக கொழும்பில் குண்டுத் தாக்குதல்களை நடத்தி இருந்தார் என்றும் நீதிவான் முன்னிலையில் இவர் ஒப்புக்கொண்டு இருந்தார்.

ஆயினும் கடந்த மூன்று வருடங்களாக வழக்கு தாக்கல் செய்யப்படாமல் கொழும்பு மகசின் சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டு இருந்தார். வழக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று கோரி ஏராளமான தடவைகள் உண்ணாவிரதப் போராட்டத்திலும் ஈடுபட்டு வந்துள்ளார்.

இந்நிலையில் இவருக்கு எதிரான வழக்கு நேற்று முன்தினம் தாக்கல் செய்யப்பட்டது. இவர் நீதிமன்றில் ஆஜராக்கப்பட்டார். நீதிமன்றம் வழக்கை ஒக்டோபர் 12 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தது. இவர் இலங்கைத் திரைப்படக் கூட்டுத்தாபன முன்னாள் பணிப்பாளர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# கலாநிதி சோ.கிருஷ்ணராஜா நினைவுப் பேருரை-2011

04

## பல்வகைகள் ஒன்று சேர்தல்

## [Assemblage of Multiplicity]

ஆனந்த குமார...

அவர் வேத, உபநிடதங்களிலிருந்தும் புராணங்களிலிருந்தும் இந்திய தத்துவங்களிலிருந்தும் தனது பொதுச் சிந்தனையை உருவாக்கினார். இந்திய சிற்பங்கள் கற்பனை மீறியவை; யதார்த்தமானவையல்ல



**கலாநிதி மௌனகுரு**
**யாழ் பல்கலைக்கழகம்**

என மேற்கு நாட்டு கலா விமர்சகர்கள் குறை கூறியபோது, இந்திய சிற்பங்களைப் புரிந்து கொள்ள இந்திய தத்துவங்களையும் புராணங்களையும் வழிபாட்டு முறைகளையும் அறிந்து கொள்ள வேண்டும் என்றார். இந்தியச் சிற்பம், ஓவியம் என்பன தனியாள் முயற்சியன்று. காலம் காலமாக அச்சமூகம் சேர்த்துக் கொண்ட பண்பாடுகளின் கூட்டு; மொத்தக் குறியீடு என்றார். உதாரணம் நடன மிடும் சிவபெருமான். பல்வேறு புராணக்கதைகள் காலந்தோறும் இணைந்ததன் காரணமாக கலைஞன் ஒருவனின் தியானத்தில் ஒரு கால கட்டத்தில் உருவான காட்சி தரிசனமே ஆனந்த நடனமிடும் சிவனாகும் என்றார். ஆனந்தத் தாண்டவமாடும் நடராஜர் சிலை பன்மைகளின் சேர்க்கையாகும்.

இந்திய தத்துவத்தின் வேதோபநிடதங்களையும் புராண இதிகாசங்களையும் ஆகமம்சார் ஆலய கட்டிடச் சிற்ப ஓவியங்களையும் அரண்மனைசார் கலைஞர்களையும் (ராஜபுதன ஓவியம் மத்தியகால சிங்களக் கலை) பற்றிப் பேசிய ஆனந்த குமாரசாமி விளிம்பு நிலைக் கலைகளையும் கிராமிய நடனங்களையும் இசைகளையும் கண்டு கொள்ளவில்லை. அவர் கலா விமர்சனம் மேனிலை சார்ந்ததாகவே இருந்தது. சமூகத்தின் விளிம்புவரை செல்லவில்லை. அது அவர் பிழையுமில்லை.

**வையமூப்பன் ஆனைக்குட்டி**
**(1918-2000)**

வையமூப்பன் ஆனைக்குட்டி மட்டக்களப்பின் களுதாவளைக் கிராமத்தைச் சேர்ந்த சிறுபான்மைச் சமூகத்தில், பறை அறையும் சமூகத்தில் பிறந்த ஒரு சொர்ணாளிக் கலைஞர். சொர்ணாளி என்பது ஒரு சிறிய ஊது குழலாகும். மரத்தினாற் செய்யப்பட்ட இது நாதஸ்வரத்தின் மிகமிகச் சிறிய வடிவமாகும். இது உச்சஸ்தாயி ஒலியை எழுப்பும். இக்குழலில் அமைந்துள்ள துவாரங்களில் விரல்களை அழுத்தி ஓசை பேதங்களைச் சொர்ணாளிக் கலைஞர் உருவாக்குவர்.

ஆனைக்குட்டியின் பாட்டன் 1838 ஆம் ஆண்டுகாலப் பகுதியில் வாழ்ந்தவர். இவரும் ஒரு சொர்ணாளிக் கலைஞரே. மட்டக்களப்பு மண்டூர் கந்தசுவாமி கோயிலிற் பறைமேள இசையுடனேயே சுவாமி வலம்வரும். வெறும் பறைமேள ஒலியுடன் சொர்ணாளியையும் இணைக்கலாம் எனக் கூறி சொர்ணாளியின் இசையை முருகன் கோயிற் பறையுடன் இணைத்த வையமூப்பன் ஆனைக்குட்டியின் பாட்டனாரான குளத்து மூத்தானிடமிருந்து இவ்விசைக் கலையைப் பேரனான ஆனைக்குட்டி பெற்றுக் கொண்டார்.

சொர்ணாளி வாசிக்கும்போது வரும் ஏற்ற இறக்கங்கள் சுவாரசியமானவை. ஒரு பொருளை நாம் எங்கேனும் மறைத்து வைத்த பின்னர் பறை வாசிக்கும் குழுவிலுள்ள ஒருவர் கண்ணை நாம் இறுக்கமாக கட்டிவிட்டால் சொர்ணாளியின் இசை வழிகாட்டலில் அவர் நடந்து சென்று மறைவிலுள்ள அப்பொருளை எடுப்பார். இது பறை மேளக்கூத்தில் நடக்கும் ஒரு சம்பவமாகும். சொர்ணாளி இசை அங்கு வழிகாட்டும் உரைபோலப் பயன்படுத்தப்படுகிறது.



சோ. கிருஷ்ணராஜா

**19 ஆம் நூற்றாண்டின் பின் ஈழத்தமிழர் மத்தியில் உருவான கலை - இலக்கியப் போக்குகளை தெரிந்தெடுக்கப்பட்ட சிலருக்கூடாகப் புரிந்து கொள்ளல்**

வையமூப்பன் ஆனைக்குட்டி சொர்ணாளிக் கலைஞர் மாத்திரமன்று, அச்சமூகத்தின் மூப்பனுமாவார். மந்திரம், வைத்தியம் சோதிடம் அறிந்தவராகவும்; களுதாவளை மாரியம்மன் கோயிற் பூசகராகவும் இருந்தார். கணீரென்ற இனிமையான குரலிற் பாடும் நாட்டுப்புற இசைக்கலைஞராகவும் இருந்தார்.

(தொடரும்)

---

# எமது சமூகத்தின் சமகால சவால்களும் கல்வியும்

04

**யாழ்/தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் நிறுவுநர், பாவலர் தெ. அ. துரையப்பாபிள்ளை நினைவுப்பேருரை-2011**

தொழிற் சந்தை....

மொத்த தேசிய உற்பத்தியில் சேவைத்துறையின் பங்கு 59.5% ஆக உயர்ச்சியடைய கைத்தொழிற்றுறை 28.4% த்தினையும் விவசாயத்துறை 12.1% த்தினையும் கொண்டுள்ளதாக 2009ஆம் ஆண்டின் மத்திய வங்கி அறிக்கை குறிப்பிடுகின்றது.

கல்வியும் தொழிற்பயிற்சியும் வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களின் தொலைதூரக் கல்வியும் இணைக்கப்பட்ட வளாகங்களும் இலங்கையின் மனித வளத்தினை அறிவுசார்ந்ததாக செழுமையூட்டின. பிராந்திய தேசிய மற்றும் சர்வதேச தொழிற் சந்தையில் இலங்கையின் தொழிற்படை போட்டியிட்டு வெற்றியடையக்கூடியளவிற்கு ஆளுமை கொண்டதாக உருமாறியுள்ளது. ஆனால் இவையாவும் எமது தேசத்தின் வடக்குக் கிழக்கிற்கு வெளியேயுள்ள பகுதிகளில் மட்டுமே சாத்தியமாகியது. யுத்தம் மற்றும் யுத்தம்சார்ந்த கொள்கை வரையறைகள் காரணமாகவும் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் தனியார் துறையினர் முதலிடத் தயங்கியதாலும் மக்கள் தொடர்ச்சியாக தசாப்த காலத்திற்கு மேலாக இடப்பெயர்வு வாழ்க்கைக்குள் நிர்ப்பந்திக்கப்பட்டமையினாலும் மனிதவள மேம்பாடும் அதற்கான வாய்ப்புக்களும் முற்றாக இல்லாமல் போயின. கிடைத்திருக்கக்கூடிய வாய்ப்புக்களும் முடங்கிச் செயலற்றிருந்தன. பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்கு கொண்டுவருவதற்காக விரைவுபடுத்தப்பட்ட புனரமைப்புப் பணிகளின் காரணமாக உட்பிரவேசித்துள்ள பாரியளவிலான தனியார்துறை முயற்சிகள் பயிற்றப்பட்டதும் வளப்படுத்தப்பட்டதுமான மனித வளத்திற்கான கேள்வியினைப் பாரியளவில் எழுப்பியுள்ளது. போர்ச் சூழலில் வளப்படுத்தலுக்கான வாய்ப்புகளற்ற நிலையில் மழுங்கிப் போயுள்ள வடக்கு கிழக்கின் பெருந் தொகுதியினரான தொழிற்படையினரால் இன்று அரசதுறையிலும் தனியார் துறையிலும் உருவாக்கப்பட்டுள்ள தொழில் வாய்ப்புக்களை உரித்தாக்கிக் கொள்வதற்காக, போர்ச்சூழலுக்கு வெளியே வாழ்ந்த மனிதவளத்துடன் போட்டியிட முடியாதுள்ளது.

எமது பிரதேசத்தின் தொழிற்படையானது உடலுழைப்பை வேண்டிநிற்கும் வினைத்திறனற்ற வாய்ப்புகளுக்குள் முடக்கப்படுவதனால், சமூகம் மீண்டும் முரண்பாட்டுச் சிக்கலுக்குள் பிரவேசிக்கும் அபாயநிலை தொடர்ந்தும் அதிகரிக்கின்றது.

**சேமிப்பும் மூலதனவாக்கமும்**

இயல்பாகவே சேமிப் பாற்றலினைக் கொண்டிருந்த வடக்குக் கிழக்கின் சமூகம் அதனைப் பிள்ளைகளின் கல்வியாகவும் தங்க ஆபரணங்களாகவும் குடியிருப்புக் காணியுடனான வீடாகவும் சிறிய சொந்தமான தொழில் முயற்சியாகவும் வங்கிகளில் சேமிப்பு வைப்பாகவும் தேக்கிவைத்துக் கொண்டது. நடுத்தர மற்றும் பெரிய தொழில் முயற்சிகள், வர்த்தக நடவடிக்கைகளில் அவர்களது சேமிப்பினளவு மிகக் குறைவாகவே காணப்பட்டது. நீண்ட யுத்தமும் அதனோடிணைந்த பொருளாதார மற்றும் போக்குவரத்துத் தடைகளும் யுத்தப் பிரதேசத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கைச் செலவினைப் பன்மடங்குகளாக பெருக்கியதனாலும் ஏதிலிகளாகப் பன்முறை இடம் பெயர்ந்தமையினாலும் அவர்களின் சேமிப்புக்கள் யாவும் கரைந்தும் தொலைந்தும் போயின.

**இயல்பு வாழ்க்கையினைக் கட்டி எழுப்புவதில் உள்ள தடைகள்**

**திருமதி.பிரேமாவதி செல்வின் இறேனியஸ்**
**மேலதிகமாகாணக் கல்விப்பணிப்பாளர்,**
**மாகாணக் கல்வித் திணைக்களம்,**
**வடமாகாணம்.**

வடக்குக் கிழக்கின் ஒட்டு மொத்தச் சமூகமுமே தமது வாழ்க்கையினை மீளக்கட்டியெழுப்ப வேண்டிய நிலையில் உள்ளது. குடியிருப்புக்கள், சமூக உட்கட்டுமான வசதிகள், தொழில்வாய்ப்புக்கள் என விரியும் முன்னுரிமைப்பட்டியலுடன் விசேட கவனத்துக்குரிய மனித வளத்தொகுதியினரும் கருத்திற் கொள்ளப்பட வேண்டியவராயுள்ளனர்.

(தொடரும்)

# புத்திக்கூர்மையும் செயற்திறனும் மிக்க 5 ஆம் எண்ணில் பிறந்தவர்களே!

எந்த வகையான சோதனைகளை யும் சிரித்துக் கொண்டே சமாளித்து விடுவார்கள். தன்னம்பிக்கை மிகுந்த வர்கள். மற்றவர்களைவிட அறிவுத் திறனும் திறமையும் உண்டு!

இவர்கள் நெளிவு, சுழிவுகள் மிகத் தெரிந்தவர்கள். சீக்கிரமாக அதுவும் அதிகமாக சம்பாதிக்க வேண்டும் என்ற முயற்சியுடன் தான் எந்தத் தொழிலிலும் ஈடு படுவார்கள்.

அதேபோன்று இலாபங்களை யும் அடைவார்கள். புதிய முயற் சிகளிலும் துணிந்து இறங்கி விடு வார்கள். துன்பம் வந்த போதும் இவர்கள் கலங்கமாட்டார்கள். மிகுந்த சிந்தனைகள் செய்பவர்க ளாதலால் நரம்பு பலவீனம் அடை யும். எனவே சில சமயங்களில் அதி கமான வேலை செய்யும் போது எளிதில் எரிச்சலும் கோபமும் கொள் வார்கள். எத்துறையிலும் வேகம், வேகம் என்று செயலாற்றுபவர்கள் இவர்கள் தான். பிறரைத் தூண்டி விட்டு வேகமாக எந்த வேலையை யும் மிரட்டி வாங்கி விடுவார்கள். உடல் உழைப்பில் நாட்டம் குறைவு. ஆனால் மூளை உழைப்பில் சிறந்து விளங்குவார்கள். மகா விஷ்ணு வைப் (புராணங்களில்) போன்ற திறமையும் புத்திசாலித்தனமும் உண்டு.

நிறையப் பணம் கிடைப்பதென் றால் தீய வழிகளிலும் துணிந்து இறங்கி விடுவார்கள். ஆனால் எப்படியாவது தண்டனையிலிருந்து தங்களது புத்தியால் தப்பித்துக் கொள்வார்கள். இவர்களைப் புகழ்ந்தால் அப்படியே மயங்கி விடு வார்கள். எனவே இவர்களைப் புகழ்ந்தே மற்றவர்கள் தங்களது செயல்களை இவர்களிடம் செய்து கொள்ளலாம்.

அனைத்துப் பிரச்சினைகளுக்கும் எளிதில் தீர்வு சொல்லி விட்டுவிடு வார்கள். டாக்டர், வியாபாரிகள், முகவர்கள் போன்று பணம் சம் பாதிக்கும் . தொழில்களிலேயே இவர்களது எண்ணம் செல்லும். வெளிநாடு, வெளியூர் செல்வதென் றால் உடனே புறப்பட்டு விடுவார் கள். தங்களது பேச்சிலும் முடிவு எடுப்பதிலும் வேகமாகச் செயற்படு வார்கள். மற்றவர்களுக்குப் புரிய வில்லையென்றால் கோபம் எளிதில் வந்துவிடும். அதிக உழைப்பும் ஓயாத அலைச்சலும் ஆற்றலும் புத்தி சாதுர்யமும் அதிகம். சூதாட்டம், பந்தயம், புரோக்கர் தொழில் மூலம் பொருள், பணம் குவிக்கும் யோகம் உண்டு.

காதல் விடயங்களில் ஈடுபாடு உண்டு. காதலிப்பவரையே மணக் கும் தைரியமும் பிடிவாதமும் உண்டு. வசதியான மனைவியையே தேடுவார்கள். எவ்வளவு பெரிய காரியமானாலும் பயமோ தயக் கமோ இன்றித் துணிந்து ஈடுபட்டு அதை வெற்றியாக மாற்றிக் காட்டு வார்கள். 5 ஆம் எண்ணின் பலம் குறைந்தவர்கள் தீய காரியங்களில் துணிந்து இறங்குவார்கள். பிறரை வஞ்சித்தல், பொய் சாட்சி சொல் லுதல், ஏமாற்றிப் பிழைத்தல், போர் ஜரி போன்றவற்றில் ஈடுபட்டுக் குறு க்கு வழியில் பணம் சம்பாதிப்பார்கள். அரசாங்கப் பணியைவிடச் சொந்தத் தொழிலே சிறப்புத்தரும். கூட்டு எண் கள் ஒத்து வந்தால் மட்டுமே அரசாங் கப் பணி சிறப்புத் தரும். இந்த எண் காரர்களை வேலைக்கு வைத்து முத லாளிமார் இலாபம் சம்பாதித்து விடு வார்கள். இவர்கள் ஜனவசியம் நிறைந் தவர்கள். எனவே இவரைச் சுற்றி லும் எப்போதும் மக்கள் இருந்து கொண்டே இருப்பார்கள். ஒருவிதக் குருட்டுத் தைரியம் இவர்களுக்கு மன தில் இருந்து கொண்டே இருக்கும். புதிய சாதனைகளை விரைந்து செய்ய வேண்டும் என்ற விருப்பம் நிறைந்த வர்கள். அடுத்தவர்களின் கருத்துப் படி இவர்கள் நடந்தால் தோல்விகள் தான் அதிகமாகும்.

இவர்களுக்கு இறைவனின் அரு ளால் திடீர் யோகங்கள் அல்லது ஞானோதயம் ஏற்படும். அதன்படி இவர்கள் செயலாற்றினால் வெற்றி நிச்சயம். இவர்கள் பணத்திற்கு ஆசைப் பட்டுத் தாங்கள் செய்யும் தொழிலை அடிக்கடி மாற்றிக் கொள்ளக்கூடாது.

நிரந்தரமான ஒரு தொழிலை தேர்ந் தெடுத்து அதில் புதிய வழிமுறைக ளையும் புதுமையையும் புகுத்தி வெற்றி பெற வேண்டும். ஆழம் தெரியாமல் ஒன்றில் இறங்கக்கூடாது. செய்யும் தொழிலைப் பிடிக்காமல் பாதியிலேயே விட்டுவிட்டு அடுத்த தொழிலில் இறங்கக்கூடாது.

இவர்கள் இரவில் நெடுநேரம் சிந் தித்துக் கொண்டே இருப்பார்கள். இதனால் இரவில் தூக்கம் குறையும். மனச்சோர்வுகள், நரம்புக் கோளாறு கள் ஏற்படும். எனவே தினமும் 6 முதல் 8 மணி நேரம் தூங்குவதைப் பழக் கமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

தியானம், உடற்பயிற்சி போன்ற வற்றில் ஈடுபட்டு மனதைச் சலன மில்லாமல் வைத்துக் கொள்ளப் பழக வேண்டும்.

பின்பு உடல் நலம் தானே வரும். சுறுசுறுப்பும் வேகமும் இலாப நோக் கும் இவர்கள் கூடப்பிறந்தவை. எனவே வியாபாரம், கமிஷன் தொழில், பயண முகவர்கள், விற்பனை பிரதி நிதிகள், அரசியல் போன்ற மக்கள் தொடர்புத் தொழில்கள் மிக்க நன்மை தரும்.

**உடல் அமைப்பு/உடல் நலம்**

சற்று சதைப்பிடிப்பான உடல் அமைப்பு அமையும். நடுத்தரமான உயரமும் மற்றவர்களைக் கவர்ந்தி ழுக்கும் முகமும் கண்களும் உண்டு. நிமிர்ந்த பார்வையும் வேகமான நடையும் உண்டு.

**அதிர்ஷ்ட தினங்கள்**

ஒவ்வொரு மாதமும் 5,14,23 ஆகிய திகதிகளும் 9,18,27 ஆகிய திகதிக ளும் மிக அதிர்ஷ்டமானவை. அதே போன்று கூட்டு எண் 5 அல்லது 9 வரும் தினங்களும் அதிர்ஷ்டமானவையே! இவர்களுக்கு மற்ற அனைத்து எண் காரர்களும் உதவுவார்கள். இருப்பி னும் 5,9 எண்காரர்கள் இவர்களுக்கு மிகவும் நன்மை செய்வார்கள்.

**அதிர்ஷ்ட இரத்தினம்**

இவர்களுக்கு அதிர்ஷ்ட இரத்தி னம் வைரம் எனப்படும். இந்தக் கற்களில் தரமான கற்கள் கிடைப்பது அரிதாக உள்ளது. ZIRCON எனப் படும் கற்களும் இவர்களுக்கு சிறந்த பலன்களையே அளிக்கும்.

அதிர்ஷ்டநிறங்கள் சாம்பல்நிறம் மிகவும் ஏற்றது. அனைத்து இலே சான வண்ணங்களும் ஏற்றவையே மினுமினுக்கும் உடைகளும் மினு மினு க்கும் வண்ணங்களும் நன்மையே புரியும். கறுப்பு, சிவப்பு, பச்சை போன்ற ஆழ்ந்த வண்ணங்களை நீக்கிக் கொள்ளவும்.

**முக்கிய குறிப்பு**

இவர்களுக்கு நரம்புச் சக்தி குறைவு. எனவே குழந்தைச் செல்வம் தடைப் படும். மனைவியின் எண்களில் 5 எண் வந்தால் குழந்தைச் செல்வத்தைக் குறைத்து விடும்.

எனவே மனைவியைத் தேர்வு செய்வதில் குழந்தைச் செல்வம் உள்ள எண்களாகத் தேர்வு செய்து கொள்ளவும். குடும்பத்தில் தங்களது வேகமான பேச்சையும் செயல்களை யும் குறைத்துக் கொண்டால் இன்ப வாழ்க்கை அமையும். உடல் உழைப் பிலும் சற்று ஈடுபட வேண்டும். அதுவே உடல் நலத்திற்கு உகந்த தாகும்.

**5 ஆம் எண்ணில் பிறந்தவர்கள்**

புதன் கிரகத்தின் முழு அம்சம் பெற்றவர்கள். நல்ல தெய்வீக வாழ் க்கை அமையும். அறிவும் தெளிவும் உண்டு.

இவர்கள் மற்றவர்களை மதிப்ப வர்கள். அழகான தோற்றம் உடைய வர்கள். இவர்களின் பேச்சிலும் நடத்தையிலும் ஒருவித ஈர்ப்புச் சக்தி உண்டு. சிறுவயது முதலே குறிப் பிட்ட இலட்சியத்துடன் வாழ்க் கையை நடத்துவார்கள். மற்றவர் களை ஏமாற்றத் தெரியாது.

**14 ஆம் திகதி பிறந்தவர்கள்**

இவர்கள் மிகுந்த அதிர்ஷ்டம் உடையவர்கள். பயணத்தில் சலிக் காத நாட்டம் இவர்களுக்கு இருக் கும். பலர் புகழ்பெற்ற வியாபாரிக ளாக இருப்பார்கள்.

இருந்தாலும் இவர்களது வாழ்க் கையில் அடிக்கடி விபத்துகள், சரிவு கள் ஏற்படும். இறைவனின் அரு ளால் இவர்களுக்கு துன்பங்களைச் சமாளிப்பதற்கான சூழ்நிலையும் அறிவும் உருவாகும். காதல் விடய ங்களில் கவனமாக இல்லாவிட்டால் பின்பு வாழ்க்கையே கசந்து விடும். மக்களைக் கவர்கின்ற சிறந்த எண் இது. எனவே எப்போதும் இவரைச் சூழ்ந்து 10 பேர் இருப்பார்கள். அரசி யலிலும் இவர்களுக்கு அதிர்ஷ்டம் உண்டு.

**23 ஆம் திகதி பிறந்தவர்கள்.**

இவர்கள் மிகுந்த அதிர்ஷ்டசாலி கள்.குருச்சந்திர யோகம் நிறைந்தவர் கள். அரசாங்கத்தரால் எப்போதும் ஆதரவு கிடைக்கும். சமூகத்தில் உயர்ந்த பதவிகள் கிடைக்கும். ஓர் அரசனைப் போன்று அனைத்து வசதிகளுடனும் வாழ்வார்கள். பண் பாடும் ஒழுக்கமும் நிறைந்தவர்கள். இவர்கள் உலகத்தில் சாதனை புரி யப் பிறந்தவர்கள். மக்களைப் கவர் கின்ற சக்தி நிறைந்தவர்கள். புன் னகை புரிந்தே மற்றவர்களை வென்று விடுவார்கள். இவர்கள் சொல்லும் வார்த்தைகளுக்கும் மறுப்பு இருக் காது. அனைத்து மக்களின் அன்பும் ஆதரவும் கிடைப்பதால் பெரும் வியாபாரிகளாகவும் ஆன்மீகம் மற் றும் அரசியல் துறைகளில் புகழ் பெற்றும் விளங்குவார்கள்.

**எண் 5 க்கான (புதன்) தொழில்கள்**

இவர்கள் கதை, கவிதை, நாட கம் எழுதல், சிற்பம் செதுக்குதல், ஜோதிடம் பார்த்தல், காகிதம், மொச்சை, பயறு, மஞ்சள், முத்து, வெற்றிலைப் பாக்கு கொடி வகை கள் போன்ற வியாபாரங்கள்/தொழில் கள் நன்மை பயக்கும். கல்வித்துறை, கணக்குத்துறை, தபால்துறை போன் றவற்றில் பணி செய்தல் சொற் பொழிவாற்றுதல், புரோகிதம் செய் தல் போன்றவையும் ஒத்துவரும். ஜோதிடம் போன்ற சாஸ்திர ஆரா ய்ச்சியிலும் ஈடுபடுவார்கள். சிலர் நாட்டின் தூதுவர்களாகவும் இருப் பார்கள்.

பொதுவாக அனைத்து வியாபா ரங்களும் இவர்களுக்கு நன்மை தரும். ஆனால் பொருட்கள் , கரு விகள் உற்பத்தித் துறைகளில் இறங்கக்கூடாது. சந்தைப்படுத்தல் மற்றும் புரோக்கர் தொழில்கள் நன்மை தரும். சொந்தத் தொழில் செய்யவே இவர்கள் விரும்புவார்கள்.

இவர்கள் மற்றவர்களிடம் வேலை செய்யும் போது முதலாளிமாருக்கு பல ஆலோசனைகளையும் பணம் சம்பாதிக்கும் வழிமுறைகளையும் கூறுவார்கள்.

அதனால் முதலாளிகளால் மிக விரும்பப்படுவார்கள். பொதுவாக தனியார் நிறுவனங்களில் வேலை செய்வார்கள். அடிக்கடி தொழிலை மாற்றும் இயல்பினர்.

சம்பள உயர்வே இவர்களது நோக் கம். ஏதாவது உப தொழில் செய்து வருமானத்தை பெருக்குவதில் நாட்ட முடையவர்களாக இருப்பார்கள். விற்பனைப் பிரதிநிதிகள் போன்ற வற்றிலும் நன்கு பிரகாசிப்பார்கள்.

அறிவியல் துறைப் பணிகள், கலைத் துறை, பேச்சாளர்கள் போன்ற துறை களும் நன்கு அமையும். இவர்கள் அறிவினால் உழைப்பவர்கள்.

மற்றவர்களை வசியம் செய்து தங்களின் காரியங்களை சாதித்துக் கொள்வார்கள். நடிகர்கள், நடிகை கள், எழுத்தாளர்கள், வியாபாரிகள் இந்த எண்ணில் பிறந்திருப்பார்கள். வணிக முகாமைத்துவம், கணிதம், செய்தி சேகரிப்பாளர்களாகவும் வெற்றி பெறுவார்கள். (முற்றும்)

# "படையினர் சம்பந்தப்பட்டவில்லை" பலாலி படைத்தலைமையகம் மறுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சிப் பகுதிகளில் படைத்தரப்பினர்கள் உதவியுடன் யுவதிகள் தென்னிலங்கைக்கு அழைத்துச் செல்லப்படுவதாக வெளியான செய்தியை பலாலி படைத்தலைமையகம் மறுத்துள்ளது.

இது தொடர்பாக லெப்டினன் கேணல் ஆர்.பி.பி.நாணயக்கார கையொப்பமிட்டு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பு வருமாறு,

''தென்னிலங்கைக்கு யுவதிகளை வேலைக்கு அனுப்ப வேண்டாம். அனோமா திஸாநாயக்க வேண்டுகோள்'' என்ற தலைப்பிட்டு 27.06.2011 ஆம் திகதி வலம்புரி நாளிதழில் செய்தி பிரிசுரமாகியிருந்தது.

மேற்படி செய்தியில் கிளிநொச்சிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் கடந்த இரு மாதங்களுக்கு முதல் சென்ற சில நபர்கள் இலங்கைப் படைத்தரப்பினரின் உதவியுடன் பெண் பிள்ளைகளை தென்னிலங்கைக்கு அழைத்துச் சென்றனர்.

இவ்வாறு வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாக அழைத்துச் சென்ற போதிலும் அவர்கள் பாலியல் தொழிலிலேயே ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்ற பகுதியில் படைத்தரப்பினர் வலிந்து யுவதிகளை அந்நிய நபர்களுடன் அனுப்பியது போன்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்துகிறது.

இது தற்போது யாழ். மாவட்டத்தின் படைத்தரப்பினருக்கும் பொது மக்களுக்குமிடையேயான சமூக உறவில் பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் மக்கள் படையினர் மீது கொண்டுள்ள நம்பிக்கையை சிதறடிப்பதாகவும் அமைந்துள்ளது.

மேலும் மேற்படி காலப்பகுதியில் யாழ். படைத்தரப்பினர் பெண் பிள்ளைகளை தென்பகுதிக்கு அழைத்துச் செல்ல யாருக்கும் உதவி ஒத்துழைப்புக்களை வழங்கவில்லை என்பதனை தெரிவிப்பதுடன் இச் செய்தியானது உண்மைக்குப் புறம்பானது என்பதையும் படையினர் பற்றிய தவறான கருத்துக்களை யாழ்.படைகளின் தலைமையகம் மறுக்கின்றது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஏ)

# தேசிய மொழிகள் கருத்திட்டத்திற்கு கனடா 5.6 மில். டொலர் நிதியுதவி

(கொழும்பு)

உத்தியோகபூர்வ மொழிகள் கொள்கையை நடைமுறைப்படுத்தும் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு உதவுவதற்கு கனடா முன்வந்துள்ளதாக சர்வதேச கூட்டுறவுக்கான கனேடிய அமைச்சர் அறிவித்துள்ளார்.

தேசிய மொழிகள் கருத்திட்டத்திற்காக கனேடிய சர்வதேச அபிவிருத்தி முகவரமைப்பினூடாக 5.6 மில்லியன் டொலர்களை உதவியாக வழங்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த 1950ஆம் ஆண்டு கொழும்புத்திட்டம் ஸ்தாபிக்கப்பட்டது முதல் இலங்கையும் கனடாவும் அபிவிருத்திக் கூட்டுறவில் ஒரு நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளன. இக் கூட்டுறவு இன்றுவரையிலும் தொடர்கின்றது.

இலங்கையில் கனேடிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமானது நிலையான பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துவதை, நோக்கமாக கொண்டுள்ளது என சர்வதேச கூட்டுறவுக்கான கனேடிய அமைச்சர் தெரிவித்தார்..

இந்த முயற்சிகளில் உத்தியோகபூர்வ மொழிகளை ஊக்குவிப்பதை ஒரு முக்கிய அம்சமாக அரசாங்கம் இனம் கண்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

உத்தியோகபூர்வ மொழிகளைப் பாதுகாக்கும் மேம்படுத்தும் நடைமுறை ரீதியான அனுபவத்தையிட்டு கனடா பெருமை அடைகிறது எனத் தெரிவித்த அவர், தேசிய மொழிகள் கருத்திட்டத்திற்கான கனேடிய பங்களிப்பினூடாக நாம் எமது அனுபவங்களையும் நிபுணத்துவத்தையும் இலங்கையுடன் பகிர்ந்து கொள்ளவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# மன்னாரில் எண்ணெய் அகழும் பணிகள் ஓகஸ்டில் ஆரம்பம்

## இந்தியா அறிவிப்பு

(கொழும்பு)

மன்னார் கடற்பரப்பில் எண்ணெய் அகழும் பணிகள் இவ்வருடம் ஓகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக இந்தியா அறிவித்துள்ளது.

இந்த அகழ்வுப்பணிகளின் போது எண்ணெய் வளங்கள் கண்டுபிடிக்கப்படடால் வர்த்தக ரீதியான உற்பத்திக்கு குறைந்தது இன்னும் ஆறு வருடங்கள் செல்லும் எனவும் இந்தியா தெரிவித்துள்ளது.

மன்னார் வடமேற்குக் கரையோரப்பகுதியில் எண்ணெய் மற்றும் எரிவாயு இருப்பதற்கான எட்டு இடங்கள் இனம்காணப்பட்டுள்ளன. இவற்றில் இரண்டு இடங்கள் சீனா மற்றும் இந்திய அரசாங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இது குறித்து இந்திய அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில்,

நாம் மூன்று கிணறுகளைத் தோண்டவுள்ளோம். கிணறுகள் தோண்டப்பட்டு நான்கு மாதங்களில் இப்பகுதியில் எண்ணெய் மற்றும் எரிவாயு உள்ளதா என்பதை கூறமுடியும். அப்படியிருக்கும் பட்சத்தில் இப்பகுதியில் எவ்வளவு எண்ணெய் மற்றும் எரிவாயு உள்ளதென்பதை மதிப்பிடுவதற்கு மேலும் இரண்டு வருடங்கள் வரை செல்லும். அப்படி எண்ணெய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் வர்த்தக ரீதியான உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு குறைந்தது ஆறு வருடங்கள் வரை செல்லும் என தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)

2011.07 01

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1798-நெப்போலியனின் படைகள் எகிப்தை அடைந்தன.

★ 1825-ஐக்கிய இராச்சிய நாணயங்கள் இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட நாணயங்கள் ஆக்கப்பட்டன.

★ 1851-அவுஸ்திரேலியாவில் விக்டோரியா குடியேற்றப் பகுதி நியூ சவுத் வேல்சில் இருந்து பிரிக்கப்பட்டது.

★ 1862-ரஷ்யாவின் அரச நூலகம் அமைக்கப்பட்டது.

★ 1867-பிரித்தானிய வட அமெரிக்கச் சட்டம் 1867 கனடாவின் அரசமைப்புச் சட்டமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஜோன் மாக்டொனால்ட் பிரதமராகப் பதவியேற்றார்.

★ 1873-பிரின்ஸ் எட்வேர்ட் தீவு கனடாக் கூட்டமைப்பில் இணைந்தது.

★ 1876-சேர்பியா துருக்கி மீது போரை அறிவித்தது.

★ 1881-உலகின் முதலாவது அனைத்துலக தொலைபேசித் தொடர்பு கனடாவின் நியூபிரன்ஸ்விக் மாநிலத்துக்கும் ஐக்கிய அமெரிக்காவின் மேய்ன் மாநிலத்திற்கும் இடையில் ஏற்படுத்தப்பட்டது.

★ 1916-முதலாம் உலகப் போர்: பிரான்சில் சொம் என்ற இடத்தில் இடம்பெற்ற சண்டையின் முதல் நாளில் 20000 பிரித்தானிய வீரர்கள் கொல்லப்பட்டனர். 40000 பேர் காயமடைந்தனர்.

★ 1921-சீனக் கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பிக்கப்பட்டது.

★ 1932-ஏபிசி (அவுஸ்திரேலிய ஒலிபரப்புச் சேவை) ஆரம்பிக்கப்பட்டது.

★ 1933-சீனர்களின் குடியேற்றத்தை கனடா நாடாளுமன்றம் தடை செய்தது.

★ 1947-இந்தியாவுக்கு முழு விடுதலையை ஒகஸ்ட் 15 ஆம் திகதியன்று வழங்க பிரித்தானிய நாடாளுமன்றம் முடிவெடுத்தது.

★ 1960-இத்தாலியிடம் இருந்து சோமாலியா விடுதலை அடைந்தது.

★ 1960-கானா குடியரசானது.

★ 1962-ருவாண்டா விடுதலை அடைந்தது.

★ 1962-பெல்ஜியத்திடம் இருந்து புருண்டி விடுதலை அடைந்தது.

★ 1967-ஐரோப்பிய சமூகம் உருவாக்கப்பட்டது.

★ 1970-ஜனாதிபதி யாஹ்யா கான் மேற்கு பாகிஸ்தானில் மாகாணங்களை அமைத்தார்.

★ 1976-மடெய்ரா தீவுகளுக்கு போர்த்துக்கல் சுயாட்சியை வழங்கியது.

★ 1978-அவுஸ்திரேலியாவின் வட மண்டலம் அவுஸ்திரேலிய பொதுநலவாயத்துக்குக் கீழ் சுயாட்சி பெற்றது.

★ 1979-சோனி நிறுவனத்தின் வோக்மன் அறிமுகம் செய்யப்பட்டது.

★ 1990-கிழக்கில் ஜேர்மனி டொச் மார்க்கை தனது நாணய அலகாக ஏற்றுக் கொண்டது.

★ 1991-பிராக்கில் இடம்பெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவில் வார்சா ஒப்பந்தம் அதிகாரபூர்வமாகக் கலைக்கப்பட்டது.

★ 1997-மக்கள் சீனக் குடியரசு ஹொங்கொங்கில் தனது ஆட்சியை ஆரம்பித்தது. 156 ஆண்டு கால பிரித்தானிய குடியேற்ற ஆட்சி முடிவடைந்தது.

★ 2002-சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் உருவாக்கப்பட்டது.

★ 2002-தெற்கு ஜேர்மனியில் இரண்டு விமானங்கள் வானில் மோதியதில் 71 பேர் கொல்லப்பட்டனர்.

★ 2004-காசினி- ஹியூஜென்ஸ் விண்கலம் சனிக் கோளின் சுற்று வட்டத்திற்குள் சென்றது.

★ 2006-கொழும்பில் சுதந்திர ஊடகவியலாளர் சம்பத் லக்மால் சில்வா இனந்தெரியாதோரால் கொலை செய்யப்பட்டார்.

### பிறப்புக்கள்

★ 1924-தி.ச.வரதராசன், ஈழத்து மறுமலர்ச்சி எழுத்தாளர் (இ.2006)

★ 1927-சந்திரசேகர், 11 ஆவது இந்தியப் பிரதமர்

★ 1935-டி.ஜி.எஸ்.தினகரன், இந்தியாவின் முன்னணி கிறிஸ்தவ மறைபரப்புனர்

★ 1961-கல்பனா சாவ்லா, விண்வெளி வீராங்கனை (இ.2003)

★ 1961-டயானா, வேல்ஸ் இளவரசி (இ.1997)

★ 1961-கார்ல் லூயிஸ், அமெரிக்க ஓட்ட வீரர்

### இறப்புக்கள்

★ 1965-வால்ரர் ஹமொண்ட், ஆங்கில துடுப்பாளர் (பி.1903)

★ 2001-நிக்கலாய் பாசொவ், ரஷ்ய இயற்பியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி.1922)

★ 1971-வில்லியம் பிராக், நோபல் பரிசு பெற்ற ஆங்கிலேயர் (பி.1890)

### சிறப்பு நாட்கள்

★ கானா - குடியரசு தினம் (1960)

★ சோமாலியா சுதந்திர தினம் (1960)

★ ருவாண்டா சுதந்திர தினம் (1962)

★ புருண்டி சுதந்திர தினம் (1962)

# கொஞ்சம் அமுதம் கொஞ்சம் விஷம்



## ஆன்மீகம் 37

"என் அப்பாவுக்கு எழுபது வயது. நடமாட்டம் குறைந்து விட்டது. 24மணி நேரமும் தனக்குத் தேவையானது பற்றியேதான் கவலைப்படுகிறார். வயதானால் சுயநலம் மிகுந்துவிடுமா? 'முதுமை கற்றுத் தருவதெல்லாம் ஒட்டுண்ணியாக மாறிவிடும் தந்திரம்' என்று அண்மையில் நான் படித்த கவிதை உண்மைதானோ?"

உங்களை மூப்பும் தள்ளாமையும் தாக்கும்போது நீங்கள் எப்பேர்ப்பட்ட ஒட்டுண்ணியாக இருக்கப்போகிறீர்கள் என்று யோசித்துப் பார்த்தீர்களா?

ஏதோ ஒரு கவிஞர் சொன்னாலும் சரி, நீங்கள் சொன்னாலும் சரி... முதியவர்களை ஒட்டுண்ணிகள் என்று நினைக்கும் சிந்தனையே மகா கேவலமானது.

பாதுகாப்பின்மை உணர்வு வந்தால்தான், சுயநலம் வரும். உங்கள் மீது முழு நம்பிக்கை இருந்தால், அப்படிப்பட்ட உணர்வு அவர்களுக்கு ஏன் வரப்போகிறது?

வயதானவர்களுக்கான தேவைகள் பற்றி உங்களுக்கு தெரியாதபோது, அவர்கள் அதைக் குறிப்பிட்டுக் கேட்கிறார்கள் இளமை காரணமாக இன்றைக்கு நீங்கள் யாரையும் சார்ந்திருக்க அவசியமில்லாமல் இருக்க லாம். இயலாமையும் தள்ளாமையும் முடக்கி வைத்துவிட்டதால், உங்கள் அப்பாவால் உடல்ரீதியாக உங்களுடன் போட்டிபோட முடியாது. அதற்காக?

ஓர் அரசன் தன் நாட்டில் வசிக்கும் முதியவர்களால் எந்த உதவியும் இல்லை என்பதால், 60வயது நிறைந்தவர்கள் அனைவரையும் கண்காணாத தீவில் கொண்டுபோய் விடச்சொல்லி உத்தரவு பிறப்பித்தான்.

மக்களின் கண்ணீருக்கு இடையில் உத்தரவு நிறைவேற்றப்பட்டது .

சில மாதங்கள் கழித்து, தீடீரென்று நாட்டில் கடும்மழை. ஊர் வெள்ளத்தில் மிதந்தது. நிலைமையைச் சாமாளிக்கச் சரியான தீர்வு கொடுப்பவருக்குப் பெரும் பரிசு வழங்குவதாக மன்னன் அறிவித்தான்.

குமரன் என்பவன் கொடுத்த யோசனை, மற்ற எல்லா யோசனைகளையும்விட மிகச் சிறப்பாக இருந்தது. அதை அமுல்படுத்தி, வெள்ளத்திலிருந்து மக்களைக் காப்பாற்றினான் அரசன்.

## அன்பு செய்வது கடமையா...?

அடுத்த வருடம், நாட்டில் கடும் தொற்று நோய் பரவியபோதும், குமரன் சொன்ன யோசனைதான் பயனுள்ளதாக அமைந்தது. அதற்கடுத்த வருடம் பஞ்சம் தாக்கியபோதும், குமரனின் ஆலோசனைதான் நாட்டைக் காப்பாற்றியது. குமரனால் மட்டும் எப்படிச்சரியான தீர்வு கொடுக்க முடிகிறது என்று அரசன் திகைத்துக் கேட்டான்.

"அரசே முதியவர்களை நீங்கள் நாடு கடத்தினீர்கள். ஆனால் நான் என் தந்தையை பிரிய இஷ்டமில்லாமல், அவரை என் வீட்டில் பரணில் ஒளித்து வைத்து, யாருக்கும் தெரியாமல் பராமரித்து வருகிறேன். உடலால் இயலாமல் போனாலும், அவருடைய பழுத்த அனுபவம்தான் நம்நாட்டில் ஒவ்வொரு முறை பிரச்சினை வந்தபோது தீர்வு சொன்னது" என்றான் குமரன்.

அரசன் தன் தவறை உணர்ந்து, நாடு கடத்திய முதியவர்களைச் சகல மரியாதைகளோடு தன் நாட்டுக்கு மீட்டுவந்தான்.

உண்மைதான் வயதானவர்கள் மொத்தமாகப் பயனற்றவர்கள் அல்ல!

நீங்கள் இந்த பூமியில் அடியெடுத்து வைத்த கணத்தில், உங்களுக்கான உணவைத் தேடிக்கொள்ளக்கூட உங்களிடம் எந்தத்திறனும் இல்லை. முற்றிலும் கையாலாகாமல் கிடந்த உங்களை உங்கள் அம்மா எடுத்து மார்போடு அணைத்து பாலூட்டவில்லை என்றால், என்னவாகி இருப்பீர்கள்? உணவு மட்டுமல்ல... மொத்த உலகமே உங்களுக்கு அவள்தானே?

என்றைக்காவது கடவுளை நேரில் சந்தித்து இருக்கிறீர்களா? கடவுள் தன்மைக்கு நெருக்கமாக நீங்கள் உணர்ந்த ஒரே நபர் உங்கள் அம்மாவாகத்தானே இருக்கமுடியும்?

இன்றைக்கு நீங்கள் ஏதோ ஒரு நிலையில் இருக்கிறீர்கள் என்றால், அது உங்கள் இளமைக் காலத்தை உங்கள் பெற்றோர் பராமரித்துத் தந்ததால்தானே ? வேர்களைக் கத்தரித்து விட்டுப் பூக்கள் செழிக்க வேண்டும் என்றால், எப்படி நடக்கும்?

"நானும் என் மனைவியும் வேலைக்கு போகிறோம். குழந்தைகள் கல்லூரிக்குப் போகிறார்கள். இருந்தாலும் என் கடமையிலிருந்து தவறாமல், அப்பாவை வீட்டில் வைத்துப் பராமரித்து வருகிறேன். இன்னும் என்னதான் செய்யமுடியும்?"

உங்களைச் சுற்றி இருப்பவர்களைக் கவனித்துக் கொள்வதை ஒரு கடமையாக மட்டுமே நினைத்தீர்கள் என்றால் அது அவர்களை இழிவுபடுத்துவதற்க்கு சமம்.

குழந்தையுடன் தினம் 15 நிமிடங்கள் செலவு செய்வதை உங்கள் கடமை என்று நினைத்துச் செய்தால், நீங்கள் ஒரு மோசமான தந்தை. மனைவியிடம் கடமை உணர்வோடு காதல் வார்த்தைகளை உதிர்ப்பவரானால், நீங்கள் மோசமான கணவர். வயது முதிர்ந்த அப்பாவைக் கவனித்துக் கொள்வதைக் கடமையாக நினைத்தால் நீங்கள் மோசமான மகன்.

கடமையாகச் செய்வதில் பாதியளவு இருந்தால் கூட, அன்பினால் செய்வதே மேன்மையானது. எந்தக்கட்டத்திலும் கடமை என்பது அன்புக்கு ஒரு மாற்றமாக மாற முடியாது.

இழப்பினாலோ வருத்தத்தினாலோ வரும் குடம் குடமான கண்ணீரைவிட அன்பினால் வெளிப்படும் ஒற்றைத்துளி கண்ணீருக்கு மதிப்பு அதிகம்.

இதயத்தில் அன்பு இல்லாமல், கடமை உணர்வோடு உங்கள் கைகள் வழங்கும் எதையும், அடுத்தவர் சந்தோஷமாக ஏற்றுக் கொள்வது இல்லை. ஒரு குற்ற உணர்வுடன் தான் ஏற்கிறார்கள். இந்த நிலைமைக்கு ஆளாகிவிட்டுபோமேஎன்று அது அவர்களுக்கு வேதனையைத்தான் தருகிறது.

உறவுகள் கசந்து போவதற்கு முக்கிய காரணமே, அன்பை வற்றிப்போக விட்டு விட்டு, வெறும் கடமை உணர்வோடு செய்யப் படும் செயல்கள்தாம்.


அன்பு என்பது பூரணமானது. உண்மையான அன்பில் எதிர்பார்ப்புகள் கிடையாது. ஏமாற்றங்கள் கிடையாது.

செய்வதைக் கடமையாக நினைத்து எரிச்சலுடன் செய்யாமல், அன்பு உணர் வோடு செய்து பாருங்கள். உறவுகள் அமுதமாகும்!

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# தரமான இலக்கியங்களை எவ்வாறு அடையாளம் காண்பது?

## 02




முன்பு ஓவியர் மணியம் இந் நவீனத்துக்கான ஓவியங்களை வரைந்தார். பின்பு அவரது மகன் மணியம் செல்வன் வரைந்தார். ஒரு சமயம் ஜெயகாந்தனிடம், "நீங்கள் சரித்திரக்கதைகள் படித்ததில்லையா?" எனக் கேட்டபொழுது,அவர் தனக்கு அம்புலி மாமா கதைகள் மிகவும் பிடித்தமானது' என்றார்.

இன்றும் பல வாசகர்கள் பொன்னியின் செல்வனுக்கு அப்பால், ரமணிச்சந்திரனுக்கு அப்பால் நகரவில்லை என்ற உண்மையையும் நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

தொடர்ச்சியான வாசிப்புப் பழக்கம் இருந்தாற்தான் தரமான இலக்கியங்களையும் இனங்காண முடியும்.

இந்தப்பழக்கமும் ஒரு வகைப் பயிற்சிதான். அதுபோன்று படைப்பு முயற்சியும் ஒருவகையில் பயிற்சிதான்.

ஒரு நாளில் 24 மணித்தியாலங்கள். இதில் உண்பது, உறங்குவது, வேலை செய்வது... இப்படியாக நேரம் ஒதுக்கிக்கொள்ளும் நாம் தினசரி வாசிப்பதற்கு என்று எத்தனை நிமிடங்களை ஒதுக்கிக்கொள்கிறோம்?

இன்று தமிழில் மாத்திரம் ஒருவருடத்தில் சுமார் ஆயிரம் சிறுகதைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அதாவது இலங்கை, தமிழகம், தமிழர்

**"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

புலம்பெயர்ந்த நாடுகள் மற்றும் மலேசியா, சிங்கப்பூர் இங்கெல்லாம் வெளியாகும் பத்திரிகைகள், சஞ்சிகைகள் யாவற்றிலும் கதைகள், கவிதைகள், விமர்சனங்கள் வெளியாகிய வண்ணம் இருக்கின்ற அதே சமயம் இணைய இதழ்களினூடாகவும் படைப்புக்களைப்பார்க்க, வாசிக்க முடிகிறது.

### படைப்பாளிக்ளுக்கும் வாசகருக்கும் இடையே உருவாகும் உறவு

படைப்பாளி எழுதுகிறார். அது பிரசுரமாகின்றது. வாசகர் படிக்கிறார். தமது ரசனையை அபிப்பிரயமாக மற்றவருக்குச் சொல்கின்றார். அல்லது விமர்சனமாக குறிப்பிட்ட படைப்பு வெளியாகியிருந்த பத்திரிகைக்கு அனுப்புகிறார்.

பத்திரிகை ஆசிரியரோ, அந்த விமர்சனம் தரமாக இருக்கும் பட்டசத்தில் பிரசுரிக்கின்றார். இங்கே பத்திரிகை கருத்துக்களமாக மாறுகின்றது.

படைப்பாளிக்கும் வாசகருக்கும் இடையே பத்திரிகை உறவுப்பாலம் அமைகிறது.

எனவே ஒரு ப்டைப்பாளி படைப்பை எழுதுவதுடன் பணிமுடியவில்லை. கைலாசபதி தினகரனில் ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் இளங்கீரனின் தொடர்கதையொன்று அதில் வெளியாகிக் கொண்டிருந்தது.

அத்தொடர்கதையில் ஒரு பாத்திரம் பத்மினி. அந்தப்பாத்திரத்தை நாவலாசிரியர், கதையில் சாகடிக்கப்போகிறார் என்பதை தொடர்வாசிப்பின் மூலம் அறிந்து கொண்ட ஒரு அபிமான வாசகர், ஒரு அஞ்சல் அட்டையில், "பத்மினி சாகக்கூடாது" என்று எழுதியிருந்தாராம்.

கைலாசபதி, சிறந்த விமாசகர். பின்நாளில் தமிழ் நாவல் இலக்கியம் என்ற நூலை எழுதிய பொழுது இந்த சுவாரஸ்யமான தகவலையும் பதிவு செய்தார்.

வாசகர் தரமான இலக்கியத்தை அடையாளம் காண்பதற்கு இந்தத் தகவல் உதவுமென நம்புகிறேன். வாசகர் இலக்கியப்படைப்புடன் ஒன்றிபோதல், தன்னையும் படைப்பில் வரும் பாத்திரத்துடன் ஒப்பு நோக்குதல், குறிப்பிட்ட ஒரு படைப்பில் தமக்குப்பிடித்தமான பாத்திரத்தின் பெயரை தமக்குப் பிறக்கும் அல்லது உறவினருக்குப் பிறக்கும் குழந்தைக்குச் சூட்டுதல்.

இப்படியெல்லாம் எங்கள் தமிழ் சமுதாயத்தில் நிகழ்ந்துதான் இருக்கிறது. ஒரு சாதாரண வாசகர் ஒரு எழுத்தாளரை எதிர்பாராத விதமாக சந்திக்கும் பொழுது (அபிமான எழுத்தாளராக இருக்கும் பட்சத்தில்)

**முருகபூபதி-அவுஸ்திரேலியா**

உங்களுடைய இந்தக்கதை படித்தேன் நன்றாக இருந்தது என்று அல்லது மோசமாக இருந்தது என்று ஏதோ ஒரு அபிப்பிராயத்தை சொல்லக்கூடும். அல்லது சொல்லாமலும் விடக்கூடும். இன்னுமொரு சிக்கலும் உண்டு. "உங்கள் கதைபடித்தேன் அது உங்களின் சொந்தக்கதையா?" எனக் கேட்கும் வாசகர்களும் இருக்கிறார்கள்.

(தொடரும்)

# இலங்கையில் மந்த போஷாக்கு நிலை அதிகரித்து வருகின்றது

## சுகாதார அமைச்சர் சுட்டிக்காட்டு



இலங்கையில் மந்த போஷாக்கு நிலை அதிகரித்து வருவதாகவும் இதனால் இலங்கையர்களின் உணவுப் பழக்கத்தில் மாற்றம் ஏற்பட வேண்டும் எனவும் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்.

ஆச்சரியமளிக்கத் தக்கவகையில் கொழும்பு மாவட்டமும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

மருத்துவ ஆராய்ச்சி நிறுவகம் மேற்கொண்ட ஆய்வொன்றின் மூலம் கோதுமை மா உணவுப் பொருட்களை அதிகமாக உட்கொள்வதால் நுவரெலியாவிலும் கொழும்பிலும் மந்த போஷாக்கு அதிகரித்திருப்பது தெரியவந்துள்ளது.

நுவரெலியாவில் நீண்டகால மந்த போஷாக்கு 41 சதவீதமாகவும் குறுகிய கால மந்த போஷாக்கு 11 சதவீதமாகவும் உள்ளது. கொழும்பில் இவை முறையே 29 மற்றும் 8 சதவீதமாகவுள்ளன. அரிசி, பாசிப்பயறு, கௌப்பி போன்ற போஷாக்கான ஆரோக்கியமான உணவுப் பொருட்களை தவிர்த்து விட்டு கோதுமை மாவினால் தயாரிக்கப்பட்ட உணவுப் பொருட்களை உண்ண பிள்ளைகளை பெற்றோர் நிர்ப்பந்திப்பதே இதற்குக் காரணம் என மருத்துவ ஆராய்ச்சி நிறுவகம் மேற்கொண்ட ஆய்வில் தெரியவந்துள்ளது என அமைச்சர் கூறினார்.

பாடசாலை மாணவர்கள் பாடசாலை முடிந்தவுடன் பிரத்தியேக வகுப்புகளுக்கு செல்ல வேண்டியிருப்பதால் அவர்களுக்கு ஆரோக்கியமான மதிய உணவை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு கிடைப்பதில்லை என்பது ஆபத்தானதாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மக்கள் குறிப்பாக பெண்கள் தமது வருமானத்தின் குறிப்பிடத்தக்க பகுதியை அழகுக் கலைக்காக ஒதுக்குவதாக இந்த ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இது மிக ஏமாற்றமளிப்பதும் ஆபத்தானதுமாகும். இலங்கை போன்ற குறைந்த வருமானம் கொண்ட நாடுகளில் உள்ள மக்கள் அழகுக்காக அதிகம் செலவிட முடியாது. அப்படி செய்தால் அது உணவுக்கான நிதி ஒதுக்கீட்டை பாதிக்கும். இது இலங்கையில் மந்தபோஷாக்கு நிலையை விளக்குகிறது என அவர் கூறினார்.

சரும அழகுக்கான பிரபல மருந்தொன்றை தயாரிக்கும் நிறுவனமொன்று அம் மருந்து தயாரிப்பை நிறுத்திவிட்டதாகவும் விரைவில் அதிக விலைகொண்ட மருந்தை அறிமுகப்படுத்தவுள்ளதாகவும் மருத்துவர்கள் தனக்கு அறிவித்துள்ளதாக அமைச்சர் கூறினார். அப்படி நடந்தால் இலங்கைப் பெண்கள் மேலும் அதிக நிதியை அழகுக்காக செலவிடுவர் எனவும் அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## கும்பாபிஷேகம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வட்டக்கச்சி கட்சன் வீதி அருள் மிகு சோதி விநாயகர் ஆலய மஹாகும்பாபிஷேகம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.15 மணி தொடக்கம் 10.50 மணிவரையுள்ள சுப மூகூர்த்தத்தில் நடைபெறவுள்ளது.

இதில் நாளை காலை 8 மணி முதல் மாலை 4 மணிவரை அடியார்கள் எண்ணெய்க்காப்பு சாற்றமுடியும். (ஸ்ரீ)

## கீரிமலை நகுலேஸ்வரா வித்தியாலயத்தின் இருமாடிக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது



(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கில் அமைந்துள்ள யா/ கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலயத்தின் இரு மாடிக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் கீரிமலையில் நடைபெற்றது. இதற்கான பிரதான அடிக்கல்லை வட மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் நாட்டிவைத்தார்.

கீரிமலை நகுலேஸ்வர தேவஸ்தானத்தில் இதற்கான விசேட பூசைகள் இடம்பெற்று அத்திவாரக்கற்கள் விருந்தினர்களிடம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்விற்கு கொழும்பிலிருந்து வருகை தந்த நிதி ஆணைக்குழுத் தலைவர், செயலாளர் மற்றும் அதிகாரிகளும், வட மாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் வே.தி. செல்வரெத்தினம், வடமாகாண மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் மு.இராதாகிருஷ்ணன், மாகாண பாடசாலை வேலைப்பகுதி பொறியியலாளர் ஏ.ஆண்டியப்பு, மாவட்ட பாடசாலை வேலைப் பகுதிப் பொறியியலாளர் ஜி.சிவபாலன், வலிகாமம் கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன், தெல்லிப்பழை கோட்டக்கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன், தெல்லிப்பழை உதவிப் பிரதேச செயலர் கு.பிரபாகரமூர்த்தி, நகுலேஸ்வரம் கிராம அலுவலர் த.நாகசுபதினி ஆகியோர் அடிக்கற்களை நாட்டி வைத்தனர்.

அத்துடன் கொழும்பிலிருந்து வருகைதந்த ஆணைக்குழுவினர் மேற்குறித்த பாடசாலையைப் பார்வையிட்டதுடன் க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான விஞ்ஞான கூடம் அமைப்பதற்கான ஆரம்பகட்ட நிதியாக 5 மில்லியன் ரூபா வழங்குவதற்கு சிபார்சு செய்தனர்.

மேற்படி பாடசாலையின் இருமாடிக் கட்டடமானது வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் மூலம் 84 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

## புலிகளின் பணத்தைக் கண்டுபிடிக்க பாதுகாப்பு தரப்பினர் தேடுதல் வேட்டை

(கொழும்பு)


விடுதலைப் புலிகளினால் திருகோணமலையில் புதைத்து வைக்கப்பட்டுள்ள தொண்ணூறு கோடி ரூபாவை தேடிப்பிடிக்கும் முயற்சியில் பாதுகாப்புத் தரப்பினர் ஈடுபட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகள் திருகோணமலை மாவட்டத்தில் பலமாக இயங்கிய காலப்பகுதியில் பிரஸ்தாப தொகைப் பணம் பிரதேச மக்களிடமிருந்து கப்பமாகப் பெறப்பட்டு சேகரிக்கப்பட்டிருந்ததாக கூறப்படுகின்றது.

அதனை பிளாஸ்டிக் கொள்கலன்களில் இட்டு தம்பலகாமத்தை அண்மித்துள்ள சூரங்கல் பிரதேசத்தில் விடுதலைப் புலிகள் புதைத்து வைத்துள்ளதாக கிடைத்துள்ள இரகசியத் தகவலொன்றையடுத்தே அதனைக் கண்டுபிடிப்பதற்கான முயற்சிகளை பொலிஸாருடன் இணைந்து இராணுவத்தினர் முன்னெடுத்துள்ளனர்.

கிழக்கு மாகாணத்தை விடுவிக்கும் நோக்கில் இராணுவ நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருந்ததன் காரணமாகவே விடுதலைப் புலிகள் அமைப்பினர் அந்தளவு பாரிய தொகைப் பணத்தை பூமிக்கடியில் புதைத்து விட்டுத் தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பிரஸ்தாப பணத்தொகையைப் புதைத்து வைப்பதில் முக்கிய பங்காற்றிய விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் மூவரில் இருவர் இராணுவத்தினருடனான மோதல்களின் போது கொல்லப்பட்டு விட்டனர். மற்றொருவர் வெளிநாட்டுக்குத் தப்பியோடி விட்டார் என்றும் பாதுகாப்புத் தரப்பினர் தெரிவிக்கின்றனர். (ஸ்ரீ-2)



இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் மாங்குளத்திலிருந்து ஓமந்தை வரையிலான 30 கிலோ மீற்றர் தூரத்திற்குரிய புகையிரதப் பாதை திருத்தும் பணிக்காக தண்டவாளம் இறக்கப்பட்டுள்ளதைப் படத்தில் காணலாம். *(படம்:- மல்லாவி செய்தியாளர்)*

## விரிவுரையாளர்களின் உண்மையான கோரிக்கையை ஜனாதிபதி இன்னும் புரிந்து கொள்ளவில்லை

### பல்கலை. விரிவுரையாளர்கள் சம்மேளனம் தெரிவிப்பு

(கொழும்பு)

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் உண்மையான கோரிக்கையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ புரிந்து கொள்ளவில்லை என பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் ஒன்றியம் குற்றம் சுமத்தியுள்ளது.

துரதிர்ஷ்டவசமாக தமது கோரிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதிக்கு போதிய தெளிவில்லை என ஒன்றியம் தெரிவித்துள்ளது.

2 இலட்சம் ரூபா சம்பள உயர்வு வழங்குமாறு கோரிக்கை விடுக்கவில்லை என பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒன்றியத்தின் தலைவர் நிர்மால் ரஞ்சித் தெவ்சிறி தெரிவித்துள்ளார்.

சம்பளக் கட்டமைப்பு குறித்த அண்மைய கோரிக்கைகளில் 2 இலட்சம் ரூபா சம்பள உயர்வு கோரவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எவ்வாறெனினும் 2 இலட்சம் ரூபா சம்பள உயர்வு வழங்குவதாக உயர் கல்வி அமைச்சு இணங்கியிருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

உச்சபட்மாக ஒரு இலட்சத்து 58 ஆயிரம் சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுவிக்கப்பட்டிருந்ததாகவும் இது சிரேஷ்ட/ விரிவுரையாளர்களுக்கான சம்பள உயர்வு எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் இந்தப் பிரிவின் கீழ் சம்பள உயர்வு பெற்றுக் கொள்ளக் கூடிய சிலர் மட்டுமே கடமையில் ஈடுபட்டிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய நிலைமைகளை அறிந்து கொள்ளாமலேயே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கருத்துக்களை வெளியிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)




# மக்கள் வங்கியின் பொன்விழா சிறப்பு மலர்-01.07.2011

## பொன்விழாப் பூரிப்பில் மக்கள் வங்கி

அரைநூற்றாண்டு காலமாக, இலங்கையின் வங்கியியல் வரலாற்றில் தனக்கென தனித்தடம் பதித்துக்கொண்ட மக்கள் வங்கியானது தனது பொன் விழாவினைக் கொண்டாடிக்கொண்டிருக்கும் இன்றைய நன்னாளிலே, மக்கள் வங்கியின் தோற்றம், வளர்ச்சிப்பாதைகள் மற்றும் சேவைச் சிறப்புகள் போன்றவற்றை எடுத்து நோக்குதல் மிகப் பொருத தமானதாகும்.

திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்கள் பிரதமராக இருந்த 1960 களில், பிரதான அரசாங்க வங்கிகளில் ஒன்றாக மக்கள் வங்கியினை ஸ்தாபிதம் செய்யும பொருட்டு, T.B. இலங்கரட்ன



இலகுவான வாடிக்கையாளர் சேவைக்காக அதிகரித்த சேவை நிலையங்கள்.

அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட மசோதாவானது பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டதுடன் தொடர்ச்சியாக, 1961ம் ஆண்டு 29ஆம் இலக்க மக்கள் வங்கிச்சட்டம் உருவாக்கப்பட்டு, மக்கள் வங்கி ஸ்தாபிக்கப்பட்டது.

மக்கள் வங்கியின் ஆரம்பகால வளர்ச்சிக்கு வலுவூட்டி, அதனை கட்டி எழுப்புவதற்கு முன்னின்று உழைத்த மக்கள் வங்கித் தலைவர் திரு.வின்னர்ட் சுபசிங்க மற்றும் பொது முகாமையாளர் திரு. டபிள்யூ.எஸ்.சொலமன்ஸ் ஆகியோரது அளப்பரிய சேவைகள் இத்தருணத்தில் நினைவுகூரப்பட வேண்டியனவாகும்.

முன்னதாக, இலங்கையின் பொருளாதார நிதியியல் கட்டமைப்புகள் முக்கியத்துவம் பெற்றிருந்த கூட்டுறவு நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்ததாக கிராமியப்பொருளாதார அபிவிருத்தியை முன்னெடுத்துச்செல்லும் நோக்கினை அடிப்படையாகக்கொண்டு மக்கள் வங்கியானது செயற்படத் தொடங்கியது.

**"மக்கள் மனமறிந்த வங்கி மக்கள் வங்கி"** என்ற மகுட வாசகத்தினை நிதர்சனமாக நாடளாவிய ரீதியில் தனது சேவைகளை விரிவுபடுத்திக்கொண்ட மக்கள் வங்கியானது உலக மயமாக்கல், திறந்த சந்தைப்பொருளாதாரம் மற்றும் சர்வதேச நிதியியல் முறைமைகள் மீதான துரித வளர்ச்சி போன்ற காரணிகளின் அபிவிருத்திப் போக்குக்கேற்ப விரைவாக வளர்ச்சியடைந்து, பல்லாயிரக்கணக்கான

பிரதேச அபிவிருத்திக்கான அதிகரித்த கடன்கள்.



வாடிக்கையாளர்களின் அடித்தளத்தைக்கொண்ட பிரதான அரச, வர்த்தக வங்கிகளுள் ஒன்றாக பரிணமித்துக்கொண்டது.

ஆங்கிலம் கற்றவர்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்த வங்கித்தொழின்முறையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு சிங்களம், தமிழ் ஆகிய தேசிய மொழிகளினூடாக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப பட்டதுடன் சமுதாயத்தின் உயர்மட்ட வகுப்பினர் மாத்திரமன்றி விவசாயம்/மீன்பிடி தொழிலாளர் பாரம்பரியத்திலிருந்தும் திறமையான ஊழியர்கள் ஆட்சேர்ப்புச்செய்யப்படத் தொடங்கினர். பலதரப்பட்ட திறமைகளுடனும் அன்பு, கருணை, இரக்கம் போன்ற விழுமியங் களுடனும் ஊழியர்களால் வழங்கப்பட்ட சேவைகளின் பிரகாரம் நடுத்தர வர்க்கத்தினரும் கீழ்மட்ட வர்க்கத்தினரும்கூட, எமது வங்கி யுடன் கைகோர்த்துக் கொண்டமையும் வரலாற்று நிகழ்வாகும்.

சேமிப்புக்களைப்பெற்றுக்கொள்ளுதலும், கடன்களை வழங்குதலும் என்ற அடிப்படை வங்கியியலுக்கு மேலதிகமாக, மக்களோடு மக்களாக ஒன்றிணைந்து, பரந்துபட்ட ஒருங்கிணைக்கப்பட்ட சேவைச் சங்கிலி யானது தொடர்ச்சியாகக் காணப்படுதல் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

நிதிச்சேவைகளில் **"புதிதுபுனைதல"** எனும் கருத்துக்கு மக்கள் வங்கி முன்னுதாரணமாகத் திகழ்கிறது. இலங்கை வங்கியியல் வர லாற்றில் முதன்முதலாக தங்கநகை அடகுச்சேவையினை அறிமுகப் படுத்திய பெருமை மக்கள் வங்கிக்கே உரித்தானது மட்டுமன்றி, இன்றுவரை தங்க அடகுச்சேவை தொடர்பிலான சந்தைத்தலைமைத் துவத்தினையும் மக்கள் வங்கியே கொண்டுள்ளமை சிறப்பம்சமாகும்.

சித்திரைப்புத்தாண்டின் நிதிக்கொடுக்கல்- வாங்கல்களுடன் ஆரம்பித்து, வங்கிப்பரிவர்த்தனையின் போது, கைவிசேடம் வழங்கும் பாரம்பரியமும் மக்கள் வங்கியிலேயே முதன்முதலில் ஆரம்பிக்கப்பட்டது. இத்தகைய பண்பாட்டு சிறப்பு வாய்ந்த திருநாட்களின் போது வாடிக் கையாளர்களுக்கு பரிசுப்பொருட்களை வழங்கும் நடைமுறையும் இவ் வாறே மக்கள் வங்கியின் பெருமைக்குரிய அறிமுகங்களாகும்.

இன்றும்கூட, சகல சமூகத்தினரும் இத்தகைய விழாக்களின் போது, மத அனுஷ்டானங்களுக்கு அடுத்தபடி வங்கிப் பரிவர்த்தனைக்கே முக்கியத்துவம் கொடுத்து விசேட கொடுக்கல்-வாங்கல்களை மேற்கொண்டு மகிழ்ச்சியும் மனநிறைவும் பெறுகின்றனர்.



அதிகரித்த துரித கடன்கள் வழங்குவதற்கான வைப்புச் சேகரித்தல்

இத்தகைய சமூகக்கட்டமைப்புடன் பின்னிப்பிணைந்த வங்கியியல் பாரம்பரியத்தை உருவாக்கிய மக்கள் வங்கியானது, பிறந்த குழந்தைகள் முதற்கொண்டு வயது முதிர்ந்த மூத்த பிரஜைகள் வரை சகல சமூக மட்டத்தினருக்குமான சிறப்புவாய்ந்த சேமிப்புத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி, மேலும் சேவைகளை விரிவுபடுத்தியுள்ளது.

இச்சேவைகளின் தொடர்ச்சியாகவே, பரிசுப்பொருட்கள் வழங்குதல், புலமைப்பரிசில் திட்டங்கள், அதிஷ்டக்குலுக்கல், காப்புறுதி, கருத் தரங்குகள், வீட்டுத்திட்டங்கள் மற்றும் சமூக நலத்திட்டங்களையும் வழங்கி வருகின்றது.

இலங்கையில் அரசியல் மற்றும் பொருளாதார வரலாற்றினை எடுத்துநோக்கின், அவ்வப்போது ஏற்பட்ட வந்த நெருக்கடி மிகுந்த காலகட்டங்கள் யாவற்றிலும் தனிச்சிறப்பான வங்கிச்சேவையினை மக்கள்





எதிர்கால சந்ததியின் கல்வி மேம்பாட்டிற்கான புலமைப் பரிசில்கள்.

வங்கி வழங்கி வந்துள்ளது . 1983இல் ஏற்பட்ட இனக்கலவரங்களின்போது, இத்தகைய சேவைகள் மிகவும் சிறப்பாக வழங்கப்பட்டிருந்தன. கொள்ளைகளின் போது இழக்கப்பட்ட தங்க நகைகள்கூட, மீளவும் பெற்றுக்கொடுக்கப்பட்டன.

வடக்கு-கிழக்கு பகுதியில் நிலவிய கடும் போர்ச் சூழ்நிலைகளின் போது மக்கள் வங்கி மகத்தான சேவையினை வழங்கியது. அடிக்கடி ஏற்பட்ட இடம்பெயர்வுகளின்போது வங்கிக்கிளைகளும் இடம்பெயர நேர்ந்தபோதிலும், வங்கிச்சேவைகள் தொடர்ச்சியாக வழங்கப்பட்டன.

1995இல் ஏற்பட்ட பாரிய இடப்பெயர்வின்போது, மக்களோடு மக்களாக இடப்பெயர்வுக்குட்பட்ட மக்கள் வங்கி, கடும்போர், பொருளாதாரத்தடை மற்றும் திரவப்பணத்திற்கு நிலவிய கடும் தட்டுப்பாடு போன்ற சவால்களை வெற்றிகரமாக எதிர்கொண்டு தனது சேவைகளை திறம்பட வழங்கியது. மேலும், 1996இல் மீண்டும் யாழ்.பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த காலத்தில், வணிகர் பலர் தமது செயற்பாட்டு மூலதனம் அனைத்தையும் இழந்த நிலையில், மக்கள் வங்கி முன்னின்று, எமது வணிகர்களுக்கு தற்காலிக மேலதிகப்பற்று மற்றும் குறுகிய காலக்கடன்கள் ஊடாக நிதிச்சேவையை வழங்கி, யாழ். மாவட்டத்திற்கு அத்தியாவசிய உணவுப்பண்டங்களும் ஏனைய அவசிய நுகர்ச்சிப் பொருட்களும் கிடைக்க உதவிபுரிந்து, யாழ். மக்கள் பஞ்சம் பட்டினியிலிருந்து விடுபட உதவியதை பல வணிக மக்கள் இன்றும் மறக்கமாட்டார்கள். இதேபோன்று, 2009இல் போரின் இறுதிக்கட்டத்திலும், இடமபெயர்ந்த வங்கிகள் சிறந்த சேவைகளை வழங்கின. இதன் போதுகூட, தொலைந்த நகைகளுக்கான தற்போதைய சந்தைப் பெறுமதியினை வழங்கியும், வட்டிச்சலுகை வழங்கியும் உதவி வருவதைக் காணலாம்.

போர் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட வடக்கின் வசந்தம் மற்றும் கிழக்கின் உதயம் திட்டங்களின் கீழ் நிதிசார் அபிவிருத்திக்கான முழுமையான பங்களிப்பு வழங்கப்பட்டு வருகின்றது.

விவசாயம், மீன்பிடி, கால்நடைவளர்ப்பு, சிறிய நடுத்தரக் கைத் தொழில்கள், சுயதொழில், வறுமையொழிப்பு போன்ற சகல துறை களினூடாகவும் அபிவிருத்தியை முன்னெடுத்துச்செல்வதற்கான நிதி யியல் பங்களிப்பை தொடர்ச்சியாக வழங்கிவருவதன் ஊடாக மக்கள் வங்கியானது தனது ஆரம்ப காலக்கோட்பாடான கிராமிய பொருளாதார அபிவிருத்தியின் மீது தொடர்ச்சியான அக்கறையையும் அனு சரணையையும் வழங்கி வருகிறது.

1980 களில் அறிமுகப்படுத்தப்பட்டு, கடந்த தசாப்தத்தில் பிரபல்யம் பெற்றிருக்கும் நுண்பாக நிதியியல் நிதிசார் சேவையானது, இன்று பரவலாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

கிராமங்கள் தோறும் கீழ்மட்ட வருவாய்பெறும் குடித்தொகைப் பரம்பலை இனங்கண்டு, தொழில்முயற்சிகளுக்கான ஆலோசனைகளை அபிவிருத்தி செய்தல், தொழிலுக்கான நிதிசார் முதலீட்டுக்கு அனுச ரணை வழங்குதல், வேலைவாய்ப்புக்களை அதிகரித்தல், வருமானத் தைப் பெருக்குதல், சேமிப்புப்பழக்கத்தினை ஊக்குவித்தல் என பலப் பயன பொருளாதார அபிவிருத்திக்கு வழிவகுப்பதன் ஊடாக வறுமை யொழிப்பு தொடர்பான ஆக்கபூர்வமான முன்னேற்றங்களை ஏற்படுத்தி, கிராமிய பொருளாதார அபிவிருத்தியுடன் ஒன்றிணைந்த நாடளாவிய பொருளாதார முன்னேற்றத்தினை ஏற்படுத்தும் வகையில், மக்கள் வங்கியின் தொடர்ச்சியான பங்களிப்பு காத்திரமானதாகும்.

இது எவ்வாறு இருப்பினும், மக்கள் வங்கியானது, தனது பொருளாதார ரீதியான கடமைப்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லும் அதேவேளை, மாறிவரும் சர்வதேச நிதிச்சந்தை நடவடிக்கைகள், அண்மைக்காலங்களில் ஏற்பட்ட உலகளாவிய ரீதியான நிதி நெருக்கடி, அதிநவீன தகவல் தொழிநுட்ப முன்னேற்றங்களின்பாற்பட்ட நவீன வங்கியியல் நடவடிக்கைகளுடனும் ஒருங்கிணைந்த உயர்தரமான வங்கிச்சேவையினை முன்னெடுத்துச்செல்வது அவதானிக்கமுடியும்.


சிறிய நடுத்தர தொழிலாண்மைக்கான முக்கியத்துவம் இன்று நன்குணரப்பட்டுள்ளது. இத்துறைக்கான உயர்தரப்பங்களிப்பு மக்கள் வங்கியால் வழங்கப்பட்டு வருவதை இவற்றின் தொடர்ச்சியாகக் காணலாம்.

அரைநூற்றாண்டுச் சேவைதனை உறுதிபட வழங்கிய மக்கள் வங்கியானது தனது சேவைக்கான அங்கீகாரமாக மக்கள் மனதை வென்ற வங்கி என்னும் விருதினை **'SLIM Awards'** தொடர்ச்சியாக கடந்த 05 வருடங்களாக வென்றுள்ளதுடன் மட்டுமன்றி, **AA+** தரப்படுத்தலினையும் பெற்றுள்ளது.

இங்ஙனம், இலங்கையின் வங்கியியல் துறையில் மிகப்பெரும் சக்தியாக வளர்ச்சிபெற்று, அதிகூடிய கிளை வலையமைப்பையும் அதிகூடிய ஊழியர் வளத்தையும் வங்கியின் பெறுமதிமிக்க சொத்தாக பதின்மூன்று மில்லியன் வாடிக்கையாளர் தளத்தையும் ஒருங்கே பெற்றுள்ள வெற்றி மக்கள் வங்கியின் சாதனையாகும்.

அரச வங்கியாகவும் மக்களின் வங்கி என்ற ரீதியிலும் மக்கள் வங்கியின் பொன்விழா கொண்டாட்டங்களுக்கு நாட்டு மக்கள் அனைத் துமே உரித்துடையவர்களாவர். எமது நாட்டின் தேசிய சொத்துக்களில் ஒன்றாக திகழும் மக்கள் வங்கியின் 50வது பிறந்தநாள் கோலாகலத்தை எமது வங்கியுடனும், ஊழியர்களுடனும் அனைத்து வாடிக்கையாளர் களுடனும் எமது நாட்டின் சகல சகோதர சகோதரிகளுடன் இணைந்து


மக்கள் வங்கியின் கடன் பயனாளிக்கு இலங்கை மத்திய வங்கி ஆளுநர் கடன் வழங்குதல்



குதூகலத்துடன் கொண்டாடுவதுடன் எமது வங்கிக்கு எம் அன்பையும் பிறந்தநாள் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

**பிராந்திய முகாமையாளர், உதவிப் பிராந்திய முகாமையாளர், கிளை முகாமையாளர்கள், சேவை நிலை முகாமையாளர்கள் மற்றும் அனைத்து வடபிராந்திய மக்கள் வங்கி பணியாளர்கள், யாழ்ப்பாணம்.**

அபிவிருத்திக் கடன்களைப் பெறுவதற்கான அறிவூட்டல் கருத்தரங்குகள்.




## இன்று மக்கள் வங்கி கிளையில் 27 அதிஷ்டசாலிகள் தெரிவாவார்கள்




பிரமுகர்கள்
வாடிக்கையாளர்களின் வாழ்த்துக்கள்
தொடர்ந்து வெளிவரும்.

PEOPLE'S BANK
THE PULSE OF THE PEOPLE

# பொன் விழாக் காணும் மக்கள் வங்கி சிரேஷ்ட வங்கியாளரின் பார்வையில்...



**அப்பர்சுவாமி கோபாலகிருஷ்ணன்**
(ஓய்வு பெற்ற மக்கள் வங்கி முகாமையாளர்)

''மக்கள் மனமறிந்த வங்கி மக்கள் வங்கி'' எனும் மகுடவாசகத்துடன் 50 ஆண்டுகளைப் பூர்த்தி செய்து இமயமாய்த் திகழும் மக்கள் வங்கியின் ஆரம்பகாலத்தில் இருந்து சேவையாற்றி 1997ஆம் ஆண்டு ஓய்வுபெற்று இன்றும் மக்கள் வங்கி சேவையுடன் இணைந்திருக்கும் இளைப்பாறிய மக்கள் வங்கி முகாமையாளர் அப்பர்சுவாமி கோபாலகிருஷ்ணன் அவர்கள் வலம்புரிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தவை,

மக்கள் வங்கியானது 1961ஆம்ஆண்டு ஜூலை மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்டு மக்களுக்கு பல மகத்தான சேவையாற்றி இன்று 50 ஆவது பொன்விழாவைக் கொண்டாடுவது பெருமைக்குரிய விடயம்.

மக்கள் வங்கியானது ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 36 வருடங்கள் வங்கியில் சேவையாற்றிய இவர் இன்றும் வங்கியுடன் இணைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

தெல்லிப்பழையில் பிறந்து மகாஜனாக் கல்லூரியில் கல்விகற்று தன்னுடைய திறமையின் வெளிப்பாட்டால் 36 வருடங்கள் வங்கியில் சேவையாற்றி பின் 14 வருடங்கள் கல்விச் சேவை புரிந்து வருகின்றார்.

கடன்வாங்கிக் கடன்கொடுப்பதையே செயற்பாடாகக் கொண்டு மக்கள் வங்கியானது ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இன்று வரை ஏழைமக்களின் பொருளாதார செயற்பாட்டில் பெரும் பங்காற்றி வருகின்றது.

மக்கள் வங்கியின் முதலாவது தலைவராக வின்சன் சுபசிங்க, காரியதரிசியாக பண்டாரநாயக்க , பொது முகாமையாளராக டபிள்யூ.டபிள்யூ.சொலமன்ஸ் ஆகியோர் நியமனம் பெற்றிருந்தனர்.

இவர்கள் காலத்தில் இருந்து சாதாரண ஏழை மக்களும் வங்கியில் சென்று தமது வங்கிச் செயற்பாடுகளை மேற்கொண்டு பொருளாதாரத்தில் வளர்ச்சிப் போக்கைக் காண வைத்த ஒரேஒரு வங்கியாக மக்கள் வங்கி திகழ்கின்றது.

ஏழை மக்கள் விவசாயத் தொழிலை மேற்கொள்வதற்கு பணம் தேவைப்படும் பொழுது கூட்டுறவு வங்கியை நாடினர். அவ்வங்கியில் மட்டுப்படுத்தப்பட்ட நிதியையே பெறமுடிந்தது. காரணம் வங்கியின் நிதியின் நிலை அவ்வாறிருந்தது.

அதேவேளை வர்த்தகக் கூட்டுறவு வங்கியாக மக்கள் வங்கி செயற்பட்டமையால் தனியாரின் பணத்தை சேமிப்பில் வைத்து ஏழை மக்களுடைய தேவைகளைக் கடன்வழங்குதல் மூலம் நிறைவேற்றக்கூடியதாக இருந்தது.

மக்கள் வங்கியானது வடமாகாணத்தில் முதலாவதாக முல்லைத்தீவிலும் பின்னர் காங்கேசன்துறை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலும் ஆரம்பிக்கப்பட்டு இன்று நாட்டின் அனைத்து இடங்களிலும் கிளை பரப்பி மக்களின் தேவையைத் தேடிச்சென்று பூர்த்தி செய்து வருகின்ற அளவிற்கு அதன்சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பகாலத்தில் மக்கள் வங்கி வாடிக்கையாளரை அதிகரிப்பதற்காக குறைந்த பட்சம் ஐந்து ரூபாவுடன் சேமிப்புக் கணக்கை ஆரம்பிக்கலாம் என்பதை நடைமுறைப் படுத்த மக்கள் சேமிப்பில் ஆர்வம் கொண்டு செயற்பட்டனர். சேமிப்புப் பெட்டகங்கள் வழங்கி வீட்டிலேயே சேமிப்புச் செய்வதற்கான முறையினை அறிமுகப்படுத்தியது மக்கள் வங்கி மாத்திரமே.

கையொப்பமிடத் தெரியாதவர்களைக்கூட தன்னுடன் இணைத்து அவர்களிற்கு வழிகாட்டி வாழ்வாதாரத்தை மேம்படுத்தி அவர்களின் எதிர்காலத்தை ஒளிமயமாக்கியது மக்கள் வங்கியேயாகும்.

தற்போது இவ்வங்கியானது பல்லாயிரக்கணக்கான பணியாளர்களையும் ஒரு கோடிக்கு மேல் வாடிக்கையாளர்களையும் தன்னகத்தே கொண்டு செயற்பட்டு வருகின்றது.

அத்தோடு வங்கியானது பரம இரகசியங்களைப் பேணிவருகின்ற தன்மையைக் கொண்டுள்ளதுடன் கண்ணியத் தன்மையுடன் வீறுநடை போடுகின்றது.

ஆரம்ப காலத்தில் இருந்ததை விட தற்போது நவீனமயப்படுத்தப்பட்ட சாதனங்களுடன் வங்கியானது தனது செயற்பாட்டுடன் நகர்ந்து செல்கின்றது.

மேலும் இவ்வங்கியானது இன்றுபல மகத்தான சேவைகளுடனும் நவீன தொழில்நுட்ப வளர்ச்சியோடும் மேன்மையான நிலைக்கு உயர்ச்சி பெற்றுச் செல்கின்றமையை அவ தானிக்க முடிகின்றது.

ஒரு வங்கியின் செயற்பாடானது மக்களின் மனங்களை அறிந்து அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதையே நோக்காகக் கொள்ளவேண்டும்.

மாறாக தமது நலனைக் கருத்திற் கொள்வதென்பது வங்கியின் வளர்ச்சியில் மாற்றம் ஏற்படமாட்டாது. அந்தவகையில் மக்கள் வங்கியின் செயற்பாடுகள் அன்று தொட்டு இன்றுவரை மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கையே கடைப்பிடிக்கின்றது.

அதுவே ஐம்பது வருடங்கள் பூர்த்தியில் பாரிய விருட்சமாய் விழுதுபரப்பி நிற்கின்றது மக்கள் மனமறிந்த மக்கள் வங்கி.

## உடல் நஞ்சடைவதால் வருடந்தோறும் 60 ஆயிரம் பேர் சிகிச்சைக்காக அனுமதி

பல்வேறு காரணங்களின் நிமித்தம் உடல் நஞ்சடைவதால் வருடந்தோறும் 60 ஆயிரம் பேர் வைத்தியசாலைகளில் கிகிச்சைக்காக அனுமதிக்கப்படுவதாகவும் இவர்களில் 2 வீதமானோர் கிசிச்சை பலனின்றி இறந்து விடுவதாகவும் சுகாதார அமைச்சின் தகவல் குறிப்பொன்று தெரிவிக்கிறது.

இத் தகவல் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது, உடலில் நஞ்சு கலந்து வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுவோரில் 30 வீதமானோர் கிருமிநாசினிகளால் நஞ்சூட்டப்பட்டவர்களாவர்.

கடந்த 2008 ஆம் ஆண்டு குறைந்த பட்சம் 63 ஆயிரத்து 742 பேர் உடல் நஞ்சேற்றப்பட்டதனால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் சிகிச்சை பலனின்றி 1247 பேர் உயிரிழந்துள்ளனர். அது தவிர வருடந்தோறும் 30 ஆயிரம் பேர் பாம்புக்கடிக்கு ஆளாகி வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுவதாகவும் இவர்களில் 50 பேர் இறப்பதாகவும் அத்தகவல் குறிப்பு குறிப்பிடுகிறது.

மேலும் தேவைக்கு அதிகமான மருத்துவ பொருட்கள் பாவனை, கிருமிநாசினி, மண்ணெண்ணெய், நுளம்புச் சுருள், உடல் அழகு சாதனப் பொருட்கள் மற்றும் பாம்புக்கடி போன்றவையே உடல் நஞ்சடைவதற்கு பிரதான காரணமாகவுள்ளன.

அதிகளவிலான சிறுவர்கள் இவற்றினால் பாதிக்கப்படுவதாகவும் நஞ்சுப் பொருட்களை வீடுகளில் சிறுவர்களுக்கு எட்டாத உயரத்தில் வைப்பதன் மூலம் இவர்களைப் பாதுகாக்க முடியுமெனவும் அமைச்சின் அத் தகவல் குறிப்பு சுட்டிக்காட்டுகிறது. (ஸ்ரீ-2)

## சுயதொழில் கொடுப்பனவு

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேசத்தில் இருந்து சுயதொழில் நிவாரணத்திற்காக விண்ணப்பித்தவர்களில் 11 பேருக்கான 2 ஆம் கட்ட கொடுப்பனவு வழங்குவதற்கான அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளதாக தென்மராட்சி பிரதேச செயலாளர் திருமதி அ. சாந்தசீலன் அறிவித்துள்ளார்.

பெயர் குறிப்பிடப்படும் பின்வருவோர் ஆள் அடையாளத்தை நிரூபிக்கும் சான்றிதழ்களுடன் தென்மராட்சி பிரதேச செயலகத்திலுள்ள சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவித்தார்.

இதில் அனுமதி கிடைக்கப் பெற்றவர்கள் விபரம் வருமாறு,

வே. நாகராஜா சாவகச்சேரி, ஸ்ரீதர்மச்சந்திரன் கொடிகாமம், ஆ.ஜெகதீஸ்வரன் மீசாலை வடக்கு, க. கோகிலாம்பிகை சாவகச்சேரி, வே. லீலா மீசாலை வடக்கு, உ. முருகன் இயற்றாலை வறணி, க.கார்த்திகா மட்டுவில், க. தெய்வேந்திரம் கெற்பெலி மேற்கு, இ. தங்கேஸ்வரி கைதடி தெற்கு, சி.சசிக்குமார் கெருடாவில் வடக்கு, இ.சதீஸ் கல்வயல். (ஸ்ரீ-29)

## மாகாண மட்ட கணிதப் போட்டிகள்

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்படும் மாகாண மட்ட கணிதப் போட்டிகள் நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

கணித விநாடி வினாப்போட்டி நாளை சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை நடைபெறும். தொடர்ந்து கணித செயற்பாட்டு போட்டி பிற்பகல் ஒரு மணி தொடக்கம் மாலை 5 மணி வரை நடைபெறும்.

நாளை மறுதினம் கணித நாடகப் போட்டி காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை நடைபெறும். (ஸ்ரீ-2-29)

## நீதிமன்றத்தால் அபராதம்

(கரவெட்டி)

சூழலை மாசுபடுத்தும் வகையில் வீதியோரத்தில் குப்பை கொட்டிய ஐவருக்கு 5 ஆயிரம் அபராதம் விதித்து பருத்தித்துறை நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

வல்வெட்டித்துறை பகுதியில் சூழலை மாசுபடுத்தும் வகையில் குப்பைகளை வீதியோரத்தில் வீசியதாக குற்றம் சாட்டப்பட்டு வல்வெட்டித்துறை பொலிஸாரினால் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிபதி குறித்த ஐவரும் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு ஐவருக்கு தலா ஆயிரம் ரூபா அபராதம் செலுத்த உத்தரவிட்டார். (ஸ்ரீ-24)

★ ★ ★ ★ ★ ★

(கரவெட்டி)

வீட்டில் அதிகளவான கள்ளை வைத்திருந்த ஐந்து பேருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்த பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பருத்தித்துறை மதுவரி திணைக்களத்திற்குட்பட்ட பகுதியில் தமது வீடுகளில் அளவுக்கதிகமான கள்ளை வைத்திருந்த ஐந்து பேருக்கு எதிராக மதுவரித் திணைக்களத்தால் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையினால் குற்றவாளியாக கண்டு ஐவருக்கும் தலா ஆயிரம் ரூபா அபராதம் செலுத்த உத்தரவிட்டார். (ஸ்ரீ-24)

★ ★ ★ ★ ★ ★

மக்களின் போக்குவரத்திற்கு இடையூறாக நடைபாதையில் வைத்து வியாபாரம் செய்த குற்றச்சாட்டின் பேரில் நபர் ஒருவர் யாழ்.பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றையதினம் யாழ்.நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த யாழ்.நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு 1500 ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் ஒருமாத சாதாரண சிறைத் தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (ஸ்ரீ-3)

## சட்ட விரோதமாக மின்சாரம் பெற்ற மூவருக்கு 45,795 ரூபா அபராதம்

சட்ட விரோதமான முறையில் மின்சாரம் பெற்ற மூவருக்கு 45 ஆயிரத்து 795 ரூபா அபராதம் விதித்து பருத்தித்துறை நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. நெல்லியடி பொலிஸாரும் மின்சார சபை யினரும் நடாத்திய தேடுதலின் போது கரவெட்டிப் பகுதியில் 3 பேர் சட்ட விரோதமான முறையில் மின்சாரம் பெற்ற குற்றச் சாட்டின் பேரில் நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் மன்றில் ஆஜர்படுத் தப்பட்டனர்.

இவ் வழக்கை விசாரிக்க நீதிபதி குறித்த நபர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்ட மையால் குற்றவாளியாகக் கண்டு மூவருக்கும் தலா 10 ஆயிரம் ரூபா அபராதமும் மின்சார சபைக்கு நட்டஈடாக தலா 5 ஆயிரத்து 265 ரூபாவும் செலுத்து மாறு உத்தரவிட்டார். (ஸ்ரீ-24)

# தமிழருக்கு எதிரான காங்கிரஸின் போக்கே இலங்கைப் பிரச்சினைக்கு காரணம்

## புதிய தமிழகம் கிருஷ்ணசாமி குற்றச்சாட்டு



மத்தியஅரசு தமிழருக்கு எதிரான மனப் போக்குடன் இருப்பதே இலங்கைப் பிரச்சினைக்குக் காரணம் என மதுரையில், புதிய தமிழகம் தலைவர் கிருஷ்ணசுவாமி குற்றம் சாட்டியுள்ளார்.


அவர் மேலும் கூறியதாவது,


கச்சதீவு ஒப்பந்தத்தை இரத்துச் செய்ய மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.அப்போதுதான் இந்திய மீனவர்களை காப்பாற்றமுடியும். இதுகுறித்து தமிழகச் சட்டசபையில் அ.தி.மு.க. அரசு கொண்டு வந்த இரு தீர்மானங்கள் வரவேற்கத்தக்கன.

பா.ஜ.ஆட்சியில் இருந்தபோது இலங்கைத் தமிழர் பிரச்சினை எழவில்லை. காங்கிரஸ் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின் இலங்கைத் தமிழர் பிரச்சினை எழுந்தது. காங்கிரஸ் அரசு தமிழருக்கு எதிரான மனப்போக்கை கொண்டதே இதற்குக் காரணம் என்றார். (ஸ்ரீ-2)

# ஜனாதிபதி மகிந்தவை எதிர்த்து சீமான் தேர்தலில் போட்டியிடலாம்

## எஸ்.வி.சேகர் தெரிவிப்பு





இலங்கை சென்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக பிரசாரம் செய்வதோடு அவரை எதிர்த்து தேர்தலில் நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான் போட்டியிடலாம் என நடிகரும் மயிலாப்பூர் தொகுதி முன்னாள் எம்.எல். ஏவுமான எஸ்.வீ.சேகர் தெரிவித்துள்ளார்.ஈரோடு பிரதேசத்தில் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் தி.மு.க.காங்கிரஸ் கூட்டணியை மக்கள் விரும்பவில்லை. பெரும்பாலான வாக்காளர்கள் ஆட்சி மாற்றத்தையே விரும்பினர். சிறப்பாக செயற்பட்டு வரும் அ.தி.மு.க அரசு கடந்த 2001 மற்றும் 2006 ஆம் ஆண்டு போல ஆட்சி செய்யும் என்றார். (ஸ்ரீ-2)

# அரசியல் நடவடிக்கைகளை நிறுத்துமாறு சூகிக்கு மியன்மார் அரசு கட்டளை



(யாங்கூன்)

மியான்மார் ஜனநாயக தலைவர் ஆங் காங்சூகியும் அவரது கட்சியும் தங்களது அனைத்து அரசியல் நட வடிக்கைகளையும் நிறுத்திக் கொள்ள வேண்டும் என அந்நாட்டு அரசு கட்டளையிட்டுள்ளது.

மியன்மாரில் கடந்தாண்டு ஆட்சியில் இருந்த இரா ணுவம் புதிய அரசியல் சாசனத்தைக் கொண்டு வந்தது. அதன்படி புதிய தேர்தல் கமிஷனில் சூகியின் தேசிய ஜன நாயக லீக் கட்சி பதிவு செய்து கொள்ளவில்லை. கடந்த நவம்பரில் நடந்த பொதுத் தேர்தலையும் புறக்கணித்தது.

இதனால் சூகியின் கட்சியைக் கலைத்து இராணுவ ஆட்சி உத்தரவிட்டது. அதேநேரத்தில் கடந்த நவம்பரில் சூகி விடுதலை செய்யப்பட்ட பின் அவரது கட்சி பல்வேறு அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. நாடு முழுவதும் சுற்றுப் பயணம் செய்யப் போவதாகவும் சூகி சமீபத்தில் அறிவித்திருந்தார். இந்நிலையில் மியன்மார் உள்துறை அமைச்சகம் சூகிக்குக் கடிதம் எழுதியுள்ளது.

அதில் சூகியும் அவரது கட்சியினரும் உண்மையில் ஜனநாயக ரீதியில் கடமையாற்ற விரும்பினால் நாட்டின் அமைதி மற்றும் ஒழுங்கைக் குலைக்கும் முயற்சியைக் கைவிட்டு சட்டபடி நடந்து கொள்ள வேண்டும். அரசியல் நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்ள வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தகவல்ல மியன்மாரில் இருந்து வெளிவரும் தி நியூ லைட் பத்திரிகை தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-4)

# உலகில் சிறந்த 10 போராட்டங்கள் பட்டியலில் உப்பு சத்தியாகிரகம்

(நியூயோர்க்)

உலக நாடுகளில் அதிக தாக்கத்தை ஏற்படுத்திய 10 போராட்டங்களில் மகாத்மா காந்தியின் உப்பு சத்தியா கிரகமும் இடம் பெற்றுள்ளது.

அமெரிக்காவின் டைம்ஸ் பத்திரிகை உலக நாடுகளில் தாக்கத்தை ஏற்படுத்திய 10 போராட்டங்கள் பட்டியலை வெளியிட்டுள்ளது. அதில் மகாத்மா காந்தியின் உப்பு சத்தி யாக்கிரகமும் இடம்பெற்றுள்ளது.

இந்தியாவில் சுதந்திர போராட்ட காலத்தின் போது அதாவது 1930 ஆம் ஆண்டு மார்ச்சில் குஜராத் மாநிலம் ஆமதாபாத் அருகில் உள்ள சபர்மதி ஆசிரமத்திலிருந்து சிறிய கிராமமான தண்டிக்கு மகாத்மா காந்தி உப்பு சத்தியாகிரகம் மேற்கொண்டார்.

இது தண்டி யாத்திரை என அழைக்கப்பட்டது. ஆங்கிலேயர்களின் ஆட்சிக்கு எதிராக வன்முறையற்ற முறையில் காந்தியால் நடத்தப்பட்ட இந்த தண்டி யாத்திரை மக்களிடையே பலத்த வரவேற்பு பெற்றது.

இது குறித்து டைம்ஸ் தெரிவித்துள்ள செய்தியில், சத்தியாகிரகா என்றால் உண்மையான படை என்று பொருள். பிரிட்டனின் காலனி ஆதிக்கத்தை உடைக்க உப்பு சத்தியாக்கிரகம் உதவியது. இந்த வன்முறையற்ற ஆர்ப்பாட்டத்தின் போது 80 ஆயிரம் இந்தியர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர் என தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-4)

# மின்னல் தாக்கியதில் 18 குழந்தைகள் பலி

## உகண்டாவில் சம்பவம்

(கம்போலா)

உகண்டாவில் பெய்த கனமழையால் ஆரம்பப்பள்ளி மீது மின்னல் தாக்கியதில் 18 குழந்தைகள் பரிதாபமாக பலியாகினர். 50 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

ஆபிரிக்க நாடான உகண்டாவில் தலைநகர் கம்போலா நகரில் வடமேற்கு மாவட்டத்தில் கடந்த மூன்று நாட்களாக பரவலாக கனமழை பெய்து வருகிறது.

இந்நிலையில் கிர்யான்டோங்கோ கிராமத்தில் பெய்த கனமழையின் காரணமாக அங்குள்ள ஆரம்பப்பள்ளி மீது திடீரென மின்னல் தாக்கியதில் பள்ளியில் படித்து கொண்டிருந்த 18 குழந்தைகள் சம்பவ இடத்திலேயே பலியானதாகவும் இவர்களில் 15 பேர் பெண் குழந்தைகள், 3 பேர் ஆண் குழந்தைகள்.

மேலும் 21 இற்கும் மேற்பட்டவர்கள் உடல்கள் கருகி உயிருக்கு ஆபத்தான நிலையில் முலாகோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாக கம்போலா நகர பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இப்பகுதியில் மழை பெய்தால் அடிக்கடி மின்னல் தாக்குவது வழக்கமான ஒன்றாக உள்ளது.கடந்த ஒரு வாரங்களில் நிகழ்ந்த மின்னல் தாக்குதல்களில் இதுவரை 28 பேர் பலியாகியுள்ளனர் என கம்போலா நகர வானிலை ஆய்வு மைய அதிகாரி பாஸிலிர் கூறினார். (ஸ்ரீ-4)

# சவுதியில் கார் ஓட்டிய ஐந்து பெண்கள் கைது

## பெண் உரிமை அமைப்புக்கள் எதிர்ப்பு

(ரியாத்)

சவுதி அரேபியாவில் பெண்கள் கார் செலுத்தத் தடையுள்ள நிலையில் கார் ஓட்டிச் சென்ற ஐந்து பெண்கள் கைது செய்யப்பட்டனர்.

உலகிலேயே சவுதி அரேபியாவில் தான் பெண்கள் கார் ஓட்ட தடை உள்ளது. சட்ட ரீதியான தடையில்லை என்றாலும் மத ரீதி யான வாய்மொழி உத்தரவாக அமுலில் உள்ளது. 1960 ஆம் ஆண்டில் சவுதி அரேபியாவில் பெண்கள் கல்வியில் சட்ட திருத் தம் கொண்டு வரப்பட்டது. இதனால் தற்போது அந்நாட்டின் பல்கலைக்கழகங்களில் 58 சதவீதம் பெண்கள் மட்டுமே பணிபுரிகின்றனர்.

பெண்கள் கார் செலுத்தக்கூடாது என உத்தரவிடப்பட்டுள்ளதால் இவர்கள் ஒவ்வொரு முறை வீட்டை விட்டு முக்கிய வேலைகளுக்காக வெளியே செல்லும் போது வீட்டில் ஆண்களை அல்லது சாரதிகளையே நம்பி இருக்க வேண்டியுள்ளது. இதுபோன்ற காரணங்களால் வீட்டில் ஆண்கள் சம்பாதிக்கும் பணத்தில் பெரும்பகுதி சாரதிகளின் சம்பளமாக சென்று விடுகிறது.

சவுதி மன்னர் அப்துல்லா, பெண்கள் கார் செலுத்துவது சமுதாயம் சார்ந்த விடயம். இந்த விடயத்தில் மக்கள் தான் முடிவு செய்ய வேண்டும் என்று கூறிவிட்டார். இந்நிலையில் 1990 ஆம் ஆண்டில் ரியாத்தில் கார் செலுத்தச் சென்ற 47 பெண்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் அனைவரும் தங்களது வேலையை இழந்தனர்.

நாட்டில் இருந்து வெளியேற இவர்களுக்கும் இவர்களது கணவர்களுக்கும் ஓராண்டு காலம் தடை விதிக்கப்பட்டது. கடந்த 20 ஆண்டுகளாக கார் செலுத்துவதற்கு அனுமதி கோரி அந்நாட்டின் பெண்கள் அமைப்புகள் கோரிக்கை விடுத்து வருகின்றன. ஆனாலும் மாற்றம் நிகழவில்லை. இந்நிலையில் கடந்த 17 ஆம் திகதி ரியாத்தில் 40 பெண்கள் துணிந்து கார் ஓட்டினர். கணவர்களை காரில் அமர வைத்து கடைகளுக்கு சென்றனர்.

இதை அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் வரவேற்றிருந்தார். கடந்த இரு வாரங்களாக கார் செலுத்தி வந்தனர். இந்நிலையில் கடந்த இரண்டு நாட்களில் கார் செலுத்திய ஐந்து பெண்கள் அந்நாட்டு அரசால் கைது செய்யப்பட்டுள்ளனர். இதற்கு பெண் உரிமை அமைப்புகள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. (ஸ்ரீ-4)



ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலில் உள்ள நட்சத்திர விடுதியொன்றில் புகுந்து தலிபான் தற்கொலைப்படையினர் தாக்குதல் நடத்தினர். இதில் அவ்விடுதிக் கட்டடமே தீப்பிடித்து எரிவதைப் படத்தில் காணலாம்.

பாலங்களைக் கட்டுவதற்குப் பதில் சுவர்களை அமைத்துவிடுவதால்தான் பலமனிதர்கள் தனித்து விடப்படுகிறார்கள். -ஓர் அறிஞர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# ஜனாதிபதி மகிந்தவின் கவலை பொன்சேகாவுக்கு விடுதலை தருமா?

இந்திய உளவுத்துறையின் சதி காரணமாக முன்னாள் இராணுவத்தளபதி சரத்பொன்சேகாவை தனது எதிரியாக்கிவிட்டதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கவலை வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதி வெளியிட்டுள்ள கவலை உள்நாட்டில் அவர் மீதான வெறுப்பையும் இந்தியாவின் பகைமையையும் உண்டு பண்ணும்.

அதாவது இந்தியாவின் சொல்லைக் கேட்டு இராணுவத் தளபதியாக இருந்த சரத் பொன்சேகா மீது அவதூறான குற்றத்தை சுமத்தி அவரை சிறையில் அடைத்தமை மிகப்பெரும் தவறு என ஜனாதிபதி இப்போது ஏற்றுக் கொண்டுள்ளார்.

எனவே இவ்வாறு இந்தியாவின் சொல்லைக் கேட்டுச் செயற்பட்ட ஜனாதிபதியை நாங்கள் எப்படி நம்புவது?

இப்படியான சிந்தனை மக்கள் மத்தியில் ஏற்படும். இது அவர் மீதான மக்கள் ஆதரவை குறைக்கவே செய்யும்.

இதற்கு அடுத்தபடியாக இந்திய உளவுத்துறையின் சதி காரணமாகவே முன்னாள் இராணுவத் தளபதியை சிறையில் அடைக்க வேண்டியதாயிற்று என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியதால் இந்தியா அவர் மீது கடும் கோபம் கொண்டிருக்கும்.

இலங்கையில் நடந்த பல்வகைக் குழப்பங்களுக்கு இந்தியாவே காரணம் என்ற உண்மையை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே பகிரங்கப்படுத்தி விட்டார்.

இது இந்திய தேசத்திற்கு சர்வதேசத்தில் இருக்கக் கூடிய நன்மதிப்பை பாதிக்கும்.

இதன் காரணமாக இந்தியா ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீது கடுப்பாகி இருக்கும்.

ஆக, ஒரே நேரத்தில் உள்நாட்டிலும், அண்டை நாடான இந்தியாவினதும் வெறுப்பிற்கு ஆளாகுவது ஜனாதிபதியின் எதிர்காலத்திற்கு ஆரோக்கியமானதல்ல.

எதுவாயினும் சரத் பொன்சேகாவை எதிரியாக்கிவிட்டமை தொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கொள்ளுகின்ற கவலை உண்மைத் தன்மையானதாக இருந்தால் அவருக்கான விடுதலையை இந்தக் கணமே ஜனாதிபதி வழங்க முடியும்.

ஆகவே, சரத் பொன்சேகாவுக்கு விடுதலை கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது எனத் துணிந்து கூறலாம்.

சரத் பொன்சேகாவுக்கு விடுதலை வழங்குவதன் மூலம் ஐ.நா. சபையும், சர்வதேச சமூகமும் கொடுத்துவரும் அழுத்தத்தை ஒன்றாக நின்று எதிர்க்க முடியும் என்ற அடிப்படையில் ஜனாதிபதியின் நடவடிக்கை இருக்கலாம்.

எதுவாயினும் சரத்பொன்சேகாவை அடைத்தது மகாதவறு என்று உணர்வதற்கு சில காலம் தேவைப்பட்டது போல, அவரை விடுதலை செய்தது மிகப்பெரும் தவறு என உணருகின்ற நிலைமையும் ஏற்படுமோ என்பதுதான் இன்றைய சந்தேகம்.

# வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளுக்கு இலங்கையின் நிலவரம் குறித்து விளக்கம்

## அமைச்சர் யாப்பா தெரிவிப்பு

சனல் 4 உட்பட அரசாங்கத்துக்கு எதிராக சர்வதேச ரீதியில் மேற்கொள்ளப்படும் விஷமப் பிரசாரங்கள் நாட்டின் சுற்றுலாத்துறை முன்னேற்றத்தைப் பாதிக்காது என பொருளாதார அபிவிருத்தி பிரதிமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரித்தார்.

சுற்றுலாத்துறை மேம்பாடு தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு விளக்கும் செய்தியாளர் மாநாடொன்று நேற்று முன்தினம் தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் இது தொடர்பில் மேலும் தெரிவித்த பிரதியமைச்சர்,

உல்லாசப் பிரயாணிகள் சர்வதேச ரீதியில் இலங்கையைப் பற்றி கேள்விப்படும் விடயங்களை நிவர்த்திக்கும் வகையில் இங்குள்ள உண்மையான நிலவரங்கள் அவர்களுக்குத் தெளிவுபடுத்தப்பட்டு வருகின்றன.

கடந்த வருடத்தில் மாத்திரம் சுற்றுலாத் துறை வருமானமாக 50 கோடி ரூபாவை ஈட்ட முடிந்துள்ளது. பெருமளவு பணத்தை செலவு செய்யும் உல்லாசப் பிரயாணிகளை இலங்கைக்கு அழைக்கவும் அவர்களுக்கான மேலதிக வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

எதிர்வரும் 2016 ஆம் ஆண்டிற்குள் 25 இலட்சம் சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு அழைத்துவரும் இலக்கில் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு இலங்கைக்கு வருபவர்களுக்கென 45 ஆயிரம் ஹோட்டல் அறைகள் தேவைப்படுகின்றன.

அதனை நிவர்த்திக்கும் வகையில் பல 5 நட்சத்திர ஹோட்டல்கள் நாடளாவிய ரீதியில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

இவற்றில் கிழக்கின் பாசிக்குடாவில் ஆயிரம் அறைகள் கொண்ட பத்து ஹோட்டல்கள் நிர்மாணிக்கப்படுவதுடன் குச்சவெளி மற்றும் தெற்கின் பல பிரதேசங்களிலும் பாரிய ஹோட்டல்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

தற்போது நாட்டிலுள்ள ஹோட்டல்களில் 22 ஆயிரத்து 735 அறைகளே உள்ளன.

மேலும் 22500 அறைகளை வழங்கும் வகையில் ஹோட்டல்கள் நிர்மாணிக்கப்படவுள்ளன எனவும் பிரதியமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோட்டை ஸ்ரீ முனீஸ்வரன் ஆலய மணவாளக் கோல அலங்கார உற்சவம் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 25 நாட்கள் நடைபெறவுள்ளது.

இதில் இறுதிநாளான 26 ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு வசந்த மண்டப பூசையை தொடர்ந்து இரதபவனியும் நடைபெறும். (ஸ்ரீ)

# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## கோயிலில் பிரகார மதிற் சுவர் ஏன்?

கோயில் பிரகார மதிற் சுவர் சுவாமியைக் காக்கும் வெறும் கட்டடமாக மட்டும் நிற்பதில்லை. அது மனிதனுக்குள் இருக்கும் ஆன்மாவை உடல் எனும் சுவரினால் போர்த்தி பாதுகாக்கும் பெரும் தத்துவத்தை உணர்த்துகிறது.

பிரகாரச் சுவர் மத்தியிலுள்ள இறைவனை சுற்றி வந்து அடைவது போல மனிதன் தன்னைச் சுயகட்டுப்பாடிற்குக் கொண்டுவர வேண்டும் என்பதையே இத்தத்துவம் உணர்த்துகிறது. சில கோயில்களில் ஒரு பிரகாரமும் சில கோயில்களில் மூன்று மற்றும் ஐந்து பிரகாரங்களும் இருக்கும்.

# வீரர்களுக்கு போட்டி இலக்கங்கள் வழங்கல்

வலிகாமம் கல்வி வலயத்திலிருந்து மாகாணமட்ட மெய்வல்லுநர் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்ட வீரர்களுக்கான போட்டி இலக்கங்கள் இன்று நண்பகல் 12 மணிக்கு வலிகாமம் கல்விவலயத்திலுள்ள கேட்போர் கூடத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது.

அத்துடன் போட்டி தொடர்பான விடயங்களும் கலந்துரையாடப் படவுள்ளதால் பொறுப்பாசிரியர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு வலிகாம வலயக்கல்விப்பணிப்பாளர் ஆ. இராஜேந்திரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# வெள்ளி நற்சிந்தனை

25

## செவ்வியல் தமிழில் சீர்மியம்

உலக வாழ்க்கையில் இறை சிந்தனை ஏற்படும் போது அது வழிபாடு என்னும் செயற்பாட்டுடன் மட்டும் நின்றுவிடாது அதற்கும் மேலாக எப்பொழுதும் இறைவனைப் பற்றியே எண்ணும் நிலைக்கு வரும் போது அதுவே ஒரு வியப்புக்குரிய அனுபவமாகிவிடும். எம்மைப்பிறர் ஆற்றுப்படுத்தாமலே நாமே இறைசிந்தனை வயப்பட இறைவனே அருள் புரிகின்றான். விடுதலறியா விருப்புடன் இறைவனைப் பற்றியே எண்ணி வாழும் வாழ்க்கை எல்லோருக்கும் கைகூடுவதன்று. அவன் அருளாலே தான் அவன் தாள் வணங்க முடியும் என்பது மணிவாசகரது அனுபவம் உலக இன்பங்களிலே திளைத்திருக்கும் வேளையிலே திடீரென இறைவன் பற்றிய எண்ணத்துள் ஆழ்ந்து போகும் நிலையே ஆட்கொள்ளப்படுதல் ஆகும்.

'இந்த அற்புதமான அனுபவம் மணிவாசகருக்கு கிட்டியது. அந்த அனுபவத்தை அவர் வாய்மொழிப் பாடலாக நாம் இன்று தரிசிக்கிறோம். செந்தமிழ்ச் சொற்களால் அவர் தன்னுடைய நிலையைக் காட்சிப்படுத்திக் காட்டும் போது அவருடைய உணர்வு எம்மையும் தொற்றிக்கொள்கிறது. சிந்தனை முழுவதையும் இறைவன் பாற்செலுத்தும் அற்புதமான உணர்வு நிலை நாய் போன்ற கீழ்மை நிலையுடைய தனக்கு எப்படி எற்பட்டது என்பதை மணிவாசகர் எடுத்துரைக்கும் பாங்கு சிறப்பானது.

யாவராலும் விரும்பப்படும் அமுதப் பெருங்கடலே அருள்மலையே என இறைவனை அழைக்கும் மணிவாசகர் இறைவனுடைய திருக்கோலத்தைச் சொற்களால் வரைந்து காட்டுகிறார்.

" செந்தாமரைக் காடு அனைய மேனித் தனிச்சுடரே"

காடுபோல நிறைய நெருக்கமாகப் பூத்திருக்கும் செந்தாமரை மலர்களின் நிறங்கொண்ட தனிச்சுடரே! என அவர் காட்டும் கோலம் எல்லோரதும் உள்ளத்திலும் நிறைந்திருக்கும் இருளை நீக்கிப் புதியதொரு ஒளியைப் பாய்ச்சுகின்றது. இத்திருக்கோலம் அவரை முற்றாக மாற்றிவிடுகிறது. தனது இருகண்களையும் இறைவன் திருவடி மலர்களைக் காண்பதற்கே உரிய தாக்கிவிடுகிறார். முழு வழிபாட்டு நடைமுறைகளையும் அத் திருவடி மலர்களுக்கே அமையப் செய்துவிடுகிறார். அதுமட்டுமன்றி தன்னுடைய மொழியையும் இறைவன் புகழ்பற்றிப் பேசவே பயன்படுத்துகிறார். மணியான வாசகங்களைப்பாடுகிறார். ஐம்புலன்களும் நிறைய இறைவனை மட்டுமே எண்ணி வாழும் ஒரு பக்திவாழ்க்கையை மேற்கொள்கிறார்.


இறைவன் வலிய எழுந்தருளி வந்து மணிவாசகரை ஆட்கொண்டார். அதனால் வாதவூரர் மணிவாசகர் ஆக மாறினார். தன்னுள்ளே இறைவன் ஏற்படுத்திய மாற்றத்தை வார்த்தைகளால் விளக்க முடியாமல் தத்தளிக்கிறார். நமது வாழ்க்கையில் இத்தகைய அனுபவம் ஏற்பட வாய்ப்புண்டு. சிலரைக் கண்டவுடனே எம்முள்ளத்தில் ஏற்படும் மாற்றம் எமது செயற்பாடுகளிலும் ஓர் ஒழுங்கை ஏற்படுத்தி விடுவதுண்டு. மணி

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

வாசகர் மனமாற்றத்திற்குக் காரணம் குருவடிவாய் வந்த இறைவனே. நமது ஆசிரியர் எம்மிலே இத்தகைய ஒரு மாற்றத்தை ஏற்படுத்தவல்லவர். இதனை நாம் மனங்கொள்ள மாணிவாசகர் பாடல் வழிகாட்டுகிறது.

சிந்தனைநின் நனக்காக்கி நாயினேன்றன்
கண்ணிணை நின் றிருப்பாதப் போதுக் காக்கி
"வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கியைம் புலன்களார
வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத்
தந்தனை செந்தாமரைக் காடனைய மேனித்
தனிச்சுடரே யிரண்டு மிலித் தனியனேற்கே."

**06) கீழ்வரும் வினாக்களுக்கான சரியான விடையினைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

1) 

இது எத்தனை மில்லிமீற்றர் ஆகும்?

(.................)

2) 

இந்த நிறையில் எத்தனை 100 கிராம்கள் உள்ளன?


(.................)

3) 100 m + 100 m + 50 m (இதனைக் கூட்டி எழுதுக)

(.................)

4) 400 கிராமிலிருந்து 150 கிராமைக் கழித்து எழுதுக.


(.................)


5) 
இதில் ஒரு லீற்றர் பால் உள்ளது. இதனை இருவர் சமமாகப் பகிர்ந்து எடுத்தால் ஒருவருக்கு எவ்வளவு பால் கிடைக்கும்?

(.................)

(10 புள்ளிகள்)

**07) கீழே தரப்பட்டுள்ள படங்களின் பெயர்களை இனங்கண்டு எழுதுக.**



1) ............... 2) ................ 3) .............. 4) ............

(04 புள்ளிகள்)

**08) கீழுள்ள ஒவ்வொரு படங்களிலும் அம்புக்குறியினால் காட்டப்பட்டுள்ள பொருளின் அல்லது உபகரணத்தின் பெயரையும் அவற்றின் ஒவ்வொரு பயன்பாடுகளையும் பொருத்தமான இடத்தில் எழுதுக.**

1) 


1) ..........................
2) ..........................

2) 

1) ..........................
2) ..........................

3) 

1) ..........................
2) ..........................

4) 

1) ..........................
2) ..........................

(08 புள்ளிகள்)

**09) கீழே தரப்பட்டுள்ள கணக்குகளை செய்து காட்டுக.**

1) 4 9 6 + 3 4 7

2) 6 8 9 + 5 4 5

3) 7 9 5 + 3 8 8

(06 புள்ளிகள்)

**10) பின்வரும் கழித்தல் பிரசினங்களையும் பெருக்கல் பிரசினங்களையும் செய்து காட்டுக.**

1) 8 6 8 - 6 4 8




2) 9 4 6 - 5 3 5

3) 3 6 x 4

4) 2 4 5 x 5

(08 புள்ளிகள்)

**11) கீழே சில செடிகளின் படங்கள் தரப்பட்டுள்ளன. அவை எந்தச் செடிகளாக இருக்கும் எனக் கண்டறிந்து ஒவ்வொரு செடிகளின் கீழும் எழுதுக.**

1) .................. 2) .................. 3) ..................

(03 புள்ளிகள்)

**12) கீழ்வரும் வினாக்களுக்கான சரியான விடைகளைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

1) 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்பதில், 'அன்னையும் பிதாவும்' என்பதன் ஒத்த கருத்துச் சொற்களை எழுதுக.

(..........................)

2) ஆக்கும் / முயற்சி / திருவினை
மேலுள்ள சொற்களை வாக்கியமாக எழுதும்போது ஒரு பழமொழி கிடைக்கும். அதனை எழுதுக.

..........................................................

3) புத்தகம் என்னும் சொல்லை வைத்து ஒரு வாக்கியம் எழுதுக.

..........................................................

4) அடிசில், சாப்பாடு, உண்டி, ஆகாரம் ஆகிய பொருளைக் குறிக்கும் வேறு ஒரு சொல்லை எழுதுக.

(..........................)

5) 'தொலைக்காட்சிப் பெட்டி' எனும் பெயர்ச்சொல்லில் மூன்று தனிச் சொற்கள் காணப்படுகின்றன. அம்மூன்று சொற்களையும் தனித்தனியே எழுதுக.

1) ..........................................
2) ..........................................
3) ..........................................

(05 புள்ளிகள்)

**13) கூட்டினுள் உள்ள சிங்களச் சொற்களைக் கொண்டு கீழ்வரும் உடற்பகுதிகளின் பெயர்களை எழுதுக.**

අත
නාසය
ඇස




1) ..........................




2)...................... 3) ......................

(06 புள்ளிகள்)


**14) பின்வரும் விளையாட்டு உபகரணங்களுக்குரிய விளையாட்டுகளின் பெயர்களை எழுதுக.**




1) .......................... 2) ..........................

(02 புள்ளிகள்)

**15) எதிரேயுள்ள படத்தை அவதானித்து, அதில் நடைபெறுகின்ற நிகழ்வை விபரித்து, பொருத்தமான ஆறு வசனங்கள் எழுதுக. (ஒவ்வொன்றும் 5 சொற்களுக்கு குறையாத எழுவாய், பயனிலை திருத்தமாக இருத்தல் வேண்டும்)**



1) ..........................................
2) ..........................................
3) ..........................................
4) ..........................................
5) ..........................................
6) ..........................................

(12 புள்ளிகள்)

# உதைபந்தாட்டப் போட்டியில் யாழ்.பல்கலை அணி சம்பியன்

(யாழ்ப்பாணம்)

இலங்கை பல்கலைக்கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணி முதலாம் இடத்தைப் பெற்று சம்பியனானது.

இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி யூன் மாதம் 24, 25 மற்றும் 26ஆம் திகதிகளில் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

முதலாவது சுற்றில் யாழ்.பல்கலைக்கழக அணியானது கொழும்பு பல்கலைக்கழகத்துடன் மோதி 2-0 என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது.



தொடர்ந்து கால் இறுதி ஆட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட யாழ்.பல்கலைக்கழக அணியானது தென்கிழக்கு பல்கலைக்கழகத்துடன் மோதி 5-0 என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து அரையிறுதி ஆட்டத்தில் களனி பல்கலைக்கழகத்துடன் மோதி 4-0 என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது.

இறுதி ஆட்டத்தில் 2-1 என்ற அடிப்படையில் வெற்றிபெற்ற யாழ்.பல்கலைக்கழக அணியானது 2011ஆம் ஆண்டிற்கான இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்ட சம்பியனை தனதாக்கிக் கொண்டது.

மேற்படி போட்டிகளில் யாழ்.பல்கலைக்கழக அணியின் வீரர் ஜீவகுமார் 6 கோல்களையும், ஞானரூபன் 4 கோல்களையும், பிரசன்னா 2 கோல்களையும், ஜபாகர் ஒரு கோலினையும் போட்டு யாழ்.பல்கலைக்கழக அணி போட்டிகளில் வெற்றிபெறுவதற்கு வழிகோலினர்.


மேற்படி சுற்றுப்போட்டியில் கிழக்குப் பல்கலைக்கழகத்துடனான இறுதி ஆட்டத்தில் ஆரம்பம் முதல் இறுதி வரை இரு அணிகளும் விறுவிறுப்பாக விளையாடின. போட்டி ஆரம்பித்து 5 நிமிடத்தில் யாழ்.பல்கலைக்கழக அணிவீரர் ஞானரூபன் முதலாவது கோலினைப் போட்டார்.

இதனைத் தொடர்ந்து கிழக்குப் பல்கலைக் கழகத்தினால் (Free-hit) சுயாதீன உதை மூலம் ஒரு கோல் போடப்பட்டு 1-1 என்ற நிலையில் ஆட்டம் விறுவிறுப்பாக நடைபெற்றது.

போட்டியின் இறுதிக்கட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக அணி வீரர் ஜீவகுமார் ஒரு கோலினைப் போட்டு யாழ்.பல்கலைக்கழக வெற்றிக்கு வழிவகுத்தார்.

பயிற்றுவிப்பாளர் எம்.இளம்பிறையன் மற்றும் விரிவுரையாளர் எஸ்.சபானந்த் ஆகியோர் இவ் வெற்றியைப்பெற வழியமைத்துக்கொடுத்தனர். அணியின் தலைவராக ஜி.பிரசன்னா செயற்பட்டார்.

# பற்றீசியன், காமாட்சி அணிகள் மோதல் நிதர்ஸன், சுகிர்தன் இணைப்பாட்ட சாதனை



நிதர்ஸன்



சுகிர்தன்

(யாழ்ப்பாணம்)

வீ.டி.ஜெயரட்ணசிங்கம் வெற்றிக்கிண்ணத்திற்காக யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் 9ஆவது ஆண்டாக நடத்தும் ஐம்பது (50) பந்து பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்ட சுற்றுப்போட்டியின் 3வது கால்இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் பற்றீசியன்ஸ் அணிக்கும் சிறி காமாட்சி அணிக்கும் இடையில் நடைபெற்ற போது பற்றீசியன்ஸ் அணி சிறிகாமாட்சி அணியை 217 ஓட்டங்களால் வெற்றி பெற்று அரை இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற பற்றீசியன்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடிய போது 47 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 350 ஓட்டங்களைப் பெற்றது.

பி.பத்மமுரளி 65 (தொடரின் 65வது அரைச்சதம்), கிளின்ரன் 78 (தொடரின் 66வது அரைச்சதம்), நிதர்சன் 77 (தொடரின் 67வது அரைச்சதம்),சுகிர்தன் ஆட்டமிழக்காது 32 ஓட்டங்களை பெற்றனர்.


நிதர்சன், சுகிர்தன் 10வது விக்கெட் இணைப்பாட்டமாக 106 ஓட்டங்களை பெற்று புதிய சாதனை ஒன்றை நிலைநாட்டினர். (2006ம் ஆண்டு எம்.துஜீபன் வி.நிதர்ஸன் ஆகியோரது இணைப்பாட்டமாக 64 ஓட்டங்களே இதுவரை சாதனையாக இருந்தது குறிப்பிடத்தக்கது. நிரூஜன் 5 விக்கெட்டுக்களையும் சுஜன் 2விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

356 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய சிறிகாமாட்சி அணி 26.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 133 ஓட்டங்களை பெற்றனர். நிரோஸன் 51 (தொடரின் 68வது அரைச்சதம்) நிரூஸன் 24 சாரூஸன் 24 ஓட்டங்களை பெற்றனர்.

பத்மமுரளி, சஜீன்ரன், நோபேட், அலன்ரின் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இப்போட்டியில் வெற்றி பெற்ற பற்றீசியன்ஸ் அணியாழ்.பல்கலைக்கழக அணிக்கு எதிராக அரை இறுதிப் போட்டியில் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விம்பிள்டன் டென்னிஸ் : ரோஜர் பெடரர் அதிர்ச்சித் தோல்வி

# அரையிறுதியில் நடால்-முர்ரே ; சானியா ஜோடி அபாரம்



பெடரர்

(லண்டன்)

விம்பிள்டன் டென்னிசில் 6 முறை சம்பியனான சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் அதிர்ச்சித் தோல்வியைத் தழுவினார்.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் டென்னிஸ் போட்டி லண்டனில் நடந்து வருகிறது.

இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று முன்தினம் நடந்த காலிறுதி ஆட்டம் ஒன்றில், 6 முறை சம்பியனான சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரரும்,12-ம் நிலை வீரர் பிரான்சின் வில்பிரிட் சோங்காவும் பலப் பரீட்சை நடத்தினர்.

இதில் முதல் 2 செட்களை கைப்பற்றிய பெடரர், அடுத்து மூன்று செட்களையும் சோங்கா வசம் பறிகொடுத்தார்.

மூன்று மணி 8 நிமிடங்கள் நடந்த பரபரப்பான ஆட்டத்தின் முடிபில் 3-6,6-7(3-7),6-4,6-4, 6-4 என்ற செட் கணக்கில் பெடரரை தோற்கடித்து அரையிறுதிக்கு முன்னேறினார் சோங்கா.

26 வயதான சோங்கா விம்பிள்டனில் அரையிறுதிச் சுற்றை எட்டுவது இதுவே முதல்முறையாகும். அதேசமயம் 29 வயதான பெடரர் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக காலிறுதியுடன் வெளியேற்றப்பட்டிருக்கிறார்.

வெற்றிக்குப் பிறகு சோங்கா கூறுகையில், இன்று எனக்கு ஆச்சரியமான நாள். நம்ப முடியாத அளவிற்கு நான் விளையாடியிருக்கிறேன். உலகின் சிறந்த வீரரான பெடரரை அவருக்குப் பிடித்தமான புற்தரை ஆடுகளத்தில் தோற்கடித்தது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது என்றார்.


ஆண்கள் ஒற்றையர் காலிறுதி ஆட்டம் ஒன்று நேற்று முன்தினம் நடந்தது.

உலகின் முதற்தர வீரரும் நடப்புச் சம்பியனுமான ரபேல் நடால் (ஸ்பெயின்) காலிறுதியில் 10ஆம் நிலை வீரரான மார்டி பிஷ்சை எதிர்கொண்டார்.

இதில் நடால் 6-3, 6-3, 5-7, 6-4 என்ற செட் கணக்கில் வென்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றார். நடால் அரையிறுதியில் இங்கிலாந்து வீரர் அன்டி முர்ரேயை சந்திக்கிறார். நான்காம் நிலை வீரரான அவர் காலிறுதியில் ஸ்பெயினைச் சேர்ந்த லோபசை 6-3, 6-4, 6-4 என்ற நேர் செட் கணக்கில் வென்றார்.

முர்ரே தொடர்ந்து மூன்றாவது முறையாக அரையிறுதியில் நுழைந்துள்ளார். இதேபோல உலகின் இரண்டாம் நிலை வீரரான நோவக் ஜோகோவிக் (சேர்பியா) முன்னேறினார்.

அவர் 6-2, 3-6, 6-3, 7-5 என்ற செட் கணக்கில் டோமிக்கை (அவுஸ்திரேலியா) தோற்கடித்தார்.



சானியா ஜோடி

ஜோகோவிக் மூன்றாவது முறையாக விம்பிள்டன் அரையிறுதிக்கு நுழைந்துள்ளார்.

ஜோகோவிக் அரையிறுதியில் பன்னிரண்டாம் நிலை வீரரான சோங்காவை (பிரான்ஸ்) எதிர்கொள்கிறார்.

**அரையிறுதியில் சானியா ஜோடி**

பெண்கள் இரட்டையர் காலிறுதியில் இந்தியாவின் சானியா மிர்ஷா, ரஷ்யாவின் எலினா வெஸ்னினா ஜோடி கடுமையாகப் போராடி நுரியா லாகோஸ்டெரா-அரந்ஸா பாரா (ஸ்பெயின்) இணையை 3-6, 6-4, 7-5 என்ற செட்கணக்கில் தோற்கடித்து அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

பெண்கள் ஒற்றையர் அரையிறுதி ஆட்டத்தில் மோதும் வீராங்கனைகள் வருமாறு,

1. விக்டோரியா (பெலாரஸ்) - குவிட்டோவா (செக் குடியரசு)
2. ஷரபோவா (ரஷ்யா) - லிசிகி (ஜேர்மனி).

NIRUTUITION CENTRE
Station Road, Kondavil
வணிகக்கல்வி
2012 – காப்புறுதி
2013 – முயற்சியாண்மை
ஆசிரியர் யசோ
0718474678, 0775086846
(3898)

## நயினை அம்மனுக்கு...

மதியம் 12.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். தொடர்ந்து 16 நாட்கள் நடைபெறும் இத்திருவிழாவில் எதிர்வரும் 14ஆம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் காலை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு விசேட போக்குவரத்துச் சேவைகளும், படகுச் சேவைகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ)

உல்லாசம் உங்கள் கண்முன்னே...
TILKO JAFFNA CITY HOTEL
TILKO hotels
No.70/6, K.K.S Road, Jaffna.
Tel: 021 2225969
web:www.cityhoteljaffna.com
e-mail: info@cityhoteljaffna.com

## இனப்பிரச்சினைக்கான தீர்வை...

இங்கு அமைச்சர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில், இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் காண்பதற்காக நியமிக்கப்படவுள்ள பாராளுமன்றத் தெரிவுக்குழுவை பகிஸ்கரிக்கப்போவதாக சில அரசியல் கட்சிகள் கூறிவருகின்ற போதும் இதற்கான காத்திரமான தீர்வை பாராளுமன்றத் தெரிவுக்குழுவினால்தான் வழங்க முடியும் என அரசாங்கம் நம்புகின்றது.

தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதியாக எக் கட்சியையும் அரசாங்கம் அன்றும் ஏற்கவில்லை, இன்றும் ஏற்கப்போவதில்லை.

தீர்வொன்று தேவையாகவுள்ளது ஐரோப்பிய நாடுகளுக்கல்ல, வெளிநாட்டு அமைப்புக்களுக்குமல்ல, வடக்கு- கிழக்கிலுள்ள எமது மக்களுக்கே தீர்வொன்று தேவைப்படுகின்றது. வடக்கையும் கிழக்கையும் பிரதிநிதித்துவப்படுத்தும் சகல கட்சிகளையும் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் இன்று பாராளுமன்றத்தில் உள்ளனர். தமிழ் மக்களின் தேவைகளை நன்கு அறிந்து வைத்துள்ள அவர்கள் தீர்வொன்றை எட்டுவதற்காக சுதந்திரமாக தமது கருத்தை தெரிவிக்க இப்போது அவகாசம் கிடைத்துள்ளது.

முன்னர் புலிகளின் அச்சுறுத்தலுக்குப் பயந்து சில பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது கருத்துக்களை வெளியிடப் பயந்தனர். ஆனால் இன்று அந்த நிலை முற்றாக மாற்றப்பட்டுள்ளது. நாட்டில் நிலவிய பயங்கரவாதத்தை முற்றாக ஒழித்ததன் மூலம் எமது ஜனாதிபதி அந்த நிலையை மாற்றியமைத்தார். இதன் காரணமாக மக்களின் சிந்தனைகளிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. எனவே தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இன்றைய சூழலில் பாராளுமன்றத் தெரிவுக்குழுவே மிகவும் பொருத்தமானது என்றும் அமைச்சர் கூறினார். (எ)

## ஜனாதிபதி மகிந்த...

மக்களின் பிரச்சினைக்கான தீர்வுகள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு ஏற்கெனவே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை ஊடகங்களும் செய்தியாக வெளியிட்டிருந்தன.

இந்நிலையில் 13-வது திருத்தச் சட்டமூலத்தை நடைமுறைப்படுத்துவது அல்லது இத் திருத்தச் சட்டமூலத்திற்கும் அப்பால் செல்வது குறித்து இந்தியா தமக்கு அழுத்தம் கொடுக்கவில்லை என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ள கருத்து மற்றும் நாடாளுமன்ற தெரிவுக்குழு மற்றும் அரசியல் தீர்வு தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள கருத்துக்கள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கரிசனை கொள்ளப் போவதில்லை.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது தொடர்பில் நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படும் கூற்றுத் தொடர்பிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது தனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியுள்ளது.

எனவே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மேற்படி கூற்றுக்களுக்கு பதிலளிக்கவேண்டிய கடப்பாடோ அல்லது அவசியமோ தமிழ்த் தேசியக் கூட்டமைபுக்குக் கிடையாது.

இலங்கைத் தமிழர் விவகாரம் மற்றும் அரசியல் தீர்வு தொடர்பில் நடைமுறைப்படுத்த வேண்டிய விடயங்கள் மற்றும் கடைப்பிடிக்க வேண்டிய அணுகுமுறைகள் குறித்து இந்தியா இலங்கைக்கு எந்தவித அழுத்தமும் கொடுக்கவில்லை என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ள கருத்துக்கு இந்தியாவே பதிலளிக்கவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். (எ)

## தேவையற்ற...

தினம் நீதிமன்றுக்கு வந்து திரும்பிச் செல்லும்வழியில் ஊடகவியலாளர்களிடம் ஓரிரண்டு வார்த்தைகள் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வடக்கில் வாழும் தமிழர்கள் அனாவசியமான அதிகாரங்களைக் கோராமல் இந்தியாவில் இருக்கும் அதிகாரப் பரவலாக்கல் மாதிரியை முன்னுதாரணமாக கொண்டு அதிகாரங்களை வழங்குமாறு கோராமல் சிங்களவர்களுடன் இணைந்து வாழத் தீர்மானிக்க வேண்டும்.

தென்னிலங்கை சிங்களவர்களும் வடக்கில் வாழும் தமிழர்களுடைய அழகான கலாசார அம்சங்களைப் புரிந்துகொண்டு அவர்களின் தனித்தன்மையைப் புரிந்து கொள்ள வேண்டும்.

அரசாங்கம் வடக்கில் தேவையற்ற பிரச்சினைகளை மீண்டும் உருவாக்கப் பார்க்கிறது. இல்லாத பிரச்சினைகளை மீண்டும் உருவாக்கி அதனை வைத்து அரசியல் செய்வது தான் அரசாங்கத்தின் நோக்கமாகும்.

அதன் காரணமாகத்தான் வடக்கின் அரசியல்வாதிகள் மீது தாக்குதல்களை மேற்கொண்டு அங்கு மீண்டும் பயங்கரவாத சூழலொன்றை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சிக் கின்றது என்றும் அவர் மேலும் குற்றம் சாட்டியுள்ளார். (எ)

## மட்டக்களப்பில் பட்டப்பக...

கொள்ளையை மேற்கொண்டுள்ளது.

வங்கிக்குள் புகுந்த குழுவினர் வங்கிக் காவலாளியின் ஆயுதத்தைப் பறித்து சேதப்படுத்திய பின்னர் அவரையும் தாக்கியதாகவும் அதன் பின் வங்கியை தமது பூரண கட்டுப்பாட்டில் கொண்டுவந்து அங்கு கடமை புரியும் 5 ஊழியர்களையும் அறை ஒன்றுக்குள் கொண்டுசென்று அடைத்துவிட்டுகொள்ளைநடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது வங்கியில் இரண்டு பாதுகாப்புப் பெட்டியில் இருந்த பெருமளவு தங்கநகைகளையும் கொள்ளையடித்ததுடன் இன்னுமொரு பாதுகாப்புப் பெட்டியிலிருந்த 35 இலட்சம் ரூபாய் பணத்தினையும் கொள்ளையிட்டுள்ளனர்.

அத்துடன் வாடிக்கையாளர் பகுதியில் வாடிக்கையாளர்களிடமிருந்து நேற்றுக் காலை முதல் பெறப்பட்ட பணம் இரண்டு இலட்சம் ரூபாயும் கொள்ளையிடப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் இடம்பெற்றுள்ள சந்தர்ப்பத்தில் குறித்த வங்கியின் முகாமையாளர் கடந்த மூன்று தினங்களாக சுகவீன விடுமுறையில் இருந்ததாகவும் பொலிஸாரின் தகவல்களிலிருந்து தெரியவருகின்றது.

இச் சம்பவம் தொடர்பில் தமக்குப் பிற்பகல் 2.25 மணியளவிலேயே தகவல் கிடைத்ததாகவும் சம்பவத்தின்போது வங்கிக்குச் சென்றிருந்த பொதுமக்களே தமக்கு தகவல் வழங்கியதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் மிக நீண்ட நாட்களுக்குப் பின்னர் இடம்பெற்ற பாரிய கொள்ளைச்சம்பவம் இதுவாகும்.

இச் சம்பவத்தை அடுத்து குறித்த பகுதிக்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள உயர் பாதுகாப்பு அதிகாரிகள் அனைவரும் விரைந்து சென்றதுடன் அப்பகுதிக்கு மேலதிக பொலிஸாரும் வரவழைக்கப்பட்டு அப்பகுதி தேடுதலுக்குள்ளாக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் விஜயகுணவர்த்தன, மட்டக்களப்பு பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் ரவீந்திர கரவிட்கே, மட்டக்களப்பு மாவட்ட 234-வது படையணி கட்டளைத்தளபதி பிரிகேடியர் பூரக செனவிரத்ன மற்றும் மாவட்டத்தின் ஏனைய உதவிப்பொலிஸ்அத்தியட்சகர், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், படை அதிகாரிகள் ஆகியோர் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

இராணுவப் புலனாய்வு மற்றும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் வரவழைக்கப்பட்டு தீவிர விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். நகரை அண்டிய புறநகர் பகுதியில் ஆயுதம் தரித்த நபர்களினால் பகல் வேளையில் மேற்கொள்ளப்பட்ட இக் கொள்ளைச் சம்பவமானது மட்டக்களப்பு மாவட்டத்தில் மக்கள் மத்தியில் பெரும் பீதியினை ஏற்படுத்தியுள்ளது. (எ)

## தமிழ் அரசியல் கைதி...

யுத்தம் முடிவடைந்து இரண்டு வருடங்கள் கடந்துள்ளன. இந்தநிலையிலும் அரசாங்கம் தமிழ், சிங்களம் மற்றும் முஸ்லிம் மக்களின் ஒற்றுமைக்கு இடமளிக்காது உள்ளது.

ஊடகவியலாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எவருக்கும் சுதந்திரமாக கதைக்க முடியாதநிலைமை காணப்படுகிறது. இந்த நாட்டில் சுதந்திரம் இல்லை. ஜனநாயகம் இல்லை. உரிமை மீறப்படுகின்றது.

தமிழ் அரசியல் கைதிகளின் பெற்றோர்கள் தமது உரிமைக்காக புறக்கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக நேற்று கூடினர். உரிமை, ஜனநாயகம், சுதந்திரம், நல்லாட்சி ஆகியவற்றுக்காக மூவின மக்களும் வீதிக்கு இறங்குவார்கள் என்றார்.

மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன் கூறுகையில்,

தமிழ் இளைஞர், யுவதிகள் 10 முதல் 15 வருடங்களாக அரசியல் கைதிகளாக சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகள் 400 முதல் 500 தடவைகள் நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக கொண்டு செல்லப்பட்டனர். இருப்பினும் அவர்களுக்கான நீதி இன்னமும் கிடைக்கவில்லை.

சிறைச்சாலைகளில் கைதிகள் தாக்கப்படுவதுடன் அவர்களின் அடிப்படை உரிமைகளும் மறுக்கப்படுகின்றன. இவர்களுக்கு நீதி பெற்றுக்கொடுக்கவே அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான இயக்கம் உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கு மக்கள் விடுதலை முன்னணி ஆதரவாக இருக்கும் என்றார். (எ)

அரிய சந்தர்ப்பம்
நீங்கள் அடகு வைத்த நகைகளை உங்களால் மீட்க முடியாத சந்தர்ப்பத்தில் அதை நாங்கள் எங்கள் பணம் மூலம் மீட்டுத் திரும்ப அடகுவைப்பதற்கு உதவுவோம். அல்லது பவுணின் அதிக பெறுமதிக்கு வாங்குவோம். (இச் சேவைக்கட்டணமாக 2% அறவிடப்படும்) அநியாயமாக உங்கள் உடைமைகளை இழக்காமல் இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்துவதற்கு,
உடனே அழையுங்கள்
0774050936
(5457)

A/L 2012, 2013 பொருளியல்
புதிய தேர்ச்சிகள் ஆரம்பம்
நாளை 02.07.2011 சனிக்கிழமை
பொருளியல் K. பிரதீபன் (B.B.A)
NEW SCIENCE HALL கன்னாதிட்டி- யாழ்நகர்
COLLEGE OF ACCOUNTING சாவகச்சேரி
AAC அரியாலை
IBS சுண்டுக்குளி
*நேர அட்டவணை அலுவலகத்தில்
*A/L 2012 Paper Class ஆரம்பம்

மாபெரும் மலிவு விற்பனை
அவுஸ்ரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கணினிகள் மலிவு விலையில், உத்தரவாதத்துடன்
INTEL PENTIUM 4- 3.0 GHZ,
512 RAM, 80GB HDD,
DVD ROM, KEYBOARD, MOUSE
10,750/=மட்டுமே
LCD MONITOR கள் ரூபா.4,900/= ல் இருந்து
CRT MONITOR கள் ரூபா.2,900/= ல் இருந்து
PC MATE SYSTEMS
Computer Sales & Repair
174/16 Temple Road, Nallur
Phone: 077 832 0896, 077 135 0476, 077 968 9043

D.C.M
A/L 2012, 2013
வர்த்தகப் பிரிவு
பொருளியல் கணக்கீடு வணிகக் கல்வி
S.வரதராஜன் B.A. (HONS)
A.P.பகீரதன் B.B.A. (FM.SPL)
V.முரளி B.B.A. (FM.SPL)
D.C.M D.C.M D.C.M
1ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
ஆரம்பம்: 02.07.2011 (சனிக்கிழமை) நாளை 12.00 மணி

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3.2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.07.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.